Vol. 7. No 41. 15th November 1936 Price 2 As. Regd. No. 2514

ஸ்வதேசமித்திரன்

வாரப்பதிப்பு

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY

சுதேசமித்திரன்

"என்ன சும்மா பார்க்கிறீர்கள்!"

வருட சந்தா ரூபா 6. சிலோனுக்குத் தனிப்பிரதி 14 சதம். மலாய நாடுகளுக்கு தனிப்பிரதி 15 காசு வெளிநாடுகளுக்கு ரூ. 10



ஆரோக்கியத்தின்
முக்கிய ஆதாரம்

வுட்வர்ட்ஸ்
கிரைப்வாடர்

இது குழந்தைகளை
நன்கு பாதுகாக்கின்றது

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON, ENGLAND



கன்னியும் கனியும்

நோயற்றவாழ்வு

அதிஸாரமும் அதன் பரிஹார முறைகளும்

(வைத்தியரத்ன பண்டித எம் துரைஸ்வாமி ஐயங்கார்,
ஆயுர்வேதபூஷணம் ஆயுர்வேதாசார்ய அவர்கள் எழுதியது.)

—:[o]:—

[குடலில் சேரும் ஜீர்ணமாகாத பதார்த்தங்களும், மலினமான மற்றப் பொருட்களும் தினந்தோறும் குறிப்பிட்ட காலத்தில் ஒழுங்காக வெளியாய்விடவேண்டியது தேஹாரோக்கியத்திற்கு இன்றியமையாததாம். ஆனால் அவ்வித மலவஸ்துக்கள் வெளிவரும் காலமும், அவற்றின் அளவும், அவற்றின் கடினத்-திரவ நிலைமைகளும் ஓர் ஒழுங்கான நிலைமையில் இருந்துவந்தாலன்றி குடலின் ஆரோக்கிய ஸ்திதியும் ஒழுங்காக இருந்துவர இயலாது. அவ்வொழுங்கீனம் ஒன்று மலபந்தத்தில் முடியும், அல்லது அதற்கு எதிரிடையான அதிஸாரத்திலாவது பரிணமிக்கும். இவற்றுள் முந்திய நிலைமையைப்பற்றி முன்பு இரண்டொரு கட்டுரைகள் இப்பகுதியில் வெளிவந்திருக்கின்றன. இப்பொழுது பிந்திய நிலைமையான அதிஸாரத்தைப்பற்றி விவரிக்கப்படுகிறது. மீதூண்விரும்பி, மீட்கமுடியாத மாபெரும் குடற்கோளாறுகளை வீணில் வரவழைத்துக்கொள்ளும் மக்கள் இக்காலத்தில் எண்ணிறந்தவராகையால், இக்கட்டுரையைக் கருத்துடன் அத்தகையோர் அனைவரும் படித்துணர்வதாற் பெரும் பயனுண்டு]

காரணங்கள்

அதிசாரத்திற்குக் காரணங்களும் அநேகம்; இலக்ஷணங்களும் அநேகவிதங்களாம். அதிசாரத்திற்கான காரணங்களால் தேகத்திலுள்ள இரஸ-ரக்தாதி திரவ தாதுக்கள் குடலில் தோஷங்களுடன் மிகுதியாகச் சேர்ந்து உணவைப் பக்குவம் செய்யும் ஜாடராக்னியை அவை அவித்துப்போடும்; பிறகு அத் திரவதாதுக்கள் தோஷமிச்ரமாய் குடலிற் சேரும் வாயுவால் கீழ் நோக்கித் தள்ளப்பட்டு, அதிக திரவரூபமாய் மலத்துடன் அடிக்கடியும் ஸ்ரவிக்கின்றன; அவ்விதம் அதியாகத் திரவமலம் ஸ்ரவித்தால் 'அதி ஸாரம்' என்று இவ்வியாதி வழங்கப்படுகிறது "ஸம்சம்யாபாம் தாது ரக்நிம் ப்ரவிஷ்டோ வர்ச்சோமிச்ரோ மாருதேந ப்ரணுந்ந:, வ்ருத்தோதிவாதஸ் ஸரத்யேவ யஸ்மாத் வ்யாதிம் கோரம் தந்த்வதீஸா மாஹு:" என்பது இதன் மிகச்சுருக்கமான பொது லக்ஷணம். இதில் ஆமாதிஸாரம், விஷூசீயதிஸாரம், இரக்தாதிஸாரம், கிரஹணி, ஸங்கிரஹக்கிரஹணி, பிரவாஹிகை என்று பல வேறு பேதங்களுண்டு.

அதிகத் திரவமாகவும், விசேஷமாகப் பித்த நீர் அடங்கியதாகவும் அடிக்கடியும் உண்டாகும் மலப் போக்குதான் இதில் முக்கியமாகப் பார்க்கக் கூடிய குறி. ஸ்தூல-ஸூக்ஷ்மாந்திரங்களின் (பெருங்குடல்-சிறுகுடல்களின்) உட்புறத்தில் எந்தப் பாகமாவது எத்தோஷத்தினாலாவது தாக்கப்பட்டு அழற்சியடைந்தால் அதிஸார நோய் தோன்றக் கூடும். விரேசகமென்கிற பேதிக்கு உபயோகிக்கப்படும் சரக்குகள் கூட அவ்வித அழற்சியைத் தந்து ஒருவித தாத்காலிகமான அதிஸாரத்தை உண்டு பண்ணுபவையே. ஆகவே நாம் தெரிந்து உட்கொள்ளும் பலவித விரேசகச் சரக்குகள் உட்பட, ஜீர்ணமாகக் கூடாத அல்லது தகுந்தவாறு சமைக்கப்படாத உணவுப் பொருட்களும், அவ்விதமான காய்-கறி கிழங்குகளும், கனிந்து பக்குவமாகாத பழவகைகளும், ஊசிப் பதனழிந்த பண்டங்களும் குடலிற் சென்றதும் பலவகையில் அழற்சியை அல்லது வேறு விஷகுணங்களைக் காட்டி அடிக்கடியும் அதிஸாரத்திற்குக் காரணமாகின்றன. திடீரென்று தோன்றிய குளிராலாவது, அவ்வித குளிர்ச்சியுண்டுபண்ணும் தண்ணீர் முதலியதை உடலிற் கொட்டி மூழ்குவதாலாவது தேஹத்திலிருந்து வெளியாகும் வியர்வை நீர் அகஸ்மாத்தாகத் தடுக்கப்படுவதும், குளிர்ந்த பானவகை எதையாவது அதிகமாகச் சுடவைத்து உட்கொள்வதுங்கூட இந்நோய்க்குக் காரணமாகிறது. கோடைகாலத்திலும், சரத்காலத்திலும் மற்றப்பருவங்களைவிட அதிஸார நோய் அதிகமாகப் பலரைப் பெருவாரிபோலப் பிடிப்பது வழக்கம். பூமியிலிருந்து இப்பருவங்களில் மேலெழும் பதனழிந்த பதார்த்தங்கள் ஸம்பந்தமான ஆவியும், அவ்வித பதார்த்தங்களின் நுண்ணிய அம்சங்கள் குடிநீர் முதலியவற்றிற் கலந்து அதன் மூலமாய் மனித தேஹத்தில் அவை சேர்ந்துவிடுவதும். ஆக இவை முதலியவை அவ்வித கோடை அல்லது சரத்காலத்து அதிஸாரத்திற்குக் காரணமாவதாகக் கருதப்படுகிறது. சிலருக்குக் குடலிற் சேரும் கிருமிகளாவது, அல்லது இரைப்பை யக்ருத் என்கிற கல்லீரல் முதலிய அவயவங்கள் வேறு காரணங்களால் வியாதி கொள்வதாவது குடலின் அழற்சிக்கும், அதனால் அதிஸாரத்திற்கும் ஹேதுக்களாகின்றன.

போதுக் குறிகள்

மலம் மிக்க நீர் நீராக வெளியாவதுமல்லாமல், வயிற்றுளைத்தலும், வயிற்றுப்பொருமலும் அடிவயிற்றில் அதிக வேதனையும் இதில் தொடர்ந்து தொந்தரவளிக்கும். அடிக்கடி குமட்டலும், சில ஸமயம் வாந்தியும் உண்டாகும். நாக்கு அரோசகத்தாலும், கைப்பான சுவையாலும், தடித்துக் காளான்பூத்த மஞ்சள் நிற அழுக்காலும் கோளாறடைந்திருக்கும். தேஹமெங்கும் சர்மம் வறண்டு சுருக்கங்கொண்டதாக உணரப்படும். முகம் ஒருவாறு வெளிறிப் பசுமையாக மாறியிருப்பதாகத் தோற்றும். சீக்கிரம் தகுந்த பரிஹாரம் செய்யாவிட்டால் சரீரம் பெரிதும் இளைத்துப் பலஹீனமடையும். இதுவரையில் விவரித்த இலக்ஷணங்கள் அனைத்தும் எல்லாவித அதிஸாரங்களிலும் பொதுவாகத் தோன்றுபவை

விசேஷ பேதங்கள்

ஆமாதிஸாரம்:— குடலில் உணவு ஏற்றபடி ஜீர்ணமாகாமல் பலவாறு ஆமதோஷம் என்னும் விஷம் வாதாதி தாதுக்களை விகாரப்படுத்தி, குடலில் கலக்கத்தையுண்டு பண்ணி, மலத்தைக் குழம்பாகவும் குடலிலுள்ள நிணநீர் முதலியவற்றோடு கலந்ததாகவும் செய்து பலவித நிறத்துடன் பேதியாக வெளிப்படுத்தும்; இதில் வயிற்றில் கடுப்பும், மலத்தில் அதிக துர்நாற்றமும் ஏற்படும். இது வயிற்றுக் கடுப்புடன் கூடியதானாலும் ஒருவித அஜீர்ண பேதியேயாம். வயிற்றுப் பொருமலோடு ஆமதோஷம் தேஹத்தில் அதிகமாகச் சேருவதால், பிணியாளிக்கு உறக்கமும் மயக்கமும் தலைநோவும் தோன்றும்.

விஷூசி:—இது அபாயகரமான வியாதி. இதில் உடலிற் சேர்ந்த விஷமானது முக்கியமாய் வாததோஷத்தையே பலமாகக் கோளாறடையச் செய்து முக்கியமாகக் குடலிலும், உடலிற் பொதுவாகவும் ஊசிகளால் குத்தப்படுவது போன்று கடுமையான வேதனைகளைத் தந்து, வாந்தியையும் பேதியையும் உண்டு பண்ணும். இதில் நீர் நீராக பேதியும் வாந்தியும், தாங்கவியலாத வயிற்று வலியும், கை-கால்களில் இசிவும் தோன்றும்; முகம் முதலில் வெளுத்து, அப்பால் கரு நிறம் பெறும்; மூத்திரம் வெளிவருவது நின்றுவிடும். அமிதமாக வியர்க்கும்; தாவறட்சியும், மயக்கமும் கிரமமாக அதிகப்பட்டு இருதய வேதனையுண்டாய் பிணியாளி சீக்கிரம் உயிர்துறப்பான். விஷூசி என்னும் இது வாந்தி-பேதி என்று ஸாதாரணமாய் வழங்கப்படுகிறது. இதைப்பற்றிய விவரங்களை முன்னொரு கட்டுரையில் (28–4–35) விஸ்தரித்துப்பிரத்யேகமாக எழுதியிருக்கிறேன்.

இரக்தாதிஸாரம்:—பித்த நீர் மிக்க அதிகரித்துப்பேதியாகும் போது, பித்தத்தை அதிகரிக்கச் செய்யும் உணவு முதலியதை மிகுதியாய் உபயோகிக்க, அதனால் குடலில் அழற்சியும் வேக்காடும், கடுமையாய் இரத்தமும் மலத்துடன் கலந்தும் கலவாமல் தனித்தும் வெளி

அராபியக் கலகம் தீர்ந்துபோய் விட்டது. இக்கலகம் நடந்த சுமார் ஆறுமாதகாலமும் ஹைக்கோர்ட் மூடப்பட்டிருந்தது. இப்பொழுது அதைத் திறந்துவைப்பதற்காக ஜட்ஜ் கோப்லண்ட் சென்ற காட்சி.

பாவதுண்டு. இது ஜ்வரத்தையும், முக்கியமாய் ஸந்நிபாத ஜ்வரத்தையும் கிரமமாய் உபத்திரவமாகப் (ஒரு வியாதியைக் காரணமாகக்கொண்டு உண்டாகும் வேறு வியாதி உபத்திரவம் எனப்படும்) பெறும்.

கிரஹணி:—கிரஹணம் என்றால் பிடித்துக் கொள்வது என்று பொருள். ஆமாசயம் என்கிற இரைப் பையில் விழுந்த உணவு அனைத்தும் ஒருவாறு குழம்பாகக் குழைந்து பக்குவமாகும் வரையில், அதை ஸூக்ஷ்மாந்திரம் என்கிற சிறு குடலுக்குள் பாயாதபடி தடுத்துப் பிடித்து ஆமாசயத்திலேயே நிறுத்தும் ஓர் அவயவம் கிரஹணி (ஆங்கிலத்தில் டியோடினம்) என்று கூறப்படுகிறது. அவ்வவயவம் கோளாறடைந்து உண்டாகும் ஒருவித அஜீர்ண பேதிக்கும் 'கிரஹணி' என்று அல்லது "கிரஹணிரோகம்" என்று பெயர். இதில் புஜித்த உணவு ஜீர்ணமாவதில்லை மார்பிலும் தொண்டையிலும் அழற்சியுண்டாகும். மலத்தில் உணவு ஜீர்ணமாகாமலே கலந்து வெளியாகும். உடல் வறண்டு, இருதயத்தில் வேதனையுண்டாய், தேஹம் இளைத்துப் பிணியாளி மிக்க பலஹீனமடைவான். உணவு வயிற்றில் விழுந்ததும் பொருமலும் வேதனையும் அதிகரித்து, பேதியானதும் சிறிது நேரம் வேதனைகள் தணியும். தமிழில் ஸாதாரணமாய் இதைக் கிராணி என்பார்கள்.

ஸங்கிரஹக் கிரஹணி:—இதுவும் கிரஹணி என்னும் குடலைச் சேர்ந்த ஒருபாகம் கோளாறடைவதாலேயே ஏற்படும் ரோகம். கிரஹணியைப்போல் இது அவ்வளவு பலமான வியாதியல்ல. இந்த அதிஸாரத்தில் குடலில் இரைத்தல் உண்டாகும்; திரவமாகவும் கட்டியுருண்டைகள் கலந்ததாகவும் அதிக பிசுபிசுப்பாகவும் மலம் வெளியாகும்; ஆமம் என்கிற நுரைத்த ஒருவித தோஷமும் மலத்தில் கலந்து வரும்; விலாப் பக்கங்களிலும் இடுப்பிலும் வேதனையுண்டாகும்; தொடர்ச்சியாய் நாள் தோறுமாவது, வாரத்திற்கு இரண்டொரு முறையாவது இந்த அதிஸாரம் தன் தொந்தரவு வேகங்களைக் காட்டும்; முக்கியமாகத் தூங்கும் போது குடலில் பலமான இரைத்தல் ஏற்படும்; இராட்டினத்தில் தண்ணீர் இழுப்பதுபோல் மாற்றி இரைத்தலும் பேதியும் இதில் ஏற்படுவதால் இதை "கடிபந்திரரோகம்" என்றும் வழங்குவதுண்டு.

பிரவாஹிகை:—அநாரோக்கியகரமான உணவுகளை வியவஸ்தையின்றி புஜிப்பவனுடைய குடலில், குடலின் சலநகதிக்கு ஆதாரமான வாதம் விருத்தியடைந்து, பலாசமென்கிற ஒருவகை சிலேஷ்மதோஷத்தை அடிக்கடியும் கீழ்நோக்கிக் கடுப்பு வலிகளையும் உண்டு பண்ணியவாறு வெளியில் தள்ளும். இதில் முதலில் சிறிது இரத்தங்கலந்தமலம் வெளிப்படும்; அதன்பிறகு நுரைத்த சிலேஷ்ம தோஷம் அல்லது ஆமதோஷம் கலந்த திரவம் பலமான ஆஸனக்கடுப்புடன் ஒழுகும். 'ஸ்ருதே ரக்தே புரீஷே சவாயுநா ஸ்வல்ப மாத்ரகே. ப்ரவாஹிகா பேநயுக்தா தீவ்ர வேதநயாந்விதா" என்றவாறு இவ்வியாதி மிகக்கடும் வேதனையளிப்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். இதை "வயிற்றுக்கடுப்பு" என்றும் 'சீதபேதி" என்றும் ஸாமாந்யமாய் வழங்குவர். இதைப் பற்றி மற்றொருமுறை விஸ்தாரமாய் எழுதுவேன்.

விசேஷ காரண லக்ஷணாதிகள்.

ஒருவன் நீடித்த காலமாய் அதிஸார ரோகத்திற்குள்ளாயிருந்தால், அவனுக்கு முதலில் பொதுவாகக் கூறியுள்ள குறிகளிற் சில சரிகளாவது, குறைந்தது இரண்டொரு குறிகளாவது இருந்து வரும் நாளொன்றுக்கு நீர் நீராக ஓரே தடவை பேதியாகலாம்; அல்லது பல முறை பேதியாகலாம். வயிற்றில் வேதனையும் உப்புஸமும் அத்துடன் ஏற்படலாம். அல்லது நீடித்துள்ள அவ்வித குடற்கோளாறில் அதிஸாரமும் மலபந்தமும் மாறி மாறி பிணியாளியை வருந்தச் செய்யும். முக்கியமாக இத்தகைய அதிஸாரரோகி திடீரென்று மாநஸிக க்ஷோபத்தையோ, சரீர க்ஷோபத்தையோ அடைந்தால், அவ்வித க்ஷோபம் உடனே பேதியைத் தூண்டி விடும். தேஹத்திலுள்ள இரத்த ஸத்துக் குறைந்ததாகவோ தோஷங்கள் நிரம்பியதாகவோ இருந்தாலும் அந்நிலைமை அதிஸாரத்திற்குக் காரணமாகும். ஏனெனில் குடலிற் சென்ற உணவை ஜீர்ணம் செய்வதற்கு அவசியமான பித்த நீர் இரத்தக் குறைவால் அதிக நீர்மயமாகவும், கைப்பான சொற்பஸத்து அடங்கியதாகவும் கசிவதால் உணவு நன்கு ஜீர்ணமாகாமல் அஜீர்ண பேதியாக வெளியாகிறது இதனால்தான் அதிஸாரத்தில் வாய், ஆரோக்கியத்தையும் கைப்பான சுவையையும் பெறுகிறது. "சிலஸமயங்களில் சிலருக்கு இரத்த தோஷத்தினால் குடலின் உட்புறத்து சிலேஷ்மகலை (மியூகஸ் மெம்பிரேன்) என்கிற ஜவ்வில் நெடுகவும் சிறு சிறு கொப்புளங்கள் மாதிரியான விரணங்கள் கிளம்பி, அவற்றிலிருந்து சிலேஷ்மம் போன்ற குழகுழ துர்நீர் அடிக்கடியும் வடிந்து, இரத்தமும் சீழும் கலந்த சீதபேதி ஏற்படும். அஜீர்ணக் கோளாறுக்கு உட்பட்ட இரைப்பையானது அம்மலத்திரவத்தை அதிகமாகப் போகிய அதனால் குடலில் அழற்சி யேற்பட்டு, நீரு

உன்னுடைய தோலைச் சுத்தமாகவும் சுகமாகவும் வைத்துக்கோள்.

ரணங்கள், சொரிகள், மருவுகள், பருவுகள் இல்லாமல் உன் உடம்பின் தோலை சுகமாக வைத்துக் கொள்ள வேண்டுமானால் நீ

குடிகூரா சோப்புக்கட்டியை (Cuticura Soap) தினந்தோறும் உபயோகிக்க வேண்டும். வாசனையுள்ள புண்தடுக்கும் குடிகூரா சோப்புக்கட்டியின் (Cuticura Soap) நுரை தோலைச் சுத்தி செய்து, அழுக்கையும், தூசியையும் நீக்கி தோலை அவலக்ஷணமாக்கும் கஷ்டங்களைப் போக்கடிக்கும். ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் தங்கள் உடம்பைச் சுத்திசெய்வதற்கு மற்ற எதையும் உபயோகிக்கிறதில்லை. குடிகூரா சோப்புக்கட்டியின் (Cuticura Soap) உபயோகம் உடம்பை அழகாக அனேக மணி நேரம் வைத்திருக்கும். ஊக்கு கரப்பான் முதலிய தோல் வியாதிகளிருந்தால் குடிகூரா சோப்புக்கட்டியால் கழுவுமுன், குடிகூரா தைலத்தை (Cuticura Ointment) உபயோகிக்கவும்; ஏனென்றால் அது தோலைத் தேற்றித் தெளிவாக்கும்.

குடிகூரா சோப்புக்கட்டி
CUTICURA SOAP

குடிகூரா சோப்புக்கட்டியை (Cuticura Soap) இன்றைக்கே வாங்கு. எல்லா மருந்துகடைகளிலும், பஜார்களிலும் விற்கப்படும்

அற்புத
சுவாஸ
நிவாரணி

இவ்வற்புத பெப்ஸ் மாத்திரைகள் உங்கள் மார்புப் பிரதேசத்தினுள்ளும், தொண்டையிலும் பிரசித்திபெற்ற பைன் விருக்ஷக் காற்றைப் புகுத்துகிறது. வாயில் போட்டுக் கரைகையில் பெப்ஸ் கிருமிநாச ஆவியை வெளிப்படுத்துகிறது; இது சுவாசாசயத்தினுள் செல்கிறது. இங்ஙனமாக பெப்ஸ் சுவாசாசயத்தைச் சுத்தப்படுத்துகிறது இருமல் ஜலதோஷம், மார்பு நோய் முதலியவற்றை அகற்றுகிறது பெப்ஸ் தொண்டைக்குச் சுகமூட்டி, கபத்தை அறுத்து, மார்புப் பிரதேசத்துக்கு வலுவூட்டுகிறது

ஒவ்வொரு பெப்ஸ் மாத்திரையும் வெள்ளிக்கவசம் பூண்டது. எல்லா மருந்து வியாபாரிகளிடமும் சீல் வைத்த புட்டிகளில் புட்டி 1க்கு ரூ. 1 வீதம் கிடைக்கும்.

பெப்ஸ் கிருமிநாச சுவாச நிவாரண மாத்திரைகளை உட்கொள்க.

பெப்ச் PEPS

ருவமான பேதியும், சிதபேதியும் உண்டாகும்'' என்று டாக்டர் இ. பி. புட் என்பவர் எழுதுகிறார். நீடித்துத் தொக்தாவளிக்கும் அதிஸாரத்திற்குட்பட்ட அனைவருக்கும் இரத்தம் பெரும்பாலும் மிகவும் நீராகவும் பொதுவாக அசுத்தமாகவும் இருப்பது வழக்கம். எல்லா அதிஸார ரோகங்களிலும் கல்லீரல் என்கிற யக்ருத் அநாரோக்கிய நிலைமையைப் பெற்றிருக்கும் இரைப்பை என்கிற ஆமாசயமும் நோய்கொண்டு உணவை யேற்கவும், உற்றவாறு அதைப் பக்குவம் செய்யவும் வகையற்றதாய் விடும். ஆகவே, அதிஸார ரோகங்களில் பொதுவாக பேதியை நிறுத்தக் கூடிய ஸ்தம்பகௌஷதங்களை உபயோகிப்பது முற்றிலும் உசிதமன்று.

சிகித்ஸை

அதிஸாரம் என்பது, பொதுவாகத் தேஹத்தினுள் சேர்ந்துள்ள அசுத்தங்களை அப்புறப்படுத்துவதற்காகப் பிரக்ருதி என்னும் இயற்கையினுடைய பலமான முயற்சியேயாம்; அதாவது பிரக்ருதியின் பிரயத்தனமே தோஷபரிஹாரத்தின் பொருட்டு அதிஸாரம் என்னும் பிணியுருவமாய் பரிணமிப்பதாகக் கற்றறிந்த வைத்தியர்கள் கருதுகிறார்கள். இயற்கையின் இத்தகைய முயற்சியால் தேஹத்திற் சேர்ந்துள்ள தோஷங்கள் அதிஸாரரூபமாய் வெளிப்படுத்தப்பட்டு, ஆரோக்கிய நிலைமை அதன் பிறகு பழையபடி நிலைநிறுத்தப்படுகிறது. ஆகவே, அதிஸாரம் அதிக உபத்திரவங்களுக்கு ஆஸ்பதமாயில்லாதவரையில், பிணியாளியும் பலசாலியாயிருப்பானானால், அது தானே நிற்கும் வரையில் சில நாட்கள் அதன் போக்கைத் தடுக்காது விட்டுவிடுவதுதான் முறை; அன்றியும் ஸ்ரம்ஸநம் என்கிற இலகு விரேசந குணமுள்ள மிருதுவான ஔஷதம் ஏதேனும் (ஸ்ரம்ஸந வடியைப் போன்றதைக்) கொடுத்து, அதிஸாரத்தைத்தாராளமாகப் போகத் தூண்டுவதுகூட நலம். நிலைமை எவ்விதமாயினும், ரோகியின் உடல் வன்மையை ஊக்கத்துடன் காக்க வேறு உபாயம் தேடவேண்டுமேயன்றி, உடனே பேதியைத் தடுத்துப்போட முயலவே கூடாது. சிலருக்குக் குடலில் ஏற்பட்டுள்ள அழற்சி முதலிய கோளாறைத் தணிப்பதற்காகச் சாந்தமான வமநௌஷதம் ஏதேனும் (கநகாஸவம் போன்றதை) உட்கொள்ளக் கொடுத்து இரண்டு மூன்று முறை வாந்தி செய்விப்பது நலம்.

உடலில் வியர்வை முற்றிலும் தடைபட்டுப்போய், அது அதிஸாரத்திற்குக் காரணமாக நேரிட்டிருந்தால், தேஹமெங்கும் அவி நன்றாகப் படியும்படி வேது பிடித்தாவது, சிதாம்சு ரஸம் என்னும் ஔஷதத்தை இரண்டு மூன்று வேளை வெந்நீருடன் உட்கொண்டாவது வியர்வை தாராளமாக வடியச் செய்தால், அதிஸார நோய் வெகு எளிதில் துரிதமாய் நிவ்ருத்தியாகும். "ஆமாதிஸாரம்'' என்கிற அஜீர்ண பேதியில் இரண்டோர் உத்தரணியளவு ஆமணக்கெண்ணையை ஓர் அவுன்ஸ் தேங்காய்ப் பாலில் (தேங்காயைப் பிழிந்தெடுத்த சாற்றில்) சேர்த்து உட்கொண்டு, தாராளமாக மூன்று நான்கு மலப் பிரவ்ருத்தியாகச் செய்தால், பிறகு கடுப்பு-வலி முதலிய கோளாறுகள் நீங்கும். பிறகு வராட பஸ்மமும் (4-முதல் 8-குன்று மணி எடை வீதம்), ஜாதிபலாதி சூர்ணமும் (10-முதல் 20 குன்று மணி யெடை வீதமும்) கலந்து தினத்திற்கு மூன்று அல்லது நான்கு முறை உட்கொண்டு வந்தால், ஆம தோஷம் கிரமமாக நீங்கி, அதிஸாரத்திற்கான காரணங்களும் சமநமடைய; ஆம ஸம்பந்தமான அதிஸார நோயும் நிவ்ருத்தியாகும்.

"விஷூசி ஸம்பந்தமான அதிஸாரத்திற்கு வைத்தியருடைய உதவியின்றி சிகித்ஸை செய்வது எளிதல்ல. ஆகிலும் கனஸாரம், கனஸார வடி என்கிற இரண்டு வித ஔஷதங்களைக் கையிருப்பில் வைத்திருப்பவர் விஷூசி என்கிற வாந்திபேதியினிடமிருந்தும் மற்றுமுள்ள கடுமையான அதிஸார ரோகத்தினிடமிருந்தும் பெரிதும் தப்பிப் பிழைத்து விடலாம். இந்த விஷூசி ஸம்பந்தமாக "வாரப் பதிப்பு மித்திரனில்'' நான் வெளியிட்டுள்ள (28-4-35) நிருபத்தை நமது நேயர்கள் படித்திருக்கலாம். "இரக்தாதிஸாரத்தில்'' பித்தத்தைத் தணித்து, உள்ளே குடலழற்சியைக் குறைப்பதற்கு தேங்காய்ப் பாலில் சிறிது குடூசிஸத்வம் கலந்து இரண்டு மூன்று முறை உட்கொண்டு, அப்பால் ஸர்வஜ்வராரி மாத்திரையையும் குடஜாரிஷ்டத்தையும் ($\frac{1}{2}$ அவுன்ஸ் அரிஷ்டமும் ஒரு ஸர்வ ஜ்வராரியும் சேர்த்து) நாளொன்றுக்கு மூன்று நான்கு முறை உட்கொள்ள வேண்டும், "கிரஹணி'' "ஸங்கிரஹக் கிரஹணி'' ஆகிய இவ்விரண்டிலும் முக்கியமாகச் செய்ய வேண்டிய சிகித்ஸை கிரஹணி என்னும் குடலின் பாகத்துக்கு வலிவைத் தரக்கூடிய ஔஷதப் பிரயோகமேயாம். ஹிங்க்வஷ்ட சூர்ணமும், கிரஹணிகபாட ரஸம் என்னும் மருந்தும் இதில் மிகவும் உபயோகமுள்ளவை. பத்துப் பதினைந்து நெல்லெடை வீதம் சூர்ணத்தையும் நாலைந்து நெல்லெடை வீதம் கபாட ரஸத்தையும் தினத்திற்கு மூன்று முறையாக ஐந்தாறு நாட்கள் உட்கொண்டு, அப்பால், அதிஸாரம் தொடர்ந்தால் அதற்கு கனஸாரம் என்கிற ஔஷதத்தை ஐந்தாறு நாள் உட்கொள்ள இக்கோளாறு பரிஹரிக்கப்படும்.

"பிரவாஹிகை'' என்கிற சீத பேதிக்குமுதலில்சிறிது ஸ்ரம்ஸனம் என்னும் மிருது விரேசநௌஷதம் கொடுத்து, வயிற்றிற் சேர்ந்துள்ள தோஷக்கட்டுகளை அதிஸார மூலமாய் அலம்பித்தள்ள வேண்டும். இதற்கு கால் அல்லது அரை தோலா எடை வெந்தயத்தை ஊறவைத்து, அரைத்து, ஒரு அவுன்ஸ் ஜலம் சேர்த்துப் பிழிந்து வடிக்கட்டி எடுத்து அதில் இரண்டோர் உத்தரணியளவு ஆமணக்கெண்ணெயைக் கலந்து உட்கொள்ளச் செய்யலாம் அல்லது பப்பூல நிர்யாஸம் என்கிற பிசினை (ஒன்று அல்லது இரண்டு தோலா எடை) இரவில் ஒரு அவுன்ஸ் வெந்நீரில் ஊறப் போட்டு, அதைக் காலையில் வடிக்கட்டி எடுத்து, இரண்டு மூன்று மாத்திரைகள் ஸ்ரம்ஸந வடியைக் குழைத்து உட்கொள்ள, வயிற்றிற் சேர்ந்துள்ள சீதக்கட்டு முதலிய தோஷங்கள் மூன்று நான்கு விரேசநங்களில் வெளியாய்விடும். இதன் பிறகு ஒரு

(37-ம் பக்கம் பார்க்க)

இரங்கோன் கலர் சிந்தடிக்கற்கள் மணிமாலைகள்

இந்தியாவில் எல்லா பாகங்களிலும் ஏராளமாய் விரும்பக்கூடிய தற்கால நாகரீகத்துக் கேற்றவாறு கெமிகல் கோல்டினால் புதுயாதிரியாய் தயார் செய்தவை. இதை ஸ்திரீகள் குழந்தைகள் நேர்த்தியாய் அணிந்து கொள்ளலாம்.

25'' நீளமுள்ள கலர் கல்மாலை 1க்கு ரூ. 4-0-0
ஷை பெண்டன்டு போட்டது 1க்கு ,, 5-0-0
ஜாலர் ஒட்டியாணம் பெரியது 1க்கு ,, 6-8-0
நெ. 1. சாதா கெஜ்ஜைஒட்டியாணம் 1க்கு 5-8.
நெ. 2. 1க்கு 3-8-0 நெ. 3. 1-க்கு 2-8-0
கைவளையல்கள் பெரிய சைஸ் ஜதை 1-க்கு 2-8-0. கெமிகல் கோல்ட் ரங்கோன் டைமண்டு 14 கற்கள் உள்ள கம்மல் ஜதை 1க்கு 6-0-0. எல்லாவற்றிற்கும் 5 வருஷம் உத்தரவாதம்.

கே. நாதமுனி & சன்ஸ்,
(ஸ்தாபிதம் 1910.)
168, சைனு பஜார் ரோட் மதராஸ்.

வைத்திய ரத்னம்

பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்

ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்ய அவர்களால் ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டவை.

இரண்டு பிரபல வைத்திய நூல்கள்.

1. சார்ங்கதர ஸம்ஹிதை

வைத்தியர்களுக்கும், எல்லாக் குடும்பங்களுக்கும் வெகுஉபயோகமானது. வைத்திய பரிபாஷைகள், எல்லா ரோகங்களுடையவும் விவரணம், சூர்ண - கஷாய- லேஹ்ய- தைல-கிருத -லேபந- பஸ்ம-விந்தூராதி ஸகல முக்கியமான ஔஷத முறைகள், எல்லா வியாதிகளுக்கும் பலவித சிகித்ஸா முறைகள் ஆக எல்லாம் ஒழுங்காக விவரிக்கப்படுகின்றன. முகவுரை, உரை, விஷய அகராதி முதலியவை விஸ்தாரமானவை. 3 கண்டங்களும் 32 அத்தியாயங்களும் அடங்கியது. 3-ம் பதிப்பு.

உயர்ந்த பைண்டு விலை ரூ. **5-4-0**
2-ம் தரம் பைண்டு ,, ரூ. **4-4-0**

2. இரஸரத்தின ஸமுச்சயம்

என்னும் சித்த ரஸாயன நூல் கந்தகம், தாளகம், இரஸம, பொன், வெள்ளி, அயம் முதலியவற்றை சுத்தி-பஸ்ம - விந்தூராதிகளாகச்செய்யும் நூற்றுக்கணக்கான சிறந்த முறைகளும், புடபாகாதிகளுக்கான கருவிகளின்விவரணங்களும் அடங்கியது. முகவுரை, உரை, விஷயஅகராதி முதலியவை விஸ்தாரமானவை.

உயர்நத பைண்டு விலை ரூ. **4-8-0**
2-ம் தரம் பைண்டு ,, ரூ. **3-8-0**

இரண்டு பிரபல காவ்ய நூல்கள்.

1. காதம்பரி

1300-வருடங்களுக்கு முன் பட்டபாண மஹா கவி ஸம்ஸ்க்ருதத்தில் இயற்றிய அத்புத வசன காவ்யத்தின் மொழி பெயர்ப்பு. கதையின் வரலாறு ஆச்சர்யகரமானது. இந்தியாவின் பிராசீன நாகரீக மேன்மையை விளக்குவது. இரம்யமான எளிய வசன நடை. மஹா மேதாவிகளும் உவந்திடும் வர்ணனைகள் "காதம்பரியைப் படிக்க முயன்றால் இரஸிகருக்கு உணவிலும் மனம் செல்லாது'' என்பது வித்வான்களின் பழமொழி. காதம்பரியின் விமர்சமும் பிரயோஜனமும் முகவுரையாய் அமைக்கப்பட்டுள்ளது.

விலை ரூ. **1-8-0.**

2. மேக ஸந்தேசம்

இந்தஅழகிய சிருங்கார காவ்யம் ஸம்ஸ்க்ருதத்தில் மிகப் பிரஸித்தமானது. காளிதாஸ மஹாகவியினுடையதென்றால் அதைப்பற்றி வேறு விவரணம் தேவையில்லை ஒரு யக்ஷன் குபேர சாபத்தினால் தன் மனைவியை விட்டுப் பிரிந்து, பின்னர் அவன் அவளுக்குத்தூது செல்லும் விஷயம் வெகு அழகானது. வர்ணனைகளும் வசன நடையும் இனியவை. விஸ்தாரமான முகவுரை. விலை அணு 14.

ஒரே தடவையில் எந்த இரண்டு புஸ்தகங்கள் வாங்கினாலும் ரூபா 1-க்கு 2-அணு வீதம் குறைக்கப்படும். தபாற் செலவு முதலியது வேறு.

வைத்திய கலாநிதி ஆபீஸ், வேப்பேரி, மதராஸ்.

"அந்த நமூனாவுக்கும் இதற்கும் ஒரு முக்கியமான வித்தியாஸம். கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். ஒரே ஒரு கேள்வி விடப்பட்டிருக்கிறதே" என்றான் சங்கரன்.

லேடீஸ் கிளப்

"பூரி"

பிலட்டூர் கிராமத்தை வைதிகக் கோட்டையென்று சொல்வது வழக்கம். அந்த ஊரார் துவாபரயுகத்துக்குப் பிந்தைய எதையும் சரியானதென லேசில் ஒப்புக்கொள்ளாமல் வாதாடி வந்தார்கள். மண்ணெண்ணெய் உபயோகத்துக்கு வந்து பல வருஷங்கள்வரை அவர்கள் அதை ஊரில் விற்பதற்குக்கூட இடங்கொடுக்கவில்லை. காபி சாப்பிட்டால் நடுவில் எங்கும் தங்காமல் நேரே ரௌரவாதி நரகத்துக்குப் போய்ச் சேரும்படி நேரும் என்று சொன்னார்கள். தப்பித் தவறி ஆங்கிலம் படித்து ஸெஷன்ஸ் ஜட்ஜ் வேலைக்கு வந்த அந்த ஊர்க்காரர் ஒருவர் குற்றவாளிக்கு மரண தண்டனை விதித்தால் உடனே ஸ்நானஞ் செய்துவிட்டு பிராயச்சித்தஞ் செய்துகொள்வாராம். சென்னைக்கு வந்துபோன அந்த ஊர்ப் பையன் ஒருவன் தெரியாத்தனமாய் கிராப் செய்துகொண்டு விட்டான். அதற்காக அவனது சொந்தத் தகப்பனர்கூட அவனைப் பந்தியில் வைத்துப் போஜனஞ் செய்ய மறுத்துவிட்டார். ஸ்திரீகளைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. முதல் முதல் கோணல் வகிடு எடுத்துக்கொண்ட பெண்ணுக்குப் போதும் போதும் என்று ஆகும்படிச் செய்துவிட்டார்கள்.

ஆனால், அந்தக் காலம் மலையேறிவிட்டது எந்த மலையென்பதைப்பற்றி நிச்சயமாய்க் கூற முடியாது. இப்பொழுது வைத்தியநாத கனபாடிகளின் பிள்ளை இல்லற வாழ்க்கை நடத்த ஸ்ரீமதி மேரி அம்மாளைப் பாணிக்கிரகணஞ் செய்துகொண்டு லண்டனில் வாசஞ் செய்துவருகிறார். தங்கள் செல்வப் புதல்வி வனஜா ஸினிமாவில் ஆக்ட் செய்வதற்காகக் கிடைத்த பணத்தைச் செலவு செய்வதைப்பற்றி ராமசுப்புவுக்கும் அவர் மனைவிக்கும் சச்சரவு நடந்து வருகிறது. கிராம யூனியன் பஞ்சாயத்து கோவிலில கர்ப்பக் கிருகத்தில் மின்சார விளக்குப் போட மறுப்பதை ஆக்ஷேபித்துஊரார் சர்க்காருக்கு மகஜர் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

பிலட்டூர் இவ்வளவு முன்னேற்றமடைந்து விளங்கும் இந்தச் சமயத்தில்தான் ஸ்ரீமதி பத்மாசனி அம்மாள் கல்கத்தாவிலிருந்து வந்து சேர்ந்தாள். அவள் கணவன் அங்கே சர்க்கார் உத்தியோகத்திலிருந்து பென்ஷன் வாங்கிக் கொண்டவர். 'கல்கத்தா தமிழ் லேடீஸ் கிளப்' வருஷாந்திரக் கொண்டாட்டங்கள் சம்பந்தமாகப் பத்திரிகைகளில் வரும் போட்டோக்களை நீங்கள் பார்த்திருக்கக்கூடும். அதில் கண்ணில் மூக்குக் கண்ணாடி தரித்து காலில் பாதரக்ஷை அணிந்து, கழுத்தில் ரோஜாப்பூ மாலை சூடி ஒரு பெரிய நாற்காலி மூச்சுத் திணறிச் சங்கடப்படும் வண்ணம் கம்பீரமாய் நடுவில் அமர்ந்திருக்கும் தேவதைதான் பத்மாஸனி அம்மாள். அவளுக்குப் பிலட்டூருக்கு வருவதற்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவே இல்லை. ஆனால், கணவனை உத்தேசித்து வரும்படியாயிற்று.

ஊரில் ஒரு லேடீஸ் கிளப் ஏற்படுத்த வேண்டுமென்று அந்த அம்மாளுக்கு ரொம்ப ஆசை. அதற்காக அந்த அம்மாள் ஒற்றைக் காலால் நின்றாள் இதை அப்படியே நிஜமென்று எண்ணிக்கொண்டு விடாதீர்கள். ஏனென்றால் நூற்றுத் தொண்ணூற்று மூன்று பவுண்டு கனத்தை ஒற்றைக் காலால் தாங்க முடியாதல்லவா? அதாவது, அந்த அம்மாள் தன்னால் ஆனமட்டும் முயற்சித்துப் பார்த்தாளென்று சொல்கிறேன். சங்கத்தில் அங்கத்தினராக விரும்புபவர்கள் பிரவேசக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. முதல் மூன்று மாதத்துக்குச் சந்தா செலுத்த வேண்டியதில்லை. மாதம் ஒருதரம் இலவசமாக டிபன் சாப்பிடலாம் என்றுகூடச் சொல்லிப் பார்த்தாள். ஒருவரும் கேட்கவில்லை. சங்கத்தில் சேருவதற்காக பத்மாஸனி ஒரு அச்சடித்த நமூனா தயாரித்திருந்தாள். அவர்கள் அதைப் பார்த்துவிட்டு "எங்களுக்கு வீட்டில் எவ்வளவோ வேலையிருக்கிறது. கிளப் எல்லாம் எதற்கு" என்று சொல்லிவிடுவார்கள்.

பத்மாஸனிக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அவளுக்குப் பொழுதுபோவதற்காகவாவது அல்லது அவள் போட்டோ பத்திரிகைகளில் வெளியாவதற்காவது அந்த ஊரில் மாதர் சங்கம் ஏற்படுத்த முடியாமலிருந்தது அவளுக்கு மனோவேதனையையுண்டாக்கியது.

இந்த சமயத்தில் சென்னையிலிருந்து அவள் மருமகன் சங்கரன் வந்திருந்தான். பத்மாசனி அவனிடம் ஸ்திரீகள் சங்கத்தைப்பற்றிய விஷயங்களையெல்லாம் விவரமாகக் கூறினாள். அவள் சங்கம் சம்பந்தமான நமூனாவைப் பார்வையிட்ட பிறகு "நான் வேறு புது நமூனா ஒன்று நல்ல உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டுக்கொண்டு வருகிறேன். என்ன நடக்கிறதென்று பார்க்கலாம்" என்று யோசனை கூறினான்.

புது நமூனா அச்சாகி வந்துவிட்டது. பத்மாஸனி அம்மாள் மறுபடியும் ஒவ்வொரு ஸ்திரீயாகப் போய்ப் பார்த்துச் சங்கத்தில் சேரும்படிக் கேட்டுக்கொண்டு நமூனாவில் கையெழுத்துப் போடும்படிப் புதிய நமூனாவைக் கொடுத்தாள். ஒரு ஸ்திரீயாவது அன்று ஆக்ஷேபமே செய்யவில்லை. எல்லோரும் சங்கத்தில் சேர ஒப்புக்கொண்டு விண்ணப்ப நமூனாவில் கையெழுத்து செய்து கொடுத்துவிட்டனர். இவ்வளவு சுலபமாகக் காரியம் நிறைவேறுமென்று எதிர்பாராத பத்மாஸனி ஆச்சரியமடைந்தாள்.

வீடு திரும்பியதும் சங்கரனிடம் விஷயங்களைச் சொல்லி, "அந்த நமூனாவுக்கும் இதற்கும் என்ன அவ்வளவு வித்தியாசம்? புதிய நமூனா நல்ல வழவழப்பான பேப்பரில் அச்சடித்திருக்கிறது. பேப்பர் நன்றாயில்லையென்று முதலில் சேரவில்லை" என்று கேட்டாள்.

"வேறு வித்தியாசமொன்றுமிருக்கிறது" என்றான் சங்கரன்.

"வேறு என்ன?"

"ஒரு முக்கியமான வித்தியாசம். புது நமூனா முழுதும் படித்துப் பார்த்தீர்களா?"

"பார்த்தேன். கேள்விகளில் வித்தியாசமில்லையே. விலாசம், பெயர், கணவன் பெயர் முதலிய எல்லாம் அப்படியே இருக்கிறதே."

"கொஞ்சம் கவனித்துப் பாருங்கள்; ஒரே ஒரு கேள்வி விடப்பட்டிருக்கிறதே" என்றான் சங்கரன்.

பத்மாஸனிக்குப் புரியவில்லை. சங்கரன் பழைய நமூனாவை எடுத்து ஒரு வரியைக் காண்பித்தான். அந்த வரி புதிய நமூனாவில் இல்லை. பத்மாஸனி அதைப் பார்த்துவிட்டு ஆச்சர்யமடைந்தாள். 'இதுவும் ஒரு காரியத்துக்கு நல்லதுதான். நான் பொய் சொல்கிற வழக்கமே இல்லை. இந்த ஒரு விஷயத்தில் மட்டும் என்னையறியாமல் பொய் சொல்லும்படியாயிற்று. இனிமேல் அந்தத் தொந்தரவு இல்லை' என்றாள்.

சங்கரன் நமூனாவிலிருந்து எடுத்து விட்ட வரி என்ன என்று ஊகித்துப் பார்க்கிறீர்களா? அது,

"உங்கள் வயது என்ன?"

என்ற கேள்விதான்.

வெண் குஷ்டப் பெருவியாதி

எவ்வளவு கடுமையானதாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும் [illegible] வாரத்தில் குணம். நிவர்த்திக்கு உத்தரவாதம்.

விவரங்களுக்கெழுதுக,

KAMALA WORKS (S. M.)
Panchpota—Bengal, India.

த்யாகராஜ கீர்த்தனம்.

[காபிரைட்.]

ஸங்கீதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீனிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது

I

பல்லவி

பணிபதிசாயிந்! மாம் பாஹி, பாலிதாப்தி பாயிந்!-ரங்கபதே! (பணிபதி)

அநுபல்லவி

மணிமய மகுடவிராஜமான! மன்மத கோடி கோடிஸமான! (பணிபதி)

சரணம்

கஜவர கமன! கமனீயானன! ஸுஜனகனவன! ஸுந்தரரதன!
கஜமுகவிநுத! கருணாகர! நீரஜ நயன! த்யாகராஜ ஹ்ருத்ஸதன! (பணிபதி)

II

பணிபதி சாயிந்	—சேஷ சயனரே !
பாலித அப்திபாயின்	—அகஸ்த்ய முனிவரை ரக்ஷித்தவரே !
ரங்கபதே	—ஸ்ரீ ரங்கநாதப் பெருமானே !
மணிமய மகுடவிராஜமான	—ரத்னங்கள் பதிக்கப்பட்ட சிறந்த கிரீடத்தால் அலங்கரிக்கப்பட்டு விளங்குபவரே !
மன்மத கோடி கோடி ஸமான	—கோடி கோடி மன்மதர்களுக்கு ஸமானமானவரே !
கஜவரகமன	—யானையைப் போன்ற கம்பீரமான நடையையுடையவரே !
கமனீய ஆனன	—அழகிய திருமுக மண்டலத்தையுடையவரே !
ஸுஜன கனவன	—ஸாது ஜன ஸமூஹங்களைக் காத்தருள்பவரே !
ஸுந்தர ரதன	—அழகிய பல் வரிசையை யுடையவரே !
கஜமுக விநுத	—விநாயக மூர்த்தியால் கொண்டாடப் பட்டவரே!
கருணாகர	—கருணையங்கடலே !
நீரஜ நயன	—தாமரை யிதழ்போன்ற அழகிய கண்களையுடையவரே !
த்யாகராஜ ஹ்ருத் ஸதன	—த்யாகராஜனுடைய உள்ளத்தைக் கோயிலாகக் கொண்டிருப்பவரே !
மாம்பாஹி	—என்னைக் காத்தருள்வீராக.

III

ஸ்வாமிகளியற்றிய சுத்த ஸம்ஸ்க்ருதக் கீர்த்தனைகளில் இதுவொன்று. ஸ்ரீரங்கநாதப்பெருமான் விஷயமானது. "ராஜுவெடலே", "ஓரங்கசாயி", "வினராதா நாமனவி," 'ஜூதாமுராரே", "ஜனகஜாஸமேத," "கருணஜூடவய்ய" முதலியவைகளும் ஸ்ரீரங்கநாதர் விஷயமான கீர்த்தனைகளே.

பணிபதி:—ஆதிசேஷன் துஷ்டர்களையும் தம் வசப்படுத்தி அவர்களை யாட்கொள்ளுவதற்கு உதாஹரணமாகப் பகவான் பாம்பின் மீது பள்ளிகொண்டிருப்பதாகப் பெரியோர்கள் கூறுகிறார்கள்.

ரங்கபதே:—ரங்கம்—ப்ரணவாகாரமான விமானம். ஸத்யலோகத்தில் ப்ரம்ஹதேவரால் ஆராதிக்கப்பட்டு, பிறகு அவரால் இக்ஷ்வாகு ராஜாவுக்கு அளிக்கப்பட்ட மூர்த்தி ரங்கநாதன். ஸூர்யவம்ச சக்ரவர்த்திகளால் ஆராதிக்கப்பட்டு வந்தார். ஸ்ரீராமபிரானுடைய பட்டாபிஷேக காலத்தில் அவரால் அவருடைய பரமமித்ரனை விபீஷணாழ்வானுக்கு அளிக்கப்பட்டதாகவும், விபீஷணன் லங்கையை நோக்கித் திரும்புகிற காலத்தில், ராக்ஷஸ பூமிக்கு எழுந்தருள விரும்பாமல் ரங்கநாதன் உபய காவேரி மத்தியில் உகந்து சயனித்துக்கொண்டதாகவும் விருத்தாந்தம். இப்போதும் வருஷத்துக்கொரு முறை—அதாவது, வைகுண்ட ஏகாதசி தினத்துக்கு மறுநாளான த்வாதசியன்று—விபீஷணாழ்வான் வந்து ஆராதனை செய்துவிட்டு மீள்வதாக ஐதிஹ்யம். ரங்கம் என்றால் ஸபை என்று அர்த்தம். ஸ்ரீவைஷ்ணவர்களுடைய காலக்ஷேபாதிகளுக்குப் பொதுஸ்தலம் என்றும், லக்ஷ்மீகரம் தாண்டவமாடுவதற்குரிய ஸபை என்றும், பெரியோர்களால் கூறப்படுவதுமுண்டு. அந்த ரங்கத்திற்குப் பதி ரங்கநாதன். [சித்ஸபை—சிதம்பரம், ஸபேசன்—முதலிய சொற்களையும் கவனிக்கவும்]. ரங்கம் என்ற பதத்திற்கு ஆற்றிடைக்குறை—[இங்கிலீஷில் Delta] என்றும் அர்த்தம். (ஸ்ரீரங்கம் ஆற்றிடைக்குறையானதால் அப்பெயர் பெற்று, சிறப்பாக அதனாலேயே வழங்கப்பட்டதென்று சொல்பவர்களுமுண்டு.)

மன்மத கோடி கோடி ஸமான:—ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்தி மன்மதனுக்குப் பிதா (மதனஜனகன்) என்று ப்ரஸித்தம். மன்மதனுக்குத் தந்தை எப்படிப்பட்ட லாவண்யமுடையவராக இருக்கவேண்டும்?

(8-ம் பக்கம் பார்க்க)

பண்டிகை தினங்கள் நெருங்கிவிட்டன!

ஆனால் என்ன?

விலையில் குறைந்த கழுத்து நிறைந்த அழகு மிகுந்த

லேடீஸ் செயின்

ஒன்றே போதும்!

எந்த காலத்திற்கும் குழந்தைகளும் பெரியவர்களும்
உபயோகிக்கத் தகுதியான நகை.

தேசமெங்கும்
தினசரி
வேண்டப்படும்
செயின்

ரூபா
37

எல்லாப்
பெண்களாலும்
ஆசிக்கப்படும்
நகை.

உத்திரவாதம் - சவரன்
பொன்னால் செய்யப்பட்டது.
நீலம், பச்சை, ஊதா, சிகப்பு
முதலிய கற்களில் ஒரு தினு
சாகவோ அல்லது கலந்தோ
கிடைக்கும். நீளம் 25
அங்குலம்.

சூராஜ்மல் லல்லுபாய் & கம்பெனி,

ரத்ன வியாபாரிகள்,

313, எஸ்ப்ளனேட், : : மதராஸ்.

கஜவரகமன:—'ஸாமஜவரகமன' என்ற கீர்த்தனத்தைப் பார்க்கவும்.

கஜமுகவினுத:—'தாமரசீ' என்ற கீர்த்தனத்தில் 'வாலம்போதராதி ஸுரஸேவித' என்ற ப்ரயோகத்தைக் கவனிக்கவும்

இக் கீர்த்தனத்தில் முழுவதும் ப்ரதமா விபக்திகளே உபயோகப்படுத்தப்பட்டு, 'பாஹி' என்பதற்குப் பதிலாகப் 'பாது' என்ற ப்ரயோகத்துடன் ராஸிபுர பாகவதாவர்களுடைய பதிப்பில் காணப்படுகிறது. 'நீரஜநயன' என்பதற்குப் பதிலாக 'ராஜநயன' என்று அவருடைய பாடம். அர்த்தபேதமில்லை.

[ஸ்வாமிகள் முதலில் சுத்த ஸம்ஸ்க்ருதக் கீர்த்தனைகளையும், பிறகு ஸம்ஸ்க்ருதமும் தெலுங்கும் கலந்த கீர்த்தனைகளையும் முடிவாக முற்றிலும் தெலுங்கு கீர்த்தனைகளையும் இயற்றினரென்று, காலஞ்சென்ற கீர்த்தனசார்ய C R. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார் என்பது இங்கு அறியத்தக்கது.]

ஸ்வாமிகள் ஸ்ரீரங்க க்ஷேத்ரத்திற்கு இரண்டு முறை விஜயம் செய்ததாகக் கூறப்படுகிறது. ப்ரஸித்தமான இராப்பத்து உத்ஸவகாலத்தில் (மார்கழி மாதத்தில்) முத்தங்கி ஸேவையைத் தர்சித்ததாக, 'ரங்கசாயி'' என்ற கீர்த்தனையாலும், ப்ரம்ஹோத்ஸவ காலத்தில் குதிரைவாஹன ஸேவையைத் தர்சித்ததாக ''ராஜுவெடலே'' ''விநாராதா நாமனவி'' என்ற கீர்த்தனைகளாலும் வெளியாகிறது.

IV

ஜங்காரத்வனி — ஆதி தாளம்

இந்த ராகம் 72 மேள கர்த்தா முறையின்படி 19-வதான கர்த்தா ராகமாகும். ஆனால் அனுபவத்தில் இது மாறுதலுடன் பாடப்படுகிறது. 72 மேள முறைப்படி இதன் ஸ்வரங்கள் சதுச்ருதி ரிஷபம் ஸாதாரண காந்தாரம், சுத்த மத்யமம், சுத்த தைவதம், சுத்த நிஷாதம் ஆகிய இவைகளாம். (சுத்த நிஷாதமென்பது சதுச்ருதி தைவதமென்றே சொல்லத்தக்கவாறு பிடிக்கப்படும் ஸ்வரம்). அனுபவத்தில் இந்த நிஷாதம் சதுச்ருதி தைவதத்திற்குச் சற்று அதிகமாகவும் கைசிகி நிஷாதத்திற்குச் சிறிது குன்றவாகவும் பேசுகிறதென்பதை அறிஞர்கள் கண்டு கொள்ளக் கூடும். இந்த ராகத்தைப் பற்றிய என் சொந்த அபிப்பிராயத்தை வெளியிட இது இடமில்லையாகையால், ஸந்தர்ப்பப் பட்ட போது வேறோரிடத்தில் விளக்கமாகக் கூறுவேன்.

பல்லவி

;	பத பா தநித	பா ; பமகா	;	கரி ரீ ஸா	ரீ கா	மா ;
;	ப ணி பதி	சா ; யிக்...	;	மாம்...	பா	ஹி ;
;	பபா தநித	பமகரி கம பா	;	மகரீ ரீ	ரிக மக	மா ;
;	பணி பதி	சா......யிக்	;	மாம்...	பா	ஹி ;
;	ப பா தநித	பமகரி கமபா	;	மகரீ ஸா	ஸரிகம பா	நித
;	பணிபதி	சா......யிக்	;	மாம்...	பா	ஹி
நி	பபா மகா	கரிரீ கரிரீ	ஸா ; ;	மக	ரிஸ	ரிகமக மா
;	பா விதா	பநி...பா	யிங் ; ;	ரங்	க	ப...தே
பா	பபா தநித	பமகரி கமபா	;	மகரீ ஸா	ஸரிகம பா	நித
	பணி பதி	சா......யிக்	;	மாம்...	பா.	ஹி
நி	பபா மகா	கரிரீ கரிரீ	ஸா ; ;	மக	ரிஸ-	ரிகமப-நித
	பா விதா	பநி...பா	யிங் ; ;	ரங்	க	ப...தே
நி						

(பணிபதிசயிக்)

அனுபல்லவி

;	நிஸா-நிஸா	ரீரீ ;	ஸ்ரிக்ரிக்கரி		க்ரிரீ	ஸா ;
;	மணி-மய	மகுட	வி ரா ஜ		மா	ன ;
;	நிஸா-நிஸா	ரீரீ ;	ஸ்ரிக்ரிக்கரி		க்ரிரீ	ஸா ;
;	மணி-மய	மகுட	வி ரா ஜ		மா	ன ;
;	ம்மம்மா-ம்க்கரி	க்ரிஸா	ஸ்ரிக்ரி	ஸ்ாநி	பாதா	தபமா
;	மன்மத-கோ	டி	கோ	டி ல	மா	ன
பம						

(பணிபதிசாயின்)

சரணம்

;	பபா-பபா	பாபபா ;	;	மமகா ;	ரீ, காமா	காமா
;	கஜ-வா	க ம ன ;	;	கமனி ;	யா,...	னன
;	நிஸா-நிஸா	ரீ. க-மாகா-மா	; ;	கரி கமா	பா மா	பா ;
;	ஸுஜ-னக	ஜு,...வ-ன	; ;	ஸுந்தர	ர த	ஜு ;
;	நிஸா-நிஸா	ரீரீரீ ;	ஸ்ரிக்ரி	க்கரி	க்ரிரீ	ஸா ;
,	கஜ-முக	விநுத ;	க ரு	ணா	க	ர ;
;	நிஸா-நிஸா	ரீரீரீ ;	ஸ்ரிக்ம்	க்கரி	க்ரிரீ	ஸா-ஸா
;	கஜ-முக	விநுத ;	க ரு	ணா	க	ர-தீ
;	ரிக்ம்மா-ம்க்கரி	க்ரிஸா	ஸ்ரிக்ரிஸ்ாநி		பாதா	தபமா
;	ர ஜ நய-ன த்யா	க	ரா ஜம்ருத்		ஸத	ன...
பம						

(பணிபதிசாயின்)

(குறிப்பு) இந்தக் கீர்த்தனத்தைக் காஹரப்ரியா ராகத்திலேயே சிலர் பாடக் கேட்டிருப்பதாகக் கீர்த்தனசாரியர் ஒரு ஸபயப என்னிடம் கூறினர். அந்த வர்ணமெட்டுக் கிடைத்தால் பிறகு அதையும் பிரசுரிக்கிறேன்.

மல்லிகாவின் பாக்யமே பாக்யம்!

போன வருடம் ஐயோ! அப்பா! என்று கஷ்டப்பட்டவள் இவ்வருடம் ஒரு குழந்தையை அன்புடன் அணைகிறாள்.

"வேலன்ஸ் ஸ்திரீ ஸேர்தரி"

ஸ்திரீகளுக்கு மாதக்குளி காலத்தில் உண்டாகும் சூதக வாய்வு, சூதக பந்தம், சூதகக்கட்டினால் உண்டாகும் வயிற்று வலி, பேதி, பசியின்மை. வாந்தி, மயக்கம், தலைவலி, ஜ்வரம், உடல் ஸ்தூலித்தல் முதலிய எல்லா கர்ப்பாசய வியாதிகளையும் கண்டித்து மலட்டுப் பூச்சிகளைக்கொன்று, கருப்பைக்கு பலந்தந்து ரக்ஷித்து சந்தான பாக்யத்தையளிக்கும் உன்னத ஔஷதம். பத்தியமில்லை, செட் விலை ரூபா 5.

வேலன்ஸ்மெடிகல் ஹால் 61. காரணீஸ்வரர் கோயில் தெரு மைலாப்பூர், சென்னை

இரு காதலர்கள் மோட்டாரில் பிரயாணம் செய்துகொண்டிருந்தனர்.

மனைவி:—பார்த்தீர்களா இந்த மேகங்களை? ஒரு மேகத்தின் மேல் உட்கார வேண்டுமென்று எனக்கு ஆசையாகவிருக்கிறது

கணவன்:—நீ மோட்டாரை ஓட்டு. உடனேயே உன் எண்ணம் நிறைவேறிவிடும்.

* * * *

மாஜிஸ்திரேட் (தண்டனை பெறவேண்டிய குற்றவாளியைப் பார்த்து):—இருபது ரூபாய் அல்லது இரண்டு வாரம்.

கைதி:—பணமாகவே கொடுத்துவிடுங்கள்.

* * * *

"ஏன், எங்கள் கவிஞருக்கு உன்னை அறிமுகம் செய்து வைக்கிறேன். பிறகு உண்மையைத் தெரிந்துகொள்வாய்!"

* * * *

"டெலிவிஷனைப்பற்றிப் படிக்கும் ஒருவர் இன்னும் சில காலத்திற்குள் டெலிபோனில் ஒருவர் தமது மனைவியை அழைத்து அவளது புன்சிரிப்புத் தவழும் முகத்தைக் காணலாம் என்கிறார்"

"அம்மாதிரியான மனைவி இருந்தால்......"

* * * *

"நன்றாகச் சாப்பிட்டால் எந்தத் தொந்திரவானாலும் சரி, கஷ்டமானாலும் சரி, எதிர்த்துப் போராடலாம் என்று ஒரு டாக்டர் சொல்லுகிறார்"

"காப்பி ஹோட்டலுக்குச் சென்று நன்றாகச் சாப்பிட்டு விட்டுப் பணமில்லை என்று சொல்லி இதைப் பரீக்ஷை பார்க்கலாம்"

* * * *

"நான் சொன்ன கடைக்குச் சென்றாயா?"

"சென்றேன்"

"கடைக்காரனிடம் நான் உன்னை அனுப்பியதாகச் சொன்னாயா? அவன் என்ன சொன்னான்?"

"நீ என்னை அனுப்பியதாகக் கூறியவுடன் சாமான்களுக்கெல்லாம் அட்வான்ஸாகவே பணத்தைக் கொடுத்துவிடவேண்டுமென்று சொல்லிவிட்டான்"

* * * *

விருந்தாளி:—இந்த பிஸ்கோத்துகள் மிகவும் நன்றாகவிருக்கின்றன. நான் எவ்வளவு தின்றேனென்று எனக்கே தெரியவில்லை.

சிறுவன்:—இதற்குள் பத்து தின்றுவிட்டீர்கள்.

"நண்பர்கள்". லாஸ் ஆஞ்சலிஸ் (அமெரிக்கா) மிருகக்காட்சி சாலையில் எடுக்கப்பட்ட படம்.

கண்டக்டர்:— மோட்டார் பின்னால் போகிறதே!

டிரைவர்:—பிரேக் வேலை செய்யவில்லை. நான் இப்பொழுது என்ன செய்கிறது?

கண்டக்டர்:— வேண்டுமானால் பஸ் போகுமிடத்தைக் காட்டும் போர்டை மாற்றிவிடுகிறேன்.

* * * *

சிறுவன்:— புத்திசாலிக்கும் மேதாவிக்கும் என்ன வித்தியாஸம்?

தகப்பன்:— புத்திசாலிக்குச் சம்பளம் கிடைக்கும். மேதாவி சம்பளம் கிடைக்குமென்று எதிர்பார்த்துக்கொண்டிருப்பான்.

* * * *

"கூண்டிலிருக்கும் ஜந்துக்களில் புலிதான் மிகவும் பயங்கரமான மிருகம்."

BLACKLOCK & MACARTHUR LTD., GLASGOW

வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளை தான உயர்ந்தது. வெண்மை, மாறாது. வெடிக்கவும் செய்யாது. அதிக ஸன்னமாதலால் ஆண்டுவரும். 541 ஈய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்கவேண்டிய அவசியமுமிராது. 541 கெக்கின்பேரில் மான்மார்க்கும் இரண்டு ஈய வீல்களும் இருக்கிறதும் கெக்காகப் பார்த்து வாங்குங்கள். போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள். செந்தூரத்தில் "மான்மார்க்" செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

Sole Agents:-M. R. V. AIYER & Co., 49, பந்தர் தெரு, மதராஸ்,

10 வருஷம் உத்திரவாதமுள்ள புது மாதிரியான பஞ்சவர்ண கல்செயின்கள்

(செயின் 1-க்கு

ரூபாய் 5-0-0.

எங்கள் ரோல்டு கோல்டு செயின்கள் ஐந்துவித நிறமான செயற்கை கற்கள் வைத்துக் கட்டிய இந்த புது மோஸ்தர் செயின்களை குழந்தைகளும், பெரியவர்களும் அணிந்து ஆனந்த மடையலாம்.

(கேட்லாக இலவசம்)

R. S. பிரகாசம் & Co,

அலாட கோல்டு ஜுவல்லர்ஸ்,

187 சைனு பஜார் ரோட், ஜி டி

மதறாஸ்.

கெற்ப சஞ்சீவி எண்ணெ

ஸ்திரீகளுக்கு மாதாக்தரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்று வலியை அந்த க்ஷணமே நிறுத்தும். சூதக க்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதக கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திரக்ஷி, சூதகக் கட்டினல் உண்டாகும் தலைவலி, உடம்புவலி, கைகால் பொருத்துகள் உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்தூலித்துப் போதல், வயிர் பெருத்தல், காந்தல், எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒருசெம்பு ஜலங்கூட தூக்கமுடியாத பலஹீனம், சூதக ஜன்னி முதலிய வியாதிகளையெல்லாம் தீர்த்து கெற்பப்பை சுத்திகரிக்கப்பட்டு, கெற்ப உற்பத்தியை உண்டுபண்ணும். 6-வித மலடு தீரும். கெற்பம் தரிக்கவிடாது பண்ணும் கிருமிகளைக் கூட்டுடன் வெளியிலகற்றிவிடும். திடகாத்திரமும், பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

1 நபருக்கு 3 புட்டி வேண்டும்.

1 புட்டி ரூ. 2. 3-புட்டி ரூ. 5. செலவு வேறு

குணம் இல்லாவிடில் ரூபா 5 வாபீஸ்

பழனி வைத்திய ஆசிரியர்

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,

சித்த வைத்திய சாலை,

146, புரசவாக்கம் ஹைரோட், சென்னை

தலைமை ஆபீஸ், பழனி

"அம்மா! பக்ஷணம் எனக்கென்றுள்"

சற்று முன் தான் குழந்தை ராஜம் வாசலில் விளையாடிக் கொண்டிருந்தான். "கம்" என்று ஒரு வாசனை உள்ளிருந்து வெளிக் கிளம்பியது. தாயார் பக்ஷணங்கள் தயார் செய்கிருளென்றெண்ணி ஓடோடியும் உள்ளே வந்து,

"அம்மா! பக்ஷணம் எனக்கென்றுன்"

"கண்ணே! ரசமல்லவோ அடுப்பில் கொதிக்கிறது. தின்பண்டமேதுமில்லையே" என்றுள்.

"அன்னையே! ரசத்திற்கு இவ்வளவு அபரிமிதமான வாசனை யேது?" என்று குழந்தை ஆவலுடன் வினவினன்.

"செல்வமே! இது எல் ஜி. பெருங்காயத்தின் இன்பகரமான வாசனை. கொஞ்சந்தான ரசத்தில் போட்டேன். அதற்குள் வாசனை ஊரைத் தூக்குகிறது" என்று அம்மையார் பதிலளித்தார்.

உடனே சாப்பிட வேண்டுமென்று ஆசைப்பட்ட குழந்தையை அன்னையும் எடுத்து அமுது படைத்தாள். வயிறு நிறைய உண்டபின் குழந்தை ராஜம் மகிழ்ச்சியுடன் பள்ளிக்கூடத்திற்கு ஓட்டம் பிடித்தான். எல். ஜி. தான் எல். ஜி அதற்கு ஒப்பும், உயர்வும் இல்லை எல். ஜி. கொள்வோர் எழில் பெறுக.

லால்ஜி கோது & கம்பெனி,

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய் — சென்னை — கும்பகோணம்

உங்கள் குழந்தைக்கு

டோங்கரேயின்

பாலாம்ருதமும்

கொடுங்கள்

டோங்கரேயின் பாலாம்ருதம் என்பதென்ன?

1. டோங்கரேயின் பாலம்ருதம் குழந்தைகளுக்கான ஓர் சிறந்த டானிக்.
2. நீடித்த தொந்தரவான இருமலையும், சாதாரண ஜுரத்தையும் போக்குகிறது.
3. மெலிந்து கிடக்கும் குழந்தைகளுக்கு வலுவூட்டுகிறது.
4. பல் முளைக்கையில் குழந்தைகளுக்கு உதவி செய்கிறது

மதாராஸ் ஏஜண்டுகள்:

ஏ. பி. பரேக், 268 சைனா பஜார் ரோட்.

நமது புதிய தொடர் கதை

ராதா

(குருமலை ஸ்ரீமான் சுந்தரம் பிள்ளை.)

2. தனிக் காதல்

முதலியாரும் தானும் பேசிக்கொண்ட விஷயத்தை அமரேசனிடம் தெரிவிப்பதற்காக மரியதாஸர் அவன் வரவையெதிர்பார்த்திருந்தும் நான்கு தினங்களாய் அவனைச் சந்திக்க முடியவில்லை. இடையில் மரியதாஸர் இல்லாத சமயங்களில் இரண்டொரு முறை வந்த அமரேசன் ராதாவினிடம் அன்புகலந்த புன்னகையுடன் சில வார்த்தைகள் பேசிவிட்டுப் போயினன். ஒரு நாள் நந்தகோபர் ராதாவை அழைத்து, "தாயே, ஹெட்மாஸ்டர் உனக்கு உபாத்தியாயர் திட்டம் செய்தாராவென்று கேட்டுக்கொண்டு வா; சாவகாசமிருந்தால், நாளை இங்கே வரும்படிச்சொல்" என்று, ஒரு சீட்டும் கொடுத்தனுப்பினார். ராதா சீட்டை மரியதாஸரிடம் கொடுத்துச் சமாசாரத்தையும் தெரிவித்தாள். மறுநாட் காலை மரியதாஸர் அமரேசனைத் தேடித் தெப்பத்திற்குச் சென்றபொழுது, அங்கே தனிமையாய் எண்ணெய் தேய்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்த, அமரேசன்:—குட்மார்னிங், மரியதாஸ்.

மரியதாஸ்:—குட் மார்னிங் செட்டியார்; எண்ணெய் ஸ்நானமா? இந்துக்கள் ஞாயிற்றுக் கிழமை ஸ்நானம் செய்யலாமோ!

அம:—இந்துமதத்திற்கும் எண்ணெய்க்கும் என்ன சம்பந்தம்? ஸார், நான் வந்த சமயமெல்லாம் உங்களைக் காணவில்லையே?

மரிய:—நீர் தேடியதாய்க் கேள்விப்பட்டேன் உம்மைப் பார்க்கத்தான் வந்தேன்.

அம:—நான் தேடியதாய் உங்களிடம் சொன்னது யார்?

மரிய:—நீர் யாரிடம் என்னைத் தேடினீர்?

அம:—அந்தக் குழந்தையிடம். இப்போது நெல்லூரிலிருந்து வந்திருக்கிற குழந்தையிடம் தேடினேன். என் சிரிக்கிறீர்கள்?

மரிய:—ஒன்றுமில்லை, "சொன்னது யார்?" என்று ஆவலாய்க் கேட்கிறீரே யென்று சிரித்தேன்.

அம:—அந்தப் பெண் அவ்வளவு ஞாபகமாய்ச் சொல்லிற்றாவென்று கேட்டேன். குழந்தை நல்ல புத்திசாலி.

மரிய:—புத்திசாலியானால் அவளை நீர் விவாகம் செய்துகொள்வீரா?

அம:—இதென்ன கேள்வி? திடீரென்று கேட்கிறீர்களே?

மரிய:—நான் கேட்பதற்குப் பதில் சொல்லும். அந்தப் பெண்ணை உமக்குத் தந்தால் நீர் மணந்துகொள்வீரா?

அம:—தாங்களென்ன வக்கிலா? என்னைக் குறுக்கு விசாரணை பண்ணுகிறீர்களா?

மரிய:—நான் வாஸ்தவமாகவே கேட்கின்றேன். விளையாட்டல்ல. (என்று தமக்கும் நந்தகோப முதலியாருக்குமிடையில் நடந்த சம்பாஷணையைச் சொன்னார்.)

அம:—ஸார், என்னிடம் கலந்துகொள்ளாமல் என் பெயரை ஏன் வெளியிட்டீர்கள்?

மரிய:—அதனாலென்ன? உம்மை நேரில்கண்டு முடிவு சொல்வதாய்த்தான் தெரிவித்திருக்கிறேன். இன்று வீட்டுக்கு வரும்படியும் சொல்லியனுப்பியிருக்கிறார். சாயங்காலம் போகவேண்டும்.

அம:—அந்தப் பெண்ணை விவாகம் செய்யப் பிரியமாவென்று ஏன் கேட்டீர்கள்?

மரிய:—இப்பொழுது உத்தேசிக்கிறபடி அந்தப் பெண்ணுக்கு நீர் படிப்பிக்கும்படி ஏற்பட்டால், அவளை நீர் விவாகம் செய்யக்கூடிய சந்தர்ப்பம் வந்தாலும் வரும் என்ற நம்பிக்கையினால் அப்படிக் கேட்டேன். முதலியார் தமிழ்நாட்டிலிருந்து இங்கே வந்து தனிமையாய்க் குடியிருக்கின்றார். நீரும் தமிழர். ஒருக்கால் அவர் உம்முடைய குணத்தையும் கல்வியையும் விரும்பித் தமது மகளை உமக்குக் கொடுக்க அபிப்பிராயப்பட்டாலும் படலாம். பழகப் பழக நாளடைவில் உம்முடைய பேரில் அவருக்கு மிகுந்த பக்ஷமுண்டாகுமென்று நான் திட்டமாய் நம்புகின்றேன். இனி, நீரும் ராதாவைப்பற்றி மிகவும் நல்லெண்ணம் கொண்டிருப்பதால் அவருக்கு அவ்வித அபிப்பிராயம் தோன்றும்படி நடந்துகொள்ள உம்மால் இயலும். பொதுவாய்ப் பெண்களுக்கெல்லாம் வக்கணை பேசுகின்ற உமக்கே ராதா விஷயத்தில் இவ்வளவு உயர்ந்த எண்ணம் இருப்பதால், அவளை விவாகம் செய்யவும் நீர் ஆக்ஷேபிக்கமாட்டீர் என்பது எனது எண்ணம். அன்றியும் உமக்கு மாதந்தோறும் ஏதாவது வருமானமும் கிடைக்கும்.

அம:—உங்கள் எண்ணம் பெரிய ஆகாயக்கோட்டை போலிருக்கிறதே? முதலியாருடைய ஜாதி வழக்கம் தங்களுக்கு நன்றாய்த் தெரியாது. தாங்கள் எண்ணுவதுபோல் அந்தப் பெண்ணை நான் விவாகம் செய்யும்படி ஒருநாளும் ஏற்படாது. அது தெரிந்தும், அந்த நோக்கத்துடன் நாம் எந்த முயற்சியிலும் தலையிடுவது மடமை. இன்னும் வேறு சில காரணங்களை முன்னிட்டு, அந்தப் பெண்ணுக்கு நான் படிப்பித்தலும் உசிதமன்று.

மரிய:—நீர் அந்த முதலியாருடைய குணம் தெரியாமல் பேசுகின்றீர். நன்றாய்ப் பழகிவிடுவீரானால், அவரால் உமக்குப் பெரிய நன்மைகளுண்டாகுமென்றுதான் நான் இவ்வளவு தூரம் பேசினேன்.

அம:—ஸார், சற்றே ஆலோசியுங்கள். கேவலம் வருமானத்தைக் கருதி நான் எதற்கும் உடன்படக்கூடியவனல்ல. முதலில் ஒரு விஷயம். அதைத் தங்களிடம் மறைக்கப்படாது. ராதாவென்கிற அந்தப் பெண்ணைப்பற்றி நான் உயர்ந்த அபிப்பிராயம் கொண்டிருக்கிறேன் என்பதுமட்டும் உண்மைதான். நான் அவளைக் கண்ட கால முதல் அவளுடைய சாயை என் மனத்தை விட்டகலவில்லை. நான் இதுவரை இவளினும் விசேஷமான ரூபவதிகளைக்கண்டபொழுதும் கூட அவர்களைப்பற்றிய எண்ணம் உடனே என் மனத்தை விட்டகன்றுவிடும். என்ன காரணத்தினாலோ, இந்தப் பெண்ணைக் கண்டவுடனும் அவளுடைய மதுரமான வசனங்களைக் கேட்டவுடனும் அவளைப்பற்றிய எண்ணம் என் மனத்தில் ஸ்திரமாய்ப் பதிந்துகொண்டது. அன்று தினம் நான் வீட்டிற்கு வந்து காலேஜுக்குப் புறப்படுகிறவரை என்னுடைய மனம் அவளையே பின்பற்றிச் சென்றுகொண்டிருந்தது. இவளை மணக்கும் புருஷன் அதிர்ஷ்டசாலிதானென்று முதலில் எண்ணினேன். ஆனால் இப்படிப்பட்ட அரிய பெண் அவள் மகிமையையறியாத மூடர் வசப்பட்டு வருந்துவாளோ என்னவோவென்றும் பின்னால் கவலைப்பட்டுக்கொண்டேன். பிதா விவேகியாயிருந்தால் பெண்ணும் நல்ல நிலைமைக்கு வருவாள் என்றும் முடிவில் சமாதானம் செய்துகொண்டேன். அவள் நல்ல கணவனையடைந்து சுகமாய் வாழவேண்டுமென்பதுதான் என்னுடைய பிரார்த்தனை.

மரிய:—அது போகட்டும். அவளுக்குப் படிப்பிப்பதில் உமக்கென்ன தடை?

அம:—அதுதான் சொல்லுகின்றேன். இப்படி விலகியிருக்கும்பொழுதே அவளைப்பற்றிய எண்ணத்தை என்னால் மறக்க முடியவில்லை. இனி அவள் வீட்டிற்குத் தினந்தோறும் போய் வந்து பழகிவிட்டால், அவள் என் மனமுழுவதையும் கவர்ந்து கொள்ளை செய்துவிடுவாளென்பது திண்ணம். அது பின்னால் வீண் கவலைக்கிடமாகும். இவைகளை உத்தேசித்து நாம் இப்பொழுதே விலகிக் கொள்வது உத்தமம்.

மரிய:—ஏதோ பெரிய மோசநாசங்கள் வந்துவிடுமென்று பயப்படுகின்றீரோ? என்னைப்போல் நீரும் ஒரு பெண்பாடசாலை உபாத்தியாயராயிருந்து, உம்முடைய பாடசாலையில் இந்தப்பெண் படிக்க வந்தால், வேண்டாமென்று சொல்வீரோ? அப்படியெண்ணிக் கொள்ளும்.

அம:—ஸார், அந்நிய மாதர் மீது அன்புண்டாகும்பொழுதே அவ்வன்பை உடனே வேரறுப்பதல்லவா நல்லொழுக்கத்தின் முறை? இல்லாவிட்

மனோரஞ்சனி

இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை. இராஜலக்ஷ்மி என்னும் நாவல் தொடர்ச்சியாய் வெளிவந்துகொண்டிருக்கிறது. இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனாம்!

எம். எஸ். ராமுலு கம்பெனி,
286, எஸ்பிளனேட், மதராஸ்.

ராதா

முன் கதைச் சுருக்கம்

மகேந்திரத்தில் பாரெஸ்ட் ரேஞ்சராயிருந்த நந்தகோப முதலியாரின் குமாரி ராதா ஒரு பெண் பள்ளிக்கூடத்தில் படித்து வருகிறாள். பள்ளிக்கூட ஹெட்மாஸ்டர் மரியதாஸர். ஒருநாள் அவருடைய ஸ்னேகிதர் அமரேசன் செட்டியார் அங்கு வருகிறார். ராதாவின் மனதில் அமரேசன் அவளுடைய மாதா பிதாவைப் போலவும் அண்ணனைப் போலவும் தோழனைப்போலவும் தோன்றினான். நந்தகோபர் தமது குமாரிக்குத் தமிழ் படிப்பிப்பதற்காக ஒருவரை ஏற்பாடு செய்யும்படி மரியதாஸரிடம் கூறுகிறார். அவரும் அமரேசன் பெயரைப் பிரஸ்தாபித்து ஏற்பாடு செய்வதாகச் சொல்லுகிறார்.

டால் ஒழுக்கமும் போய்க் கவலையும் நேரும்.

மரிய:—நல்லது. உம்முடைய இஷ்டம். முதலியார் மிகவும் பெரிய மனிதன்; நல்ல யோக்கியர்; அவரைக் கண்டு பழக்கம் செய்துகொள்ளுவதிலும் கூட உமக்கு ஆக்ஷேபனையுண்டோ?

அம:—ஆகா நல்லது. பெரிய மனிதனைக் கண்டு பழக்கம் செய்வதில் என்ன தடை? இன்று சாயங்காலமே போவோம். நானே தங்கள் வீட்டிற்கு வருகிறேன். தாங்கள் போங்கள்,

என்று மரியதாஸரை அனுப்பிவிட்டு வீட்டிற்குப் போனான். போகும்பொழுதே அவனுடைய மனம் பலவிதமாய் உழைந்தது. ராதாவின் திவ்விய உருவமும் அவள் குணத்தின் பெருமையும் அவளுடைய மதுரமொழியின் இன்னொலியும் அமரேசன் சிந்தை முழுதும் நிறைந்து நின்றன. "என்ன! அன்று தினம் இந்த உத்தமப் பெண்ணை ஒரு பொழுது கண்டவுடன் என் மனம் ஒருவிதமாய்க் கலங்கிற்று. 'ஏதுமறியா இந்தச் சிறு பெண்ணின் மழலை மொழிகளே என்னை இவ்வாறு மயக்குமாயின், பெரியவளானபின் இவளைக்கண்டால் நான் என்ன பாடுபடுவேன்' என்று எண்ணினேன். அப்பொழுது, மரியதாஸர் அவ்வளவும் சொல்லுமென்று கனவிலும் நினைக்கவில்லை அந்தத் திவ்யமான பெண்ணைத் தினந்தோறும் சந்தித்துப் பேசும்படியான பாக்கியம் தானே வந்திருக்கின்றது. ஆனால் இது பாக்கியமா? ஆறுமாதமோ ஒரு வருஷமோ பழகிவிட்டு, முடிவில் அவளை நீங்கிச் சும்மா தானே வீட்டிற்குத் திரும்பும்படி நேரிடும்? அதனால் நமக்கு அளவற்ற சஞ்சலம் தானே விளையும்? இனி விளையும் துன்பத்தை முன்னுணர்ந்து இப்பொழுதே விலக்கிவிடுவதல்லவா விவேகம்? அவள் என்மனத்தைக் கவர்ந்து கொள்ளக் கூடிய உயர்ந்த குணவதியாயும் ரூபவதியாயும் இருக்கின்றபடியால், இப்படிப்பட்ட உத்தம கன்னிகையுடன் நெடுநாட் பழகிவிட்டு, நான் வேறே எந்தப் பெண்ணை மணந்தாலும் என்னுடைய நினைவும் அன்பும் இவள்மீது

அமரேசன் படிப்பிக்கும் விதத்தையும் அதை ராதா விவேகத்துடன் கற்கும் திறனையும் நந்தகோபரும் அநந்த கல்யாணியும் சில சமயங்களில் பக்கத்திலிருந்து பார்த்துச் சந்தோஷமடைவார்கள்.

செல்லுமேயன்றி, எனக்கு உண்மையில் மனைவியாகப்போகிறவள்மீது செல்லாவே! அங்ஙனமாபபொழுது, என்னை மணக்கப்போகும் பெண்ணின் இன்பமும் கெட்டு, என் ஒழுக்கமும் கெட்டுவிடுமே? அன்றியும் இவளைக் கண்ட என் கண்கள் வேறொரு பெண்ணையும் காதலிக்குமா? (மனத்துட் சிரித்துக்கொண்டு) இவ்வுலகில், தீய பெண்களால் மட்டுமே தீமை விளையுமென் 'து இந்துக்களின் கொள்கை. ஆனால், ராதாவையும் என்னையும் நினைக்க, நல்ல உத்தமிகளாலும் சிலர்க்குச் சஞ்சலம் விளைகின்றது. உள்ளவாறே, ராதா ஒரு உத்தமியாயினும், அவள் என்மட்டிலும் வீண் கவலையை விளைத்தவளேயன்றி நன்மை செய்தவளல்ல. இஃதென்ன உலகப்! நல்லது என்னுடைய நன்மையையும் லாபத்தையும் கருதி, இவ்வளவு தூரம் விரும்பிக் கேட்டுக் கொண்டுபோன எனது ஆப்த நண்பர் மரியதாஸர் மனம் சடைக்காதவாறு, அவருடைய மனத்திருப்திக்காகவேனும், அந்த முதலியாரை இன்று கண்டுகொள்வதனால் என்ன தோஷம்?" என்றிவ்வாறு யோசனை செய்துகொண்டு அமரேசன் போஜனம் முடித்து, மாலை இரண்டு மணிக்கு மரியதாஸர் வீட்டிற்குப் போனான். போனபின்னும் ராதாவின் குண விசேஷங்களைப்பற்றி நெடுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு இருவரும் நந்தகோபர் வீட்டிற்குப் புறப்பட்டார்கள். இந்தச் சமயம் தன் வீட்டு முன் வாராந்தாவில் நின்றுகொண்டிருந்த நந்தகோபர் இருவரையும் அன்பாய் வரவேற்று மேல் வீட்டிற் கழைத்துக்கொண்டுபோய் உபசரித்தார். அப்பொழுது,

மரிய:--(அமரேசனைச் சுட்டி) இவர்கள் தான் நான் தங்களிடம் தெரிவித்த அமரேசன் செட்டியார்.

நந்த:—அப்படியா? தாங்கள் தானா? ரொம்ப சந்தோஷம். அடே ராஜு, கீழே போய் ராதாவைக் கூட்டிக் கொண்டு வா.

ராஜு:—புத்தி; உத்தரவு. (என்று கீழே போகவும், உபாத்தியாயர் வந்திருப்பதைக் கேள்வியுற்ற ராதா, இதுவரை கவனமாய்ச் செய்து கொண்டிருந்த தையல் வேலையைப் போட்டுவிட்டு, மலர்ந்த முகத்துடன் உயரே ஓடிவந்து பிதாவின் பக்கத்தில் நின்றாள்)

நந்த:—தம்பீ செட்டியார்வாள், ராதா நல்ல புத்திசாலி; எனக்கு ஆண் குழந்தை பெண் குழந்தை இரண்டும் இவளாகவேயிருக்கின்றாள். இவளுக்குச் சரியான தமிழ்க் கல்வி கற்பிக்கவேண்டுமென்பது என் அபேக்ஷை. அது தங்கள் கடமைதான். எனக்கு இவள்தான் ஆஸ்தி வயது பத்து முடிந்து பதினொன்று நடக்கின்றது. நான்காம் வகுப்பு முடியும்வரைதான் பாடசாலைக்குப் போவாள். ராதா பாடினால் மிகவும்

எந்தப் பல் பசையும், அது எவ்வளவு உயர்ந்ததெனக் கொண்டாடப்படினும் சரி, விலை எவ்வளவாகவிருந்தாலும் சரி, **நீம் டூத் பேஸ்டைவிட** மேன்மையாகவோ அல்லது பத்திரமாகவோ உங்கள் பற்களைச் சுத்திகரிக்க முடியாது. எனவே நீம் டூத் பேஸ்ட் உபயோகித்தால் நீங்கள் சிறந்த பல்பசையை உபயோகிக்கிறீர்கள் என்பது உறுதி.

'Neem'
TOOTH-PASTE

பவுடர் வேண்டுமானால் மார்கோ பிராண்ட் பல் பவுடரை உபயோகிக்கவும்.
கல்கத்தா
கெமிக்கல்

இனிமையாயிருக்கும். தேவாரத்தில் நல்ல பண்களைப் படிப்பிக்க வேண்டுமென்பது எனது ஆசை.

மரிய:—செட்டியாரும் நன்ருய்ப் பாடுவார். அதிலும் தேவாரம் மிகவும் பேஷாய்ப் பாடுவார்.

நந்த:—அப்படியா? தம்பிக்குச் சங்கீதமும் வருமா? ரொம்ப சந்தோஷம். ராதா யோகசாலிதான். சங்கீதமும் படித்துக்கொள்ளலாம்.

மரிய:—மிஸ்டர் செட்டியார், ஒரு தேவாரம் பாடுங்களேன்?

நந்த:—தம்பி, ஒன்று பாடுங்கள்; ராதா கேட்கட்டும்.

அம:—(சிறிது நேரம் திகைத்து) "யாழைப்பழித்தன்ன மொழி மங்கை யொருபங்கன் (என்ற சுந்தரமூர்த்தி நாயனர் தேவாரத்தைத் தாழ்ந்த குரலில் இனிமையாய்ப் பாடத் தொடங்கினன்)

இவ்வாறு அமரேசன் இரண்டு மூன்று தேவாரம் பாடி முடிக்கும்வரை, விழித்த கண்ணிமையாமல்பக்கத்தில் நின்று கேட்டுக்கொண்டிருந்த ராதா அளவற்ற ஆனந்தத்துடன் கீழே சென்று மூவர்க்கும பலகாரமும் காப்பியும் கொண்டு வந்து தன் பிதாமுன் வைத்தாள. நந்தகோபர் இருவரையும் காப்பி சாப்பிடச் சொல்லித் தாமும் சாப்பிட்டார். சாப்பிடும்பொழுதுஅமரேசன் கண்கள் ராதாவின்பேரிலும், ராதாவின் கண்கள் அமரேசன்பேரிலும் மாறிமாறி அடிக்கடி சென்றுகொண்டிருந்தன. இருவர்கண்களேயும் மரியதாஸர் கடைக்கண்ணுற் பார்த்துப் புன்னகை செய்துகொண்டார். இத்தனைக்கும், சாதுவாகிய நந்தகோபர் கண்கள் பலகாரத் தட்டத்தையும் காப்பிச் செம்பையும் மாறிமாறிப் பார்த்தன.

அப்பொழுது அமரேசன், தனக்குள், "என்ன செய்வது? முதலியாருடைய அசாதாரணமான நற்குணத்தை மறந்தாலும், ராதாவின் அன்பை எப்படி மறப்பது? ஏதாவது ஒரு புகல் வார்த்தை சொல்லிக் கழித்து விடலாமென்றெண்ணியல்லவா முதலில் வந்தேன்? நல்லது. இப்பொழுது தற்காலத்துக்கு ஆகட்டுமென்று சம்மதிப்போம். மாட்டேனென்று சொல்லிவிட்டால், ராதா மிகவும் வியசனமடைவாள். நானே படிப்பிக்கப் போகிறேனென்று அவள் நம்பியிருக்கும் நம்பிக்கையை நான் பங்கம் செய்யப்படாது. பின்னல் சௌகரியம்போல் பார்த்துக் கொள்வோம்" என்று தீர்மானம் செய்துகொண்டான்.

இனி, மரியதாஸர் தன்னுடன் அமரேசனையும் அழைத்துக்கொண்டு வந்திருப்பதனல், ராதாவுக்குப் படிப்பிக்க அமரேசன் சம்மதித்து வந்திருப்பதாகவே நந்தகோபர் தொடக்க முதல் எண்ணிக்கொண்டிருந்தாரன்றி, அவன் மனத்துள் நிகழ்ந்த ஆக்ஷேபணைகளைச் சிறிதும் அறியவில்லை. ஆதலால், அவன் தமது வேண்டுகோளுக்கிசைந்தவனென்ற எண்ணத்துடன்,

நந்த:—தம்பி, நாளை சோமவாரம்; நல்ல தினமாகையால், நாளை முதலாகவே ராதாவுக்குப் பாடம் தொடங்கவேண்டியதுதான். தாங்கள் தினந்தோறும் எத்தனை மணிக்கு இங்கே வாமுடியும்?

அம:—சாயங்காலமாவது ராத்திரியாவது வருகிறேன்.

நந்த:—நல்லது; அப்படியே செய்யுங்கள். மற்றப்படி, சம்பள விஷயமான காரியங்களில் தங்களிஷ்டம்போல நடந்துகொள்ளுகிறேன். ராதாவை மிகவும் படிப்பில் கெட்டிக்காரியாக்கி அடுத்த வருஷம் திருக்குறள் வாசித்துப் பொருள் சொல்லும்படியும், அவள் அப்படிச் சொல்வதை நான் கேட்கும்படியும் நீங்கள் செய்துவிட வேண்டியது. தங்களுக்குத் தக்க உதவி செய்வேன். தாங்கள் செய்யும் உதவியையும் நானும் மறக்கமாட்டேன்; ராதாவும் மறக்கமாட்டாள். (என்று இருவருக்கும் விடைகொடுத்தனுப்பி விட்டார். வெளியே சென்ற)

மரிய:—செட்டியாரே, முதலியார் குணத்தைக் கண்டவுடன், உம்முடைய ஆக்ஷேபணைகளெல்லாம் ஓடிவிட்டனவோ?

அம:—முதலியார் மகா சாது. கபடமற்றவர். அந்தப் பெண் ராதாவின் முகத்தைக் கண்டவுடன் என்னல் மறுக்க முடியவில்லை. நான் நினைத்து வந்ததொரு விதம்; இப்பொழுது முடிந்ததொருவிதம். நல்லது; வரவரப் பார்த்துக்கொள்ளலாம்.

என்றிவ்வாறு இருவரும் பேசிக்கொண்டு போய்விட்டார்கள்.

* * * *

மறுதினம் மாலை, அமரேசன் தன்னிடமுள்ள சில புஸ்தகங்களை யெடுத்துக்கொண்டு நந்தகோபர் வீட்டிற்குச் சென்றன். அந்தச் சமயம் முதலியார் வீட்டிலில்லை. அநந்தகல்யாணி மட்டும் வாரந்தாவிலுட்கார்ந்து விளக்குத் துடைத்துக்கொண்டிருந்தாள். பக்கத்தில் நின்று விளையாடிக்கொண்டிருந்த

ராதா:—அம்மா, இதோ வருகிறவர்கள்தான் தமிழ் வாத்தியார்.

அநந்:—ஐயா, வாருங்கள். நாற்காலியில் உட்காருங்கள். தங்களைப்பற்றி ராதா என்னிடம அடிக்கடிப் பேசுவாள். அவளுக்குப் படிப்பில் மிகவும் பிரியம. புத்தியாய்ப் படித்துக் கொள்வாள். உங்களைப் போன்றவர்கள் முன்னமே கிடைத்திருந்தால் இதுவரை

(28-ம் பக்கம் பார்க்க)

அதி அற்புத அழகு

சுகாதாரம் மிகுந்த

டில்பஹார் ஸோப்பு

(ரிஜிஸ்டர்ட்)

மூன்று கட்டிகளின் விலை

ஒரு ரூபாய் தான்

(தபால் செலவு தனி)

டில்பஹார் ஸோப்பு சிறந்த சுத்தி கரிப்பைத் தரும் கிருமி நாசினி. சரும எரிச்சல் அல்லது அரிப்பை அகற்றிச் சருமத்தைப் பாதுகாக்கும். அழகை விருத்திசெய்யும்.

உங்கள் சருமத்தைப் பாதுகாருங்கள் !

ஆட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களும், இதர பெண்களும் **காமினியா ஸ்னே**வின் சருமப் பாதுகாப்பையும், போஷாக்கையும் பெரிதும் பாராட்டுகிருர்கள். சருமத்திற்குப் புத்துயிரும், உல்லாசமுமளிப்பது. சருமச் சுருக்கங்கள் முதலியவற்றை நீக்குவதில் சிறந்ததென பிரசித்தி பெற்றது. விலை புட்டி 1-க்கு 10 அணு. தபால் செலவு தனி. தபால் செலவுக்காக 1 அணு ஸ்டாம்பனுப்புவோருக்கு சாம்பிள் இலவசம்.

சோல் ஏஜண்ட் :—

The Anglo Indian Drug & Chemical Co

285, Jumma Musjid, BOMBAY 2.

ஸ்டாக்கிஸ்டுகள் : ஜே. எஸ். சேட் & கம்பெனி,
68, பைக்ராப்ட்ஸ் ரோட், — திருவல்லிக்கேணி

நஞ்சன்கூடு சத்வைத்யசாலை
ஜீடி எல்
மகரத்வஜம்
ஆரோக்ய சஞ்சீவி
IDL

(ஒவ்வொரு கிராமத்திலும் ஸ்டாக்கிஸ்டு தேவை.)

நீரிழிவு, மதுமேகம்

முதலிய சகல நீர் ரோகங்களுக்கு

பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்

மயூரகாய கற்பம்

ஒரு தெய்வீக சஞ்சீவி !!

இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு

இன்றே எழுதுங்கள்.

ஸ்கந்தாசிரமம்

தபால் பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்

கண்ணோட்டம்

பிரமுகர்கள்

... யாக வந்துள்ள புதிய இத்தாலிய ஸ்தானீகர் கமாண்டர் எம். ஜனேட்டி—பியாங்கோ.

மைசூர் ஹைகோர்ட் நீதிபதி ஸ்ரீமான் வ. எஸ். ஆர். சாரி சமீபத்தில் உத்தியோகத்திலிருந்து விலகிக்கொண்டார். தஸராவில் இவருக்கு மைசூர் மஹாராஜா "ராஜதர்ம பிரவீண்" என்ற பட்டத்தை அளித்தார்.



மன்னர் பிரானின் கௌரவ மெய்க் காப்பாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கும் இந்திய சமஸ்தானாதிபதிகள். இடதுபக்கமிருந்து (மேல் படங்கள்) பிகானீர் மஹாராஜா, பாடியாலா மஹாராஜா. (கீழ்ப் படங்கள்) காஷ்மீர் மஹாராஜா, ஸர் உமர் ஹயத்கான்.

பழனி தேவஸ்தானத்திற்கு கௌரவ விஸிட்டராக நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீமான் பி. நடராஜ பண்டாரம்

நாக்பூர் கோவிலில் ஜெயின் ... கலப்பு மணம். ஸ்ரீயான் நாராயணனும் ஸ்ரீமதி அச் ...

லாகூர் பிரபல டாக்டர் ஒருவரின் குமாரியான மிஸ் ஹீஜா இம்டியாஸ் அலி லாகூர் விமானச் சங்கத்தில் விமானமோட்டும் "ஏ" லைசென்ஸ் பெற்றிருக்கிறார்.

மைசூர் ஹைகோர்ட் நீதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீமான் வ. ஆர். நாகேஸ்வர அய்யர்

தென்னிந்தியப் பிரமுகர்கள்

மஹா மஹோபாத்யாய நடாதூர்

ஸ்ரீரங்காசாரிய ஸ்வாமி

ஸ்ரீராமாநுஜர் தாம் பரமபதமடைந்தபோது தமக்குப் பின் ஸ்ரீ விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை மலினமடையாமல் பிரசாரம் செய்வதற்காக 74 ஸிம்ஹாஸனாதிபதிகளை நியமித்தருளினர். நடாதூர் ஆழ்வானிடம் அவர் ஸ்ரீ பாஷ்ய ஸிம்ஹாஸனத்தை அளித்தார். இந்த நடாதூர் வம்சத்தில் தோன்றிய பிரஸித்தர்களுள் மஹா மஹோபாத்யாய ஸ்ரீரங்காச்சாரிய ஸ்வாமி ஒருவர். சாஸ்திர ஞானத்தில் பாரங்கதரான இவரிடம் சதாவதானம் என்ற ஆச்சரியமான திறமையிருந்து வந்தது.

''எந்தச் சந்தர்ப்பத்திலும் உடனே பலவிதமான சமாச்சாரங்களைப்பற்றிப் பற்பல விருத்தங்களிலும் சம்ஸ்கிருத ஸ்லோகங்கள் கவனம் செய்வது, ஆங்கிலம் குஜராத்தி ஆகிய தமக்குத் தெரியாத பாஷைகளில் பத்தியங்களைச் சில குறிப்புகள் மூலம் எழுதி அவற்றை அப்பாஷைகளிலேயே திரும்பவும் தவறில்லாமல் எடுத்துச் சொல்வது, வியாகரணம் முதலிய கடினமான சாஸ்திர விஷயங்களில் ஒரே சமயத்தில் பலருக்குச் சரியான பிரதியுத்தரம் அளிப்பது'' முதலிய ஆச்சரியமான சக்திகள் இவரிடமிருந்தன. 'கவிதார்க்கிகசிம்ஹம்' ''அபிநவ காளிதாஸர்'' முதலிய பட்டங்களால் கௌரவிக்கப்பட்ட இந்த மஹான் ஸ்ரீ வேதாந்த தேசிகன் அருளிச் செய்திருக்கும் ''ஹம்ஸ ஸந்தேஸ'' காவியத்திற்கு வியாக்யானம் எழுதியிருக்கிறார். ஆச்சரியகரமான இவரது வாழ்க்கைச் சரித்திரம் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

(1843—1911)

(கே. எஸ். ஆர்.)

பாரததேசத்தின் தனிப் பெருமை

''மன்னர்க்குத் தன் தேசமல்லால் சிறப்பில்லை, கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு'' என்பது தொன்மை மிகுந்த ஒரு முதுரையாகும். ஒவ்வொரு தேசத்தின் உயர்வும் தாழ்வும் அத்தேசத்திய கலாபிவிருத்தியினால்தான் ஏற்படக் கூடியது. அறிவுச் சுடரை எக்காலமும் ஏற்றிவைத்து, அஞ்ஞானமாகிய இருளைப்போக்கி, ஞானமாகிய வெளிச்சத்தை எங்கும் பரவச் செய்வது நம் பாரத தேசத்தின் தனிப் பெருமையாகும். அதர்மம் ஓங்காமல் இருப்பதற்காக இக்கண்டத்தில்பெரிய மஹான்கள் அவதரித்திருக்கின்றனர். ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமானுஜர் ஸ்ரீ மத்வர் முதலிய திவ்விய புருஷர்கள் தோன்றிய தேசம் இதுவே. ஸ்ரீ ராமாநுஜர் தமது ஸ்ரீ விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை லோக ஹிதத்தை உத்தேசித்து பிரசாரம் செய்தார். இவ்வாசார்ய புருஷரின் வம்சத்தில் உதித்தவர்தான் காலஞ்சென்ற மஹா மஹோபாத்யாய சதாவதானி அபிநவ காளிதாஸ ஸ்ரீரங்காச்சாரிய ஸ்வாமி. இம் மஹா மஹோபாத்யாயர் அசாதாரண வைதுஷ்யம் வாய்ந்தவர்; சம்ஸ்கிருத பாஷையில் சூரர். இவர் தோன்றிய குடும்பத்தின் சிறப்பு இங்கு அவசியம் எடுத்துரைக்கப்படத்தக்கது.

மிகப் பிரசித்தி பெற்ற வம்சம்

நம் மஹாமஹோபாத்யாயர் மிகப்பிரசித்தி பெற்ற நடாதூர் வமிசத்தில் தோன்றியவர். 1843-ம் வருஷத்தில் திருச்சி ஜில்லா கரூர் தாலூகாவிலிருக்கும் மேலப்பாளையம் எனும் கிராமத்தில் இவர் ஸ்ரீ வரத தேசிகஸ்வாமி என்பாரின் புத்திரராக ஜனித்தார். இவர்களுடைய பூர்விகர்களுள் ஒருவர் உடையவரின் ''பிரியபாகினேயர்,'' (அதாவது அவருக்கு மிகவும் பிரியமான சகோதரியின் குமாரர்) அவர் நடாதூர் ஆழ்வார் என்று பிரசித்தராக விருந்தவர். அவர் ஸ்ரீ சுதர்ஸனாசார்யர் என்ற நாமத்தால் அழைக்கப்பட்டு வந்தவர். ஸ்ரீ ராமாநுஜர் தாம் பரமபதமடைந்த பிறகு ஸ்ரீ விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை மலினமடைந்து விடாமல் பிரசாரம் செய்வதற்காக தமக்குப் பின் அந்த ஸத்காரியத்தை நடத்துவதற்காக 74 ஸிம்ஹாஸனாதிபதிகளை நியமித்தருளினர். இந்த ஸிம்ஹாஸனாதிபதிகள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காரியம் விதிக்கப்பட்டது. தமது பிரிய பாகினேயரான இந்த நடாதூர் ஆழ்வானிடம் அவர் ஸ்ரீ பாஷ்ய ஸிம்ஹாஸனத்தைக் கொடுத்தார். இந்த வமிசத்தில் பிறகு உதித்தவரும் அதிமேதையாகவுமிருந்த ஸ்ரீ கடிகாசதம் அம்மாள் என்னும் மஹான் தாம் எழுதிய ''யதிராஜவிஜயம்'' என்னும் சிறிய நாடகத்தில் இந்த பூர்விகரின் சிறப்பை வெகு அழகாகக் குறிப்பிட்டார். ''ஸ்ரீ பாஷ்யஸிம்ஹாஸனமாத்மநீதம் யஸ்மை ஸதத் தம் யதிசேகரேண'' என்று அவர் எழுதினர். அதாவது உடையவர் தாமே நடத்தி வந்த ஸ்ரீ பாஷ்யப்ரவசனத்தை இவரிடம் ஒப்புவித்தார் என்பது. இந்த கைங்கரியம் எல்லாவற்றிலும் அதி முக்கியமானதாகும். ஆகையால் இந்த ஸிம்ஹாஸனாதிபதிகளுள் இவர் முக்கியஸ்தராவார். இந்த நடாதூர் ஆழ்வாரும் தமது கடமையை சரிவரச் செய்து வந்தார். அவருடைய பௌத்திரர்தான் ''நடாதூர் அம்மாள்'' என்று பிரக்கியாதி மிகுந்தவரும் ஸ்ரீவரததேசிகன் என்று அழைக்கப்பட்டு வந்தவருமான சிரேஷ்ட புருஷர். நடாதூர் அம்மாள் தம் காலத்தில் நிகரற்ற நிபுணர் எனப் புகழ்பெற்றவர் அவருக்குத் தெரியாதவை கிடையாது. இதுபற்றி அனைவரும் அவரிடம் பாடங் கேட்கச் சென்று வந்தனர். இம்மாதிரியாக அவரிடம் சிஷ்யராகவிருந்தவர்களுள், ஸிம்ஹாஸனாதிபதிகளுள் ஒருவரான ஆத்ரேய ராமாநுஜர் என்பார் ஒருவர். ஆத்ரேய ராமாநுஜரின் மருமகன்தான் ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்தை நிர்த்தாரணம் செய்து ஸ்தாபித்தவரும், திவ்விய தேஜஸ்ஸாகவிருப்பவருமான ஸ்ரீமத் நிகமாந்த மஹா தேசிகன் ஆவார். ஆத்ரேய ராமாநுஜர் தமது குருவிடம் காலக்ஷேபம் செய்து வரும்போது 5 வயது பாலனாகவிருந்த வேதாந்த தேசிகனும் அங்கு போய் வேடிக்கை செய்வது வழக்கம். ஒரு நாள் இப்பாலகனுடைய கிரீடைகளால் குரு முதலிய யாவரும் ரமித்திருந்தனர். இதனால் அவர்களுக்கு எவ்வளவுதூரம் பாடம் நடந்தது என்பது மறந்துபோய் விட்டது; அதைப்பற்றி அவர்கள் யோசனை செய்து வரும்போது பாலகனை தேசிகன் தாம் கேட்டுக்கொண்டிருந்த அந்தப் பகுதியை ஞாபகமாக எடுத்துச் சொன்னர். இது யாவருக்கும விஸ்மயத்தை விளைவித்ததுமல்லாமல் பரம ப்ரீதியையுமளித்தது. நடாதூர் அம்மாள் பரம சந்துஷ்டராகி பாலகனைப் பின் வருமாறு அப்போது ஆசிர்வதித்தார்:— ''ப்ரதிஷ்டாபித வேதாந்த: ப்ரதிக்ஷிப்த பஹிர்மத:, பூயா: த்ரைவித்யமான்யஸ்த்வம பூரி கல்யாண பாஜனம்'' என்று இம்மஹானின் ஆசிர்வாதம் ஓங்கியது என்று நாம் கூறவேண்டியது அனவசியம். ஸ்ரீ வேதாந்த தேசிகனும் பிற்காலத்தில் தாம் அருளிய சில கிரந்தங்களில் இப்பெரியாரின் ஆசிர்வாதத்தினல் தமக்கு ஞானம் கிடைத்தது என்றவாறு எழுதியுள்ளார். இந்த வம்சத்தில் பின்பு தோன்றியவர் கடிகாசதம் அம்மாள் என்பவர். இவரும் ஸ்ரீ பாஷ்ய ப்ரவசனம் செய்துவந்தார். ஸ்ரீமத் ஆதிவண் சடகோப ஸ்வாமி, மணவாள மாமுனிகள் முதலிய பிரசித்தர்கள் இவரிடம் வந்து பாடம்கேட்டவர்கள். இதைக் குறித்து அஹோபிலமடம் ஸ்ரீமத் ஆதிவண் சடகோப ஸ்வாமிகள் அனுஸந்தித்த தனியன் ஆரம்பத்தில் அந்த இன்றும சொல்லப்பட்டு வருகின்றது. அதாவது— 'வந்தே வாத விஷண்வார்ய நயனாநந்த தாயினே, வாத்ஸ்யாய வரதார்யாய வாதி நீஹார பாஸ்வதே'' என்பதாகும். இவர்கள் ஸ்ரீவத்ஸ கோத்ரத்தில் பிறந்தவர்கள். இவைகளிலிருந்து இவ்வம்சத்தின் தனிச் சிறப்புப் பலருக்கும் பிரத்தியக்ஷமாகும். இக் குடும்பத்தில் தோன்றிய ஒவ்வொருவரும் அதிமேதாவிகளாக விருந்து வந்துள்ளனர்.

சுண்டப்பாளையத்திற்குச் செல்லுதல்

ஸ்ரீ ரங்காசார்ய ஸ்வாமியின் ப்ரதம குரு அவரது பெரிய தகப்பனர் ஆவார். அவருடைய நாமம் ஸ்ரீவேதாந்த

தேசிகஸ்வாமி என்பதாகும். தமது கிராமத்தில் இருந்து கொண்டு இவர் அவரிடம் சம்ஸ்கிருதம் படிக்க வாரம்பித்தார். அக்காலத்தில் அந்தக் கிராமத்தில் இரண்டு குடும்பங்கள்தான் இருந்தன. இவருக்கு அவர்தான் பஞ்ச ஸம்ஸ்காரங்களைச் செய்வித்தார். இளம்பிராயத்திலேயே இவருடைய அதிசயமான திறமைகள் வெளியாயின. கடினமான விஷயங்களையெல்லாம் இவர் லகுவில் கிரஹித்துக் கொண்டார். அவரிடம் இவர் ஸாஹித்யம் அலங்காரம் போன்ற பகுதிகளைக் கற்றுக் கொண்டார். அநேக கிரந்தங்களையும் இவர் அப்போது படித்தார். அவரது தேக வியோகத்திற்குப்பின்பு இவர் கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள சுண்டப்பாளையம் கிராமத்திற்குச் சென்றார். அந்தக் கிராமத்தில் அனந்தாசார்யஸ்வாமி என்பார் ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் என்று சொல்லப்படும் ஸ்ரீநிவாஸ தேசிகனை அங்கு வரவழைத்து, அவர் மூலம் ஒரு கோவிலை ப்ரதிஷ்டை செய்வித்தார். அவர் இதன் அங்கமாக ஒரு பாடசாலையை நடத்தி வந்தார். இந்தப் பாடசாலையில் இவர் சிறிதுகாலம், சுமார் 1½ வருஷகாலம், படித்தார். இங்கு இவர் சாமான்ய சாஸ்திரங்களையெல்லாம் அதிகரித்துக்கொண்டார். பின்பு இவர் காஞ்சிபுரத்திற்குச் சென்று அவ் [illegible] ர்க்கத்தில் பிரபல வித்வானாயிருந்த விஜயராகவாச்சாரியாரிடம் தர்க்கம் விசேஷமாகக் கிரஹித்துக் கொண்டார். சுமார் 25 வயதிற்குள்ளாக இவர் சதுஸ் சாஸ்திரங்களிலும் நிபுணரானார். இதற்குப்பின் இவர் ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் சன்னதியில் வேதாந்த காலக்ஷேபம் செய்தார். ''ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸ மஹா தேசிக கருணாகடாக்ஷ லப்த ஸத்ஸம்பிரதாயஸ்ய'' என்று இவர் தம்மைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

''சதாவதானி''

சாஸ்திர ஞானத்துடன் இவர் அவதானத்திலும் கவனத்திலும் நிபுணரானார். ''சதாவதானி'' என்று இவர் கோஷிக்கப்பட்டார். கொடுத்த ஸமஸ்யையை வைத்துக்கொண்டு ஒரு சுலோகத்தைப் பூர்த்தி செய்வது, எந்த விஷயத்தைப்பற்றி வேண்டுமானாலும் காலதாமதமில்லாமல் உடனே கவனம் செய்வது, அநேகரைக் கூட்டிக் கொண்டு அவர்களை வரிசையாகக் கேள்விகள் விதம் விதமாகப் பல விஷயங்களைப்பற்றியும் கேட்கச் சொல்லி, கேள்விகள் எல்லாம் முடிவானவுடன் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் அவைகள் கேட்கப்பட்ட வரிசைக் கிரமத்திலேயே சரியான விடைகளை அளிப்பது ஆகிய அதியாச்சர்யமான ஆற்றல்கள் இவரிடம் இருந்தன. ''சதாவதானம்'' என்பது ஒரு ஆச்சரியமான திறமையாகும். இதற்கு ஞாபக சக்தியும், விவித விஷய ஞானமும் அவசியமாவன. ஆகையால் சதாவதானம் செய்ய எவருக்கும் கிட்டாது. இந்த சதாவதானம் என்பது நம் பாரத தேசத்தில் மட்டும்தான் காணப்படுகின்றது.

வட இந்தியாவில் சஞ்சாரம்— பிரமிக்கத்தக்க உபந்யாஸங்கள்

இதற்குப் பின்பு இவர் 1873-ம் வருஷத்தில் வட இந்தியாவில் சஞ்சாரம் செய்ய வாரம்பித்து, 1880-ல் இங்கு திரும்பினார். சம்ஸ்கிருதத்தில் இவருக்கிருந்த அஸாதாரண பாண்டித்தியம் அங்கு எல்லோராலும் மிகப் பஹுமானிக்கப்பட்டது. பம்பாயில் ஜஸ்டிஸ் டிலாங், ஜஸ்டிஸ் ரானடே, ராவ்சாஹேப் விஸ்வ

(25-ம் பக்கம் பார்க்க)

மலேரியாவுக்குப் பிறகு புதிய ஆரோக்கியம்பெற

வைத்தியர்கள் சிபார்சு செய்வது

ஸனடோஜன்

அதிக ஆயாஸத்தைக் கொடுக்கும் நோய்களுக்கு ஆளாகி, அவஸ்தைப்பட்ட பிறகு வலுவு பெறுவதற்கு ஸனடோஜனைவிடச் சிறந்த டானிக் ஆகாரம் வேறில்லை என்பது வைத்தியர்களுக்குத் தெரியும். இக்காரணத்தைக்கொண்டே அவர்கள், மலேரியாவுக்குப் பிறகு ஸனடோஜனைச் சாப்பிடும்படி சிபார்சு செய்கிறார்கள். ஸனடோஜன் மீண்டும் இரத்த புஷ்டியளிக்கிறது; தேக பலவீனத்தைப் போக்குகிறது. வெகுகாலமாக உடல் மெலிந்தும், களைப்பு மிகுந்தும் இருப்பவர்கள் வெகு சீக்கிரத்தில் புதிய ஊக்கம் பெறுவர்.

ஸனடோஜனைச் சாப்பிட்டு விரைவில் பூரண ஆரோக்கியம் பெறுவதை விட்டுவிட்டு, வேறு எவ்வெவற்றையோ சாப்பிட்டு மெதுவாகப் பலனடைவானேன்? மீண்டும் வலுவடைய முடிவு செய்யுங்கள்—இன்றே ஸனடோஜன் உட்கொள்ளத் தொடங்குங்கள்.

கல்கத்தாவைச் சேர்ந்த பிரஸித்தி பெற்ற வைத்தியரொருவர் எழுதுவதாவது:—

''நோய்களால் தேக மெலிவடைந்ததற்குப் பிறகு நான் ஸனடோஜனை ஏராளமாக உபயோகித்துச் சிறந்த பலன்களை யனுபவித்து, திருப்தியடைந்தேன்.''

டாக்டர் எச். பி. ராய், எல். எம். பி. சி. பி., கூல்னு, எழுதுவதாவது:—

''முக்கியமாக மலேரியாவுக்கு ஸனடோஜன் விசேஷ பலன் தந்திருக்கிறது.''

பிரிட்டிஷ் இந்தியாவில் 30 வருஷ காலம் வசித்துவந்த பிரசித்திபெற்ற ஆங்கில வைத்தியரொருவர் பின்வருமாறு எழுதுகிறார்:—

''மலேரியா அல்லது சீதபேதிக்குப் பிறகு ஏற்படும் கடுமையான நிலைமையை அகற்றி, ஆரோக்கியமும், வலுவு மூட்டுவதில் ஸனடோஜன் எப்பொழுதும் அனுகூலமளித்திருக்கிறது.''

ஸனடோஜன் கைபடாமல் தயாரிக்கப்படுவது—மிருகக் கொழுப்பற்றது.

SANATOGEN

உண்மையான டானிக் ஆகாரம்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தீபாவளியும் வந்துவிட்டது!

மாப்பிள்ளையும் வந்துவிட்டார்!

கட்டோடும் கனத்தோடும்
பட்டோடும் பணியோடும்
கொட்டோடும் முழக்கோடும்
லட்டோடும் லாடோடும்

மாப்பிள்ளைக்கு விருந்து செய்யப்படுகிறது. ஒரு பக்கம் மாமியார், மற்றொரு பக்கம் மாமனார்; வேறொரு பக்கம் மனைவி. நடுவில் சங்கோசத்தினால் சங்கடப்படும் மாப்பிள்ளைக்கு பக்ஷணங்களும், அறுசுவை உண்டியுடன் பதார்த்தங்களும் பரிமாறப்படுகின்றன. அவைகளில் பெருங்காயம் கலந்திருப்பதால் சுவையும், மணமும், அபரிமிதமாக இருக்கிறது. ஆதலின் யாவரும் பட்டற்ற மகிழ்ச்சியுடன் உண்டு களிக்கின்றனர். உணவுக்கு உருசியும், உடலுக்கு உறுதியும், வனப்பும் கொடுப்பது எல் ஜி பெருங்காயமே எல் ஜி தான். எல் ஜி. அதற்கு ஒப்பும் உயர்வும் இல்லை.

எல். ஜி. கொள்வோர் எழில் பெருக!

லால்ஜி கோது அண்டு கம்பெனி,

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

தலைமை ஆபீஸ், "பம்பாய்"

சௌகார்பேட்டை சென்னை.

பிராஞ்சு ஆபீஸ், கும்பகோணம்

போலிகளைக் கண்டு உஷார்!!!

அமிர்தாஞ்சனம்

சகல வலிகளையும் போக்கும் இந்திய திவ்யாமிர்தம்

அமிர்தாஞ்சனம் லிமிடெட்.

பம்பாய், மதராஸ், கல்கத்தா

ஏமாறாதீர்கள்!

எங்கள் வைத்தியசாலையின் மருந்துகள் மிகவும் சிலாக்கியமானது என்பலராலும் புகழப்பட்டு வருதல் கண்டு, சிலர் வேறு மருந்துகளை எங்கள் மருந்துகள் அதாவது சி. எம். சாமி மருந்துகள் என்று சொல்லி ஏமாற்றி விற்பனை செய்து வருகிறதாகத் தெரிகிறது. எங்கள் வைத்தியசாலையிலிருந்து வெளி இடங்களுக்கு நாங்கள் யாவரையும் அனுப்பவில்லை. எங்கள் ஏஜண்டு என்றும், எங்கள் மருந்துகள் என்றும் யாராவது விற்பனை செய்தால் அதைப் பொதுமக்கள் வாங்கி மோசம் போகாமல் இருக்கும்படி எச்சரிக்கிறோம்.

மருந்து வேண்டியவர்கள் நேரே எங்கு எழுதிப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மலையப்பசாமி வைத்தியசாலை,

பழனி, S. I.

ஐந்து வருஷ வேலை.

வி. குப்புசாமி ஐயர், பி. ஏ. பி. எல்., அட்வகேட்.

கைலாஸபுரம், திருநெல்வேலி ஜங்ஷன், 23-3-35.

கேசவர்த்தினியை உபயோகித்ததால் அடைந்த அனுகூலத்தைத் தெரிவிப்பதில் எனக்குப் பரம ஸந்தோஷம். இழந்த கூந்தலை மீட்டுக்கொடுப்பதாலும், கூந்தலை நீண்டு வளரச்செய்வதாலும், இது நமது சிறுமிகளுக்கேற்றதொரு பிரஸாதமே! சிறுவயதிலிருந்து உபயோகித்தல் மிகத் தரம். நாங்கள் ஐந்து வருஷகாலமாக இதை உபயோகித்து வருகிறோம்.

(கையொப்பம்) வி. குப்புசாமி ஐயர்.

மாத உபயோகத்துக்குப் போதிய கேசவர்த்தினி விலை அண 12; கேசவர்த்தினி ஷாம்பு விலை அண 12; மேற் செலவு வேறு.

தென் இந்திய ரஸாயன சாலை,

லஸ் ரோடு, மயிலாப்பூர், சென்னை.

DIAMONDS ESTD 1910 JEWELLERY

"குலாபி," அடையாறு

பிரதாபம் மகாராஜா,

உங்கள் வைரங்கள் எனக்குப் பரம திருப்தியளித்திருக்கின்றன. அவை உயர்ரகமானவைமட்டுமென்றி, விலைகளும் மிதமானவை. உங்கள் பெருந்தன்மையையும், நேர்மையையும், யோக்கியத்தன்மையையும் நான் மெச்சுகிறேன். உங்களுக்கு மென் மேலும் வெற்றியுண்டாகுக

(ஒப்பம்) ஆர் வி. கே. எம் சூர்யராவ்,

சென்னை, பாபாலால் & கம்பெனிக்கு.

BAPALAL & Co

216. China Bazaar. MADRAS.



ஆமதாபாத்தில் மஹாத்மா காந்தியும் கான் அப்துர் கபார் கானும் வரவேற்கப்பட்ட காட்சி

மற்ற பக்கங்களில்

அதிஸாரமும் அதன் பரிஹார முறைகளும் 'நோயற்ற வாழ்வு' 2
லேடீஸ் கிளப் 5
ஸங்கீதப்பகுதி 6
விநோதக்கொத்து 9
ராதா (புதிய தொடர்கதை) 11
கண்ணோட்டம்- பிரமுகர்கள் 14
தென்னிந்திய பிரமுகர்கள் 15
பிரபஞ்ச வர்த்தமானம் 23
நாட்டு நடப்பு-சித்திரக் கண்ணாடி 27
இயற்கை நடிப்பு 31
ஜோதிர்மண்டலம் 33
அதிசயம் ஆனால் உண்மை 35
நல்லமகன் (சிறுவர் பகுதி, 36
கிருஷ்ண தேவராயர் 38

இந்திய வர்த்தமானம்

சங்கச் செலவுக்கு இந்தியாவின் பகுதி

சர்வதேசச் சங்கத்தின் பம்பாய்க் கிளை பின்கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறது:- சர்வதேச சங்கத்தின் பாராமரிப்புச் செலவு 923 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இதில் 55 பகுதிகளை இது வரை இந்தியா கொடுத்து வந்தது. இப்பொழுது இது 49 பகுதியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இது மூன்று வருஷங்களுக்கு அமுலிலிருக்கும். பிரிட்டனின் பங்கு 105 லிருந்து 108 ஆகவும், சோவியத்தின் பங்கு 79 லிருந்து 94 ஆகவும், பிரான்ஸின் பங்கு 78 லிருந்து 80 பங்காகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது.

* * * *

பாம்புக்கடிக்கு அதிசய மருந்து

பாலக்காட்டிலிருந்து ஒரு செய்தி நமக்குக் கிடைத்திருக்கிறது. அதை அப்படியே கீழே தருகிறோம்:—

பி. வி ராமய்யர் என்னும் வியாபாரி தம் நில அறுவடையைப் பார்வையிட்டுக் கொண்டிருக்கும்போது அவரை ஒரு ஸர்ப்பம் தீண்டியது. அவர் போட்ட கூச்சலைக் கேட்டு சங்குண்ணி நாயர் என்னும் மோட்டார் டிரைவர் 57 பெட்டைக் கோழிகளைப் பிடித்து வந்து அவற்றின் ஆசனத் துவாரத்தால் பாம்பு கடித்த விடத்தில் தேய்த்தார். 56 கோழிகள் விஷமேறி இறந்தன. 57-வது கோழி பிழைத்தது. ஸ்ரீமான் ராமய்யருடைய விஷ மிறங்கி விட்டதால் பிழைத்

அற்புதமாயிருக்கிறது. இந்தச் சிகிச்சை பலவிடங்களில் பலித்திருப்பதாகக் கேள்வி.

* * * *

ஹரிஜனங்களுக்கு மைசூரில் சம உரிமை

மைசூர் மஹாராஜா தமது அரண்மனையில் நடக்கும் தர்பார்களுக்கு ஹரிஜனங்கள் வர அனுமதி கொடுத்திருக்கிறார். இவரது உதாரணத்தைப் பின்பற்றிச் சரவண பெல்கோலாவைச் சேர்ந்த ஜெயின ஸ்வாமி ஹரிஜனங்களுக்குச் சந்திரகிரி குன்றுமேலேற அனுமதி கொடுத்திருக்கிறார். இக் குன்றின்மேல் தான் ஸ்ரீ கோமதீஸ்வரர் கோயிலிருக்கிறது. முன்பு இந்த மலைமீது ஹரிஜனங்களைத் தவிரமற்றெல்லா ஜாதியினரும் மதத்தினரும் ஏற அனுமதிக்கப்பட்டு வந்தார்கள்.

* * * *

காயக்கிலேச முனிவர்

ஸ்ரீ மிஸ்ரி லால்ஜி என்ற ஜைன முனிவர் ஜைனர்களுள் ஒற்றுமை யுண்டாகாத வரையில் உணவருந்துவதில்லையென்று சொல்லி சென்ற சுமார் 250 நாட்களாகப் பட்டினியிருந்து வருகிறார். கேவலம் நம்பிக்கையின் பேரிலேயே முனிவர் ஜீவிக்கிறார். உடம்பு வெறும் எலும்புக் கூடாகிவிட்டது. கால் கையை அசைக்கவும் திருப்பவும் அவரால் முடியவில்லையாம். சில நாட்களாக அவர் தண்ணீரும் அருந்துவதில்லையாம். உடலெல்லாம் எரிச்சலுணர்ச்சி இருந்து வருகிறதாம்.

வையும் மங்கிவிட்டது. ஆயினும் நவம்பர்மாதம் 23-ந் தேதிக்கு முன் தம் பிராணன் போகாதென அவரே சொல்லியிருக்கிறார்.

முனிவரின் சிஷ்யரான ரோஷன் லால்ஜியும் 27 நாட்கள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்

1937-ஹூ காலண்டர்கள்.
1000-க்கு ரூ. 30.

மூவர்ணப் படங்களடங்கிய காலண்டர்கள்; தேதிகளுடன் டின்னில் அமைக்கப்பட்டவை. 1000க்குரூ.30. பாக்கிங், தபால் செலவு, அனுப்பும் சார்ஜு முதலியன பிரத்தியேகம். நல்ல கமிஷன் பேரில் ஒவ்வொரு நகரத்திலும் ஏஜண்டுகள் தேவை.

Central India Trading Co.,
14/2, Old China Bazar Street,
Calcutta. (S. M.)

"ஸங்கீத அபிமானி"

சென்ற இரண்டு வருஷமாக ஸங்கீதத்துக்கென்றே நடத்தப்பட்டு வரும் ஒரு உயர்தர மாதாந்தப் பத்திரிகை.

உள்நாட்டு வருடச் சந்தா ரூ. 1—8.
வெளிநாட்டு ,, ரூ. 2—0

1935-ம் வருஷத்திய காலிகோ பயிண்ட் செய்த வால்யும் விலை ரூ. 3

ஸங்கீத அபிமானி ஆபீஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

ஜகத்ரக்ஷக
ஸ்ரீ ஷண்முக யந்திரம்
125,6600. ஜனங்கள் போற்றுவது
பரீக்ஷை வெற்றி, ஜீவன விருத்தி, சொற்பன மிரட்சி, சத்துரு அடக்கம், வழக்கு ஜெயம், புத்திர விருத்தி, குடும்ப ஒற்றுமை, நோய்பேய் ஒழிதல், யந்திரம் 1க்கு ரூ 2.
மாந்திரீக மருத்துவ ஆபீஸ்,
வாலாஜாபாத், P.O, S.I.R. சென்னை.

"மாடர்ன் டயமண்ட்ஸ்"

ஐரோப்பியா, இந்தியா வைரவியாபாரிகளால் போற்றப்பெற்றவை.
ஹைகோர்ட்டு நீதிபதிகள், ராஜாக்கள், ஜெமீன்தார்கள், பிரபுக்கள் முதலியவர்களால் உபயோகிக்கப்படுபவை.



இழைக்கப்பட்ட ஆபரணங்கள் அருமையான அமைப்பும், நேர்த்தியும், அழகும் மிகுந்தவை.



ஒரு முறை பரீக்ஷித்து உண்மை அறியுங்கள்.

வி. வி. ஆச்சார்யுலு & ஸன்,
S—63, பொன்னப்ப செட்டி தெரு, பார்க் டவுன், மதராஸ்.

"சேது பந்தனம்"



சென்னை ஓரியண்டல் பிலிம்ஸ் கம்பெனியார் சென்னை நேஷனல் மூவிடோன் ஸ்டூடியோவில் "ஸேதுபந்தனம்" என்ற தமிழ் பேசும் படத்தைத் தயாரித்து வருகின்றனர். அந்தப் படத்திலிருந்து சிலகாட்சிகளை இங்கு பிரசுரிக்கிறோம். ஸ்ரீமான் காட் அண்ணாஜிராவ், ஸ்ரீமான் பி. பி. ரங்காச்சாரி, எம். டி. பார்த்தசாரதி, ஸ்ரீமதி மோஹனம்பாள் ஸ்ரீமதி கண்ணம்மாள் முதலியோர் முக்கிய நடிகர்கள்.



(இடது பக்கம்)

லண்டன்நியூயார்க் நாடக மேடைகளில் பிரவித்தி பெற்றுள்ள மிஸ் பிலிஸ் க்ளேர். நமது மன்னர் பிரான், வேல்ஸ் இளவரசராக விருந்தபோது, இவருக்குச் சில புதிய நாட்டியங்களைக் கற்பித்தார்.



லண்டன் பர்லிங்டன் ஹௌஸில் கிரேக்க தேசப் புராதனப் பொருட்களின் காட்சியொன்று நடைபெற்று வருகிறது. அதில் படத்தில் காணப்படும் ஒரு தேவதையின் தந்த விக்ரஹம் வைக்கப்பட்டிருக்கிறது. இது எழு அங்குல உயரமிருக்கிறது. இந்த விக்ரஹத்தின் விலை 1,000 பவுன்.

ஸ்பெயின் எல்லைப்புறத்தில் சமீபத்தில் பிரெஞ்சு எல்கையிலேயே பிரெஞ்சு அதிகாரிகள் சோதனை நடத்தியபோது சில 'டம் டம்' குண்டுகளும் சாதாரண குண்டுகளடங்கிய பெட்டிகளும் கிடைத்தனவாம். இவை ஸ்பெயின் சர்க்காருக்கு அனுப்பப்படவிருந்தவை என்று கூறப்பட்டது. 'டம் டம்' குண்டுகள் திரேகத்திற்குள் புகுந்து அங்கேயே தங்கிப் பிறகு வெடித்துத் துன்பம் விளைவிக்கும். இடது பக்கப்படத்தில் 'டம் டம்' குண்டுகளின் இரு தோற்றங்களைக் காணலாம்.

(இடது பக்கம்)

சமீபத்தில் வியன்னாவில் ஆஸ்திரிய சான்ஸலர் ஷூஸ்னிக் 3,50,000 பேர்களடங்கிய படை அணிவகுப்பைப் பார்வையிட்டுப் பேசியபோது எடுத்த படம். பொது ஜனங்களின் நிலைமையை உயர்த்துவதாக வாக்குறுதியளித்து அதற்கான வழிகளில் சர்க்கார் முயற்சி செய்வார்களென அவர் கூறினர்.

ஜெர்மன் யுத்தக் கப்பல் "ஷெல்வீன்". இது உலக யாத்திரைக்காகப் புறப்பட்டிருக்கிறது. வில்ஹெம் ஷேவன் துறைமுகத்திலிருந்து புறப்பட்டபோது எடுத்த படம்.

பெய்ஸ்பூர் காங்கிரஸ்
ஸ்திரீ தொண்டர்கள் பயிற்சி

காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் பெய்ஸ்பூரில் நடைபெறும். அதற்காகப் புனாவில் ஸ்திரீ தொண்டர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சி பெறுகிறவர்கள் தலைவி ஸ்ரீமதி ப்ரேமாகாந்த க் என்பவருடன் காணப்படுகின்றனர்.





தடியை வைத்துக்கொண்டு கவாதுப் பழகுகின்றனர். (இடது பக்கம்) தொண்டர்கள் அணிவகுத்துச் செல்லுகின்றனர்.

தொண்டர்கள் பழகிவரும் மற்றொரு விதமான கவாத்து,



சுமார் 250 நாட்களாக உண்ணாவிரதமிருந்து வரும் ஜெயின முனிவர் மிஷ்ரிலால்ஜி.

பிரபஞ்ச வர்த்தமானம்

மாட்ரிட் சர்க்கார் வெளியேற்றம்

ஸ்பானியக் கலகக்காரர்கள் மாட்ரிட் நகருக்குள் பிரவேசித்துவிட்டனர். ஸ்பெயின் சர்க்கார் வாலன்ஸியாவிற்குச் சென்றுவிட்டனர். அங்கிருந்து கொண்டு அவர்கள் கலகக்காரர்களை எதிர்ப்பார்கள். வெகு சீக்கிரத்தில் மாட்ரிட் கலகக்காரர் வசம் போய்விடுமென்று கூறப்படுகிறது. மாட்ரிட் அவர்கள் வசம் போய்விட்டால் கலகம் நின்றுவிடும் என்று சொல்வதற்கில்லை. இன்னும் சிலவிடங்கள் சர்க்கார் வசமே இருந்து வருகின்றன. அங்கு கோர யுத்தத்தை எதிர்பார்க்கலாம். மாட்ரிட்டைக் கலகக்காரர் கைப்பற்றியவுடன் ஜெர்மனி, இதாலி, போர்ச்சுகல் ஆகிய நாடுகள் பிராங்கோவின் சர்க்காரை அங்கிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

* * * *

காந்திஜியின் செல்வாக்கு

இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த தென்னாப்பிரிக்கா தூதுக்கோஷ்டி தென்னாப்பிரிக்காவுக்குப் போய்ச் சேர்ந்துவிட்டது. அதன் தலைவரான மிஸ்டர் ஹாப்மியருக்குப் பிரிடோரியாவில் ஒரு உபசாரப் பத்திரமளிக்கப்பட்டது. அதற்கு அவர் பதிலளிக்கையில் பின்வருமாறு கூறினர்:—

"இந்தியா அரசியல் குழப்பமும், ராஜீயச் சீர்திருத்தங்களை எதிர்ப்போரும் நிறைந்த ஒரு நாடாக இருக்குமென நான் எதிர்பார்த்தேன். ஆனால் உண்மையில் அரசியல் குழப்பம் அங்கிருப்பதைவிடத் தென்னாப்பிரிக்காவில் மிக்க அதிகமாயிருந்து வருகிறது.

இந்தியா வறுமையும், அசுத்தமும் நிறைந்த நாடாக இருக்குமென்று எண்ணியிருந்தேன். அங்கு வறுமையும் அசுத்தமும் இருப்பது உண்மையேயாயினும், சமூகத்தைச் சீர்திருத்தவும், பொது சுகாதாரத்தை அபிவிருத்தி செய்யவும் அங்கு நடைபெறும் முயற்சிகள் பிரமிக்கத் தக்கவாறு வெற்றியடைந்து வருகின்றன.

இப்பொழுது இந்தியாவில் எவ்விதத்திலும் ஒடுக்க முடியாத ஒரு தேசியப் புத்துணர்ச்சி தோன்றியிருக்கிறது. காந்திஜியின் செல்வாக்கெல்லாம் மறைந்துவிட்டதென்று சிலர் கூறுவது உண்மையன்று. கோடிக் கணக்கான ஜனங்கள் அவரது செல்வாக்குக்குட்பட்டவர்களாகவே இருக்கின்றனர். அவர் ஒரு வார்த்தை சொன்னால் போதும். அந்த க்ஷணமே இந்தியா முழுதும் ஒரே ரத்தக் கடலாகிவிடும்.

* * * *

பாலஸ்தீன ராயல் கமிஷன்

பாலஸ்தீனத்தகராறுக்கான காரணங்களை விசாரிக்க லார்டு பீல் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள ராயல் கமிஷன் லண்டனை விட்டுப் புறப்பட்டிருக்கிறது. இந்தக் கமிஷனை அராபியத் தலைவர்கள் கமிட்டி பஹிஷ்கரிப்பதென முடிவு செய்துவிட்டது. அக் கமிட்டி அராபியருக்கு விடுத்துள்ள ஒரு அறிக்கையில், "யூதர் குடியேற்றத்தை நிறுத்திவைக்க சர்க்கார் மறுத்துவிட்டனர். அந்த ஜாதியினர் மேன்மேலும் குடியேற அனுமதித்து வருகிறார்கள். எனவே அக் கமிஷனுடன் அராபியர் ஒத்துழைக்கக் கூடாது" எனத் தெரிவித்திருக்கிறது.

இது சம்பந்தமாக காமன்ஸ் சபையில், பொருளாதார காரணங்களுக்காகவோ பாலஸ்தீனத்தில் யூதர் குடியேற்றத்தை தற்காலிகமாகத் தடுப்பது விரும்பத் தக்கதல்லவென்றும், எனினும், ஆறு மாத காலத்தில் 1,800 யூதருக்கு மேல் குடியேற அனுமதிக்கக் கூடாதென ஹை கமிஷனர் சிபார்சு செய்ததை சர்க்கார் அங்கிகரித்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

* * * *

ரூஸ்வெல்ட் வெற்றி

அமெரிக்கத்தலைவர் மிஸ்டர் ரூஸ்வெல்ட் மறுபடியும் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். குடியரசுக் கட்சி அபேக்ஷகரான மிஸ்டர் லாண்டன் தோல்வியடைந்தார்

* * * *

ஹாஸ்யகரமாகப் பேசுகையில் மரணம்

சமீபத்தில் லண்டன் ஸெஷன்ஸ் தலைவராக நியமிக்கப்பட்ட ஸர் ஹென்றி கர்டிஸ் ஒரு விருந்தில் பேசிக்கொண்டிருக்கையில் இறந்துபோனார். அவர் அவ்விருந்தில் தமது தேக எடை 252 பவுண்டெனக் குறிப்பிட்டு ஹாஸ்யமாகப் பேசிக்கொண்டிருக்கையில் திடீரென மூர்ச்சையற்று விழுந்தார். சிறிது நேரத்திற்குப் பின் காலமானார்.

* * * *

முஸோலினி ஜெர்மனிக்குச் செல்வாரா?

கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முன் ஸீனர் முஸோலினியும் இதாலிய மன்னரும் ஹங்கேரிக்கு விஜயம் செய்வார்களென்று கூறப்படுகிறது. இவ்விஜயம் அந்நாடுகளிடையுள்ள ஒற்றுமையைக் குறிப்பதாகவிருக்குமாம். சென்ற சில வருஷங்களாக ஸீனர் முஸோலினி இத்தாலிக்கு வெளியே சென்றதில்லை. ஆகையால் அதை மீறுவதாயிருந்தால் முதன் முதலில் அவர் ஜெர்மனிக்கே செல்வாரென்று மற்றொரு செய்தி கூறுகிறது.

* * * *

வெண்குஷ்டம், பெரு வியாதி

இம்மருந்தை உபயோகித்தால் இவ்விரு வியாதிகளும் ஒழியும். ஹக்கீம்கள், வைத்தியர்கள், கவிராஜர்களின் வைத்தியத்தில் பலனேற்படாமல் போயிருந்தால்கூட இதை உபயோகியுங்கள். பலனில்லையேல் ரூபா 500 இனும். விலை ரூபா 2.

Vaidyaraj Akhil Kishore Ram, No, 32/5, P. O. Katrisarai (Gaya)

நரை மயிரை அகற்றுங்கள்

உங்களது தலைமயிர் வெகுகாலமாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் விவலேன் ஹேர் ஆயிலை உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே விவலேன் எண்ணெயை உபயோகியுங்கள். அதிக நரையில்லாவிடில் சிறிய பாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனம்.

சயண்டிபிக் பப்ளிஷிங்கம்பெனி,
(மெடிகல் டிபார்ட்மெண்டு, S. 15)
பவானிப்பூர், — கல்கத்தா.

மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—
ஜே. ஹெஸாரிமால் & கம்பெனி,
260, மைனபஜார் ரோட்,
ஸப் ஸ்டாக்கிஸ்டு:—
தாதா & கம்பெனி, மருந்து வியாபாரிகள், 52, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்.
செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்டு:—
பரேக் பிரதர்ஸ், ஜம்மா மஸ்ஜீத்

ஜீடித்துழைக்கும் தர்மவரம் சேலைகள்

D. R. புதிய மோஸ்தர்கள்

மாதிரிகளைப் பாருங்கள்.

இனி மோஹினி, இந்திராணி, சுனந்தா பார்டர், ஒரு பக்கம் பூனை தலைப்பு, ஒரு பக்கம் பெண்களுக்கு தலைப்புடன் கூடிய புடவைகளையே உபயோகியுங்கள்.

கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களுக்கு மாதிரி காப்பி புத்தகம் இலவசம்.

D. R. Narayanaswamy & Sons, Darmavaram (Anantapur Dt.)

ன்னை கல்வி மந்திரி குமார ராஜா முத்தையா செட்டியார் திருச்சி ஹோலி கிராஸ் ஸ்திரீகள் கல்லூரிக்கு விஜயம் செய்தார்.

து உடமைத் தலைவரின் தலை டிக்கப்பட்டது.

சன்ற 5-ந் தேதி காலை வினில், ஹாப்பர்க் பொது மைக் கட்சித் தலைவரான நார் ஆன்ட்ரியின் தலை டிக்கப்பட்டது. பலவரு ளுக்கு முன் நாஸிக் கட் ச் சேர்ந்த சிலரைத் கிக் கொன்றதாக இவர் குற்றஞ் சாட்டப்பட்டு தண்டனை விதிக்கப்பட் தது.

* * * *

ிமெண்டில்

னர் பிரான் பிரசங்கம்

சன்ற 3-ந் தேதி மன்னர் ான் பார்லிமெண்டைத் து வைத்து பிரபுக்கல யினரும் காமன்ஸ் சபை டங்கிய கூட்டத்தில் ாசனத்திலிருந்து ஒரு பிர ம் செய்தார்.

ந்தியாவைப்பற்றி அவர் ருமாறு குறிப்பிட்டார்:— த வருஷம் மேமாதத் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய ாடு லண்டனில் கூடும். எனது பல்வேறு அர ங்களின் பிரதிநிதிகள் பேசுவதன் விளைவாக குடிகளை வரிடையும் ்கிய ஒத்துழைப்பு எற் படுமென எதிர்பார்க்கிறேன். அம்மகாநாடும் எனது மகுடாபிஷேகமும் ஒரே சமயத்தில் நடைபெறக்கூடுமென்பதுபற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன்.

எனது மகுடாபிஷேகம் நடந்தேறியபின், மீண்டும் எனது இந்திய ராஜ்யத்திற்கு விஜயம் செய்ய உத்தேசித்துள்ளேன். அங்குள்ள சுதேச மன்னர்களுக்கும் ஜனங்களுக்கும் நான் ஏகாதிபத்திய அரசுரிமையை ஏற்றுக்கொண்டிருப்பதை, எனது தந்தையைப்போல் நானும் அறிவிப்பதென எண்ணியிருக்கிறேன்.

புதிய இந்திய அரசியல் சட்டத்தில் மாகாணங்களைப் பற்றிய பிரிவுகளும், பர்மா அரசியல் சட்டத்தின் பிரிவுகளும் அடுத்த எப்ரல் மாதம் அமுலுக்கு வரவேண்டுமென நீங்கள் முடிவுசெய்திருக்கிறீர்கள். இம்முடிவை நிறைவேற்றுவதற்கவசியமான பல்வேறு ஆக்ஞா பத்திரங்களின் நகல்கள் உங்களுடைய அங்கிகாரத்திற்காக உங்கள் முன் சமர்ப்பிக்கப்படும். இனி இந்திய ஜனப் பிரதிநிதிகளுக்கும், பர்மியப் பிரதிநிதிகளுக்கும் ஏற்பட்டிருக்கும் பெரும் பொறுப்பை அவர்கள் சித்தசுத்தியுடன் சிறக்கநிறைவேற்றி வைப்பாரென நான் உறுதியாக நம்புகிறேன்.



ன்னை சிறுமிகள் சங்கீதப் பள்ளிக்கூடத்தின் கிளை ஸ்ரீமான் டி.

"குப்த மந்திரம்"

ரூபா 100 இனம்.

லக்ஷம் லக்ஷமாகப் பணத்தைச் செலவழித்துச் சாதிக்க முடியாத காரியங்களை இந்த மந்திரத்தை ஏழு தடவை ஜபித்துச் சாதிக்கலாம். கஷ்டமெதுவுமில்லை முன் தயாரிப்பு அவசியமில்லை யாவரும் உங்களை நேசிப்பார்கள். இது ஓர் 'வசீகரண மந்திரம்' உங்களுக்கு அதிர்ஷ்டமுண்டாகும்; வியாஜ்யத்தில் வெற்றியும், வியாபாரத்தில் லாபமும் அளிக்கும் பலனில்லையென நிரூபிப்பவர்க்கு ரூ 100 இனம். தபால் செலவு உள்பட ரூ 2-7.

SIDDHA MANTRA ASHRAM No 33/C P.O. Katrisarai (Gaya)

கொசு வலைகள்.



பிரத்யேக வலுவான வெள்ளை வலைகளானவை. நல்ல தையல். நீடித்துழைப்பவை. வெளுத்த பச்சை, நீலம், சிகப்பு, மஞ்சள் முதலிய பல கலர்களிலும் கிடைக்கும். வெள்ளையா கலரா என்பதைக் குறித்தெழுதுக.

நீளம் அடி	அகலம் அடி	உயரம் அடி	சாதா ரூ.	உயர்ந்தது ரூ.	மேலானது ரூ.
6	3½	3½	1-4	1-8	2-4
6	4	4	1-8	1-12	2-6
6½	4½	4½	1-12	2-4	2-12
7	5	5	2-4	2-12	3-4
7½	6	6	2-12	3-4	4-4

தபால் செலவு தனி. பாக்கிங் இலவசம். இலவசம் ஏககாலத்தில் மூன்று வலைகள் வாங்குவோருக்கு 6X4X4 வலை ஒன்று இலவசம்.

Bally Mosquito Net Factory, P. O. Bally Dist. HOWRAH.

உபத்திரவிக்கும் மூலச்சூடு

அற்புத நிவாரணி

ஜாம்-பெக் அற்புத நிவாத்தி அளிக்கிறது.

மூலச்சூடு-மகாக் கொடிய வியாதி; குடல்கோளாறால் ஏற்படுகிறது; இதன் வலியினால் ஏங்கி விடாதீர்கள். தவறாமல் ஜாம்-பெக் மெழுகு தடவுங்கள். ஆச்சரியமான நிவாத்தி ஏற்படும். நமைச்சல், சொறி, சிரங்கு, புண், கத்தி வெட்டுகள், ரணம் முதலியவற்றிற்கு ஜாம்-பெக் இணையற்றது. பெட்டி 1 க்கு ரூ. 1 அல்லது ரூ. 2—4 வீதம் எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும். ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா கம்பெனி, பார்க் டவுன், மதராஸ்.

மிருகக் கொழுப்பற்றது

ஜாம்பெக்

Zam-Buk



உங்கள் கூந்தல் ஒளியிழந்திருக்கிறதா?—அதனால் உங்களுக்கு வயது அதிகமாகிவிட்டாற்போல் தென்படுகிறதா?—அப்படியாயின் உங்கள் மருந்து வியாபாரியிடம் ஓடி ஏதாவதொரு சாயத்தை வாங்கித் தடவிக்கொள்ளாதீர்கள். கேஷ்கலாவை உபயோகியுங்கள். அற்புதமான கூந்தல் லோஷன்.

Obtainable from:—

அப்பா & கம்பெனி, சைனாபஜார் ரோட், மதராஸ் வி. ஜே. சேத், பந்தர் தெரு, மதராஸ் டி. ஷேகுஸ்தான் & கம்பெனி, டெங்களூர் ஸி & மி கண்டோன்மெண்டு. ஸ்ரீ கணேஷ் மார்ட், ராஜா தெரு, கோயமுத்தூர். எக்ஸ்-பி-பேல்வா, பிரின்ஸ் தெரு, கொழும்பு.

Further Inquiries to:—
KESHKALA CHEMICAL CO P.O. Box No. M)5506. Bombay 14.

தென்னிந்தியப் பிரமுகர்கள்

(16-ம் பக்கத் தொடர்ச்சி.)

நாத நாராயண மாண்ட்லீக் ஸி எஸ் ஐ, ஸர் மங்கள்தாஸ் நத்துபாய் முதலியவர்களும், கல்கத்தாவில் ராஜா டாக்டர் ராஜேந்திரலால் மித்ரா, தாரா நாததர்க்க வாசஸ்பதி, மஹாராஜா ஸர் ஜோதிந்திர மோஹன் டாகூர், மஹாராணி ஸ்வர்ணமயி, முதலியவர்களும் சென்னையில் ராஜா ஸர் டி மாதவராவ், திவான்பஹதூர் ரகுநாதராவ், ராய் பஹதூர் பி அநந்தாசார்லு, ஸர் வி பாஷ்யம் அய்யங்கார், திவான் பஹதூர் ஸ்ரீநிவாஸ ராகவய்யங்கார் போன்றவர்களும் இவரை மிகவும் மதித்து வந்தனர்.

ஜஸ்டிஸ் டிலாங்கின் வற்புறுத்தலுக்கிணங்கி இவர் பம்பாயில் ஒரு வருஷகாலம் தங்கியிருந்தார் "இவர் போஜராஜனின் சபையில் இருந்து வந்த பண்டிதர்களுக்கு நிகரானவர்" என பத்திரிகைகள் அச்சமயம் எழுதின. இவர் பரமவைதிகராக விருந்து வந்த போதிலும், தீவிரமான கொள்கைகளைக் கொள்ளாமல் இருந்து வந்தவர். மேனாட்டிலும் இந்நாட்டிலும் காணப்படும் சிறந்த குணங்கள் இவரிடம் அமைந்துள்ளன என்று "மதராஸ் மெயில்" பத்திரிகை நிருபர் ஒரு சமயம் குறிப்பிட்டார். சம்ஸ்கிருத கிரந்தங்களைப் பற்றியும், மத விஷயங்களைப் பற்றியும், சாஸ்திரீயத்தைப்பற்றியும் இவர் செய்து வந்த உபந்யாஸங்களைக் கண்டு யாவரும் பிரமித்தனர். இவர் நிகாற்றவராக ஜ்வலித்து வந்தார்.

1878-ல் பம்பாய் கவர்ன்மெண்டு காலேஜ் சம்ஸ்க்ருத பிரதான ஆசிரியர் பதவி இவருக்குஅளிக்கப்பட்டது. இவர் இதை ஸ்வீகரிக்க மறுத்து விட்டார். கல்கத்தா பிரசிடென்சி காலேஜில் சம்ஸ்கிருத ஆசிரியராக விருந்த மஹா மஹோபாத்யாய மஹேஸசந்திர நியாய ரத்னர் இவர் அப்பதவியை அலங்கரிக்க இஷ்டப்பட்டால் தாம அதை ராஜீநாமாச் செய்துவிட சித்தமாக விருப்பதாகவும் தெரிவித்தார். ஆயினும இவர் உத்தியோகம் ஏற்றுக் கொள்வதைச் சிறிதும் விரும்பவில்லை. இதனின்றும் இவரது உண்மைக்குணம்புலப்படும். தம்மையண்டிவரும் சிஷ்யர்களுக்குப் பாடத்தைச் சொல்லி, சித்தாந்த ப்ரசாரம் செய்ய வேண்டுமென்பதே இவரது பூரணநோக்கமாக விருந்தது. புராதன முறையைப் பின்பற்றுவதிலேயே இவர் அவாக்கொண்டு பிரகாசித்து வநதார். தனலாபத்தை கருதியிருந்தால் இவர் எவ்வளவோ சம்பாதித்திருக்கக் கூடும். இவர் இப்பதவிகளை அங்கிகரித்துக்கொண்டிருந்தால் இவரது புகழும் பெருமையும் மேனாடுகளிலும் நிச்சயமாகப்பரவியிருக்கும் என்பதில் சந்தேகம் சிறிதும் கிடையாது.

"தற்காலத்திய கோஹினூர்கள்"

இவருக்கு மஹாராஜா ஸர் ஜோதிந்திரமோஹன்டாகூர்பிரபுவாலும், காஸிமபஜார் மஹாராணி ஸ்வர்ணமயி தேவியினாலும் தங்கப் பதக்கங்கள் சன்மானமாக அளிக்கப்பட்டன. "நேடிவ் ஒபினியன்" என்ற பத்திரிகை 1878-ம் வருஷம் ஜனவரிமாதம் 13-ந் தேதியன்று "தற்காலத்திய கோஹினூர்கள்" என்ற மகுடத்துடன் பின்வருமாறு எழுதியது:- 'தாவரப் பயிர்கள் மூலமாகவும் உலோகங்கள் நிறைந்திருப்பதன் மூலமாகவும் இந்தியா அதிகப் பெருமையடைந்திருக்கிறது. சென்ற ஞாயிற்றுக்கிழமை ஒரு அறிவாளியின் சிறந்த நட்பை நாம் அடைந்தோம். இத்தகைய அறிவாளிகளை நம் தேசம் கொண்டிருப்பதனால் நமது பெருமைஅதிகமாகிறதல்லவா? அந்தத் தினம் கோயமுத்தூர் ஜில்லா மேட்டுப்பாளையம் சாஸ்திரி ஸ்ரீரங்காச்சாரியார் சதாவதானம நடத்தி அதாவது தமது மனோசக்தியின் திறமையை ஸர் மங்களதாஸ் நத்துபாயின் கிருஹத்தில் நிரூபித்தார். இந்த விழாவிற்கு ஆனரபிள் விஸ்வநாத நாராயண மாண்ட்லீக் பலருக்கும் அழைப்புப் பத்திரங்கள அனுப்பினர். வந்திருந்தவர்கள் எல்லாரும் இவரது உன்னதமான ஞாபக சக்தியையும், சிறந்த அப்யாஸத்தையும் கண்டு பரமானந்தமுற்றனர்."

"கவி குஞ்சரம்" என்ற பட்டம்

"பம்பாய் சமாச்சார்" என்ற பத்திரிகை 1878-ம் வருஷத்திய ஜனவரிமாத இதழில் எழுதியதும் இங்கு எடுத்துரைக்கத்தக்கது "எந்த சந்தர்ப்பத்திலும் உடனே பலவிதமான சமாசாரங்களைப் பற்றிப் பற்பல விருத்தங்களிலும் சமஸ்கிருத சுலோகங்கள் கவனம் செய்வது, ஆங்கிலம், குஜராத்தி ஆகிய தமக்குத் தெரியாத பாஷைகளில் பத்தியங்களைச் சிலகுறிப்புகள்மூலம் எழுதி, அவற்றை அப்பாஷைகளிலேயே திரும்பவும் தவறில்லாமல் எடுத்துச் சொல்வது, வியாகரணம் முதலிய கடினமான சாஸ்திர விஷயங்களில் ஒரே சமயத்தில் பலருக்குச் சரியான பிரதி யுத்தரம அளிப்பது இவற்றையும மற்றும் பலவற்றையும் ஒரே சமயத்தில்கலபமாகச் சிரமமின்றி செய்து ஜயம் பெறுவது நம்மால் பிரமிக்கத்தக்கது. இதற்கும் மேலாகப் பண்டிதர் 40 விதமான விஷயங்களைப் பற்றி தமக்குப் பிரச்னைகளைப் போடும்படியும கேட்டுக்கொண்டார். இவைகள் மூலம் எமக்கு இவருடைய மூளையின் சக்திகள் விசேஷமாகத் தெரியவந்தன. இவருக்கு இத்தேசத்தில் இவற்றில் நிகர் ஒருவரும் இல்லை என்பதையும் நாங்கள் அறிந்தோம். இவர் போன்ற மதிப்பிடவியலாத நிதிகளினால் பெரும் சம்பத்துடன் விகசிக்கும் இந்தியாவின் பெருமையே பெருமை. சாஸ்திரி ஸ்ரீரங்காசாரிய ஸ்வாமி மிகவும் சாத்விகர்; மிகவும் அடக்கமான ஸ்வபாவமுடையவர்; எளிய வழக்கங்களை மேற்கொண்டிருப்பவர். நம்மால் அளவிடற்கரிய சிறப்பையுடைய இவர்போன்ற ஆச்சரியமான மேதாவிகளைக் கண்டு ஆனந்திப்பது மட்டும் போதாது; இவர்களை நம கண்கள் போல் பாவித்து, பரம பக்தியுடன் பூஜை செய்ய வேண்டும். இவருடைய மூளைச் சக்தி மேனாட்டில் காணப்படுமேயாகில் அது பிரமிக்கத்தக்க விதமாக அரசியல், ராணுவ நட்பங்கள், சாஸ்திரம், கற்கலை, கைத்தொழில் முதலிய முன்னேற்றத்திற் தச்சிரதனமான வழியில் உபயோகப்படுத்தப்படும். ஆனால் இந்தியாவிலோ வெனில், அது மலர்ந்து உடனே வாடிவிடுகின்றது. எமது ஒரே அபிஷ்டம் யாதெனில், இந்த மேதாவிக்கு இறைவன் அருள் புரிய வேண்டும் என்பதுதான்" இவருக்கு "கவி குஞ்சரம்" என்ற பட்டம் வழங்கப்பட்டது.

"அபிநவ காளிதாஸர்"

1879-ம் வருஷத்தில் நாஸிக்கில் ஒரு பண்டிதர்களின் சபை ஜஸ்டிஸ் ரானடே தலைமையில் கூடியது. அச்சமயம் எம்.

இந்தியா கவர்ன்மெண்டில் மெடிகல் ஸன்னதுடன் வைத்தியப் பட்டம் பெற்றவரும், கவர்ன்மெண்டு இந்திய வைத்திய கவர்னிங் பாடி & ஸென்டிரல் போர்டு மெம்பரும், கவர்ன்மெண்டு வைத்திய கலாசாலை & I. M. S. ஹாஸ்பிடல் பரீக்ஷாதிகாரியுமான

வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய

(Sastriar in Govt. Medical dress)

மஹா பில்வாதி லேகியம்

பித்தவாயு, கீல் பிடிப்பு, பித்த மயக்கம், பலஹீனம், அன்னத் துவேஷம், அஜீர்ணம், மலச் சிக்கல் இவைகளைக் கண்டிக்கும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 3. வி. பி. வேறு.

ஆனந்த பற்பொடி

குணம், ருசி, வாசனை இவைகளில் இது ஒன்றுதான் மார்க்கெட்டில் சிறந்தது. டப்பி 1-க்கு 0—2—9. ஒரு டஜன் கொண்ட பெட்டி 1-க்கு ரூபா 1—14—0. வி.பி.வேறு. எங்கும் கிடைக்கும்.

ஆனந்த பற்பசை

ஆனந்த பற்பொடியை பசை ரூபமாக செய்யப்பட்டிருக்கிறது. ட்யூப் 1க்கு 0-8-0 வி. பி. வேறு எங்கும் கிடைக்கும்.

கனம் சீப் ஜஸ்டிஸ் ஸர் M. வேங்கடசுப்பராவ், Kt., சென்னை ஹைகோர்ட்டு அவர்கள் எழுதுகிறார்:—

"நான் வைத்திய ஸித்தாச்ரமத்தைப் பார்வையிட்டேன். அது செய்து வரும் வேலைகளுக்கு எல்லா அபிவிருத்திகளையும் நான் கோருகிறேன. இவருடைய பிரயத்தினங்கள் இந்த பூர்வீகமான ஆயுர்வேதத்தை சாஸ்திரியமாக பயின்று அனுபவதசற்குக் கொண்டுவரும் மார்க்கத்தில் ஆதரவுக்கும் அபிவிருத்திக்கும் தகுந்தவைகளே."

கனம் ராஜா of சிவகங்கா அவர்கள் எழுதுகிறார்:—

"வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரிகளை மிக்க சந்தோஷத்துடன் நான் பொது ஜனங்களுக்கு சிபார்சு செய்கிறேன். இவருடைய மருந்துகளை உபயோகிக்கும்படி ஸந்தர்ப்பம் நேர்ந்து அவைகளை உபயோகித்து அம்மருந்துகளால் நான் ஜெயமடைந்து இருக்கிறேன். வைத்தியமுறையில் ஒவ்வொரு ஸந்தர்ப்பங்களிலும் அவர் எனக்கு பரிபூர்ணமான திருப்தியைக் கொடுத்திருக்கிறார்."

சகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி,

வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார்ரோட், மயிலாப்பூர், மதராஸ்

சேலத்தில் முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்ட நர்சரி தோட்டம்

3 வருஷத்தில் காய்க்கக்கூடிய ஒட்டுமாஞ்செடிகள், நட்டுபழ வாக்கச்செடிகளும் இன்னும் இதர செடிகளும் கிடைக்கும். இங்கிலீஷ் அல்லது நாட்டுக் காய்கறி, இங்கிலீஷ் புஷ்ப விதைகள், 20 சாம்பல் பாக்கெட் விலை ரூ. 2-10. சாம்பல் பாக்கெட்விலை ரூ 1-4 கேட்லாக் இனாம்.

ச. கோ. இ. காதர்மீரா சாயபு, ஹெட் நர்சரி தோட்டம், சேலம்.

தமிழ்நாட்டில் குறைந்த சந்தா மாதப்பத்திரிகை

"சித்தன்"

ஒன்றே கட்டுரைகள், கதைகள், ஹாஸ்யம், உலக விநோதம், வைத்தியக்குறிப்பு சினிமா விமர்சனம், முதலியனகொண்டது மாதிரிப்பிரதி இனாம். 3000 பிரதிகள் வெளியாகின்றன. விளம்பர விகிதம் குறைவு. சந்தா உள்நாடு அணா 8. வெளிநாடு 1.

மானேஜர், சித்தன், பழனி.

ஞர்டி என்பார் சொன்ன தாவது:—“கோயமுத்தூர் பண்டித ஸ்ரீரங்காச்சாரிய ஸ்வாமிபோன்ற நைபுண்ணியம் வாய்ந்த பண்டிதரை நாம் இதுவரை தக்காணத்தில் கண்டதில்லை. சாஹித்யம் முதலிய சம்ஸ்கிருத இலக்கியப் பகுதிகளில் சிறந்த 'மேதாவியான அவர் நம்மைப் பிரமிக்கச் செய்கின்றார். நம்முன்பு அவர் இந்திய தத்துவத்தைப்பற்றி சம்ஸ்கிருதத்தில் பல உபந்யாஸங்கள் செய்திருக்கின்றார். இந்தப்பண்டிதர்பிரிட்டிஷ் ஆஸ்தானத்தின் காளிதாஸர் என்று நாம் சொல்லலாம். பரிபூரண ஞானம் பெற்றுள்ள இவர் போன்றபண்டிதர்களைக் காணுவது மிகுந்த திருப்தியைத் தருகின்றது” இச்சமயம் இவருக்கு “அபிநவ காளிதாஸா” என்ற பட்டம் சபையால் ஏகமனதாக வழங்கப்பட்டது.

நம் அபிநவ காளிதாஸருக்கு பின்வருமாறு டாக்டர் ராஜேந்திரலால் மித்ரா 1880-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 26-ம்தேதியன்று கல்கத்தாவிலிருந்து எழுதினர்:—‘மஹாராஜா ஜோதிந்திரமோஹன் டாகூரின் மாளிகையில் தாங்கள் ஒரே சமயத்தில் பன்னிரண்டு கடினமான பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதாகச் சொன்னீர்கள். அவற்றுள் கொடுத்த சுலோகத்தை மாதிரியாகக்கொண்டு பல கடினமான விருத்தங்களில் அர்த்தம் பிசகாமல் சுலோகங்களைக் கவனம் செய்யவேண்டுமென்று நான் அளித்த காரியமும் ஒன்றாகும். என்னுடைய கிருஹத்தில், பல விஷயங்களுடன், ஒரு பிரெஞ்சு சீமானின் விருப்பத்திற்கிணங்கி, ஒரு பிரெஞ்சுப் பாட்டைச் சரியாகவும், முடிவிலிருந்து ஆரம்பித்து ஆரம்பம்வரையில் தலைகீழாகவும் தவறில்லாமல் திரும்பவும் சொல்வதற்கு ஒப்புக்கொண்டீர்கள். அந்தப்பிரெஞ்சுக்காரர் பாட்டைச் சொல்லியபின்பு, ஒவ்வொரு அடியையும் தாங்கள் எண்களால் குறிப்பிட்டுக் கொண்டு, இறுதியில் ஒப்பந்தத்திற்கேற்பத் தயங்காமலும் பிழையில்லாமலும் அப்படியே சொன்னது என்னையும் எனது நண்பர்களையும் பரமானந்தப் படுத்தியது இவை தவிர, தங்களுடன் சம்ஸ்கிருதக் கிரந்தங்களைப்பற்றிப் பேசுவதற்கு எனக்கு அநேகம் சந்தர்ப்பங்கள் கிட்டின. தங்களது விஸ்தாரமானதும் நிச்சயமானதுமான சம்ஸ்கிருத ஞானத்தை நான் என்றும்மறக்கமுடியாது. தங்களது பாண்டித்தியத்தைப் பற்றி எனக்கிருக்கும் மதிப்பு குறையாது.’

இவ்வாறு இந்தியா முழுவதும் பேரும் புகழுடனும் சுற்றிவிட்டு இவர் மீண்டும் தம்மிடம் வந்து சேர்ந்தார். பின்பு சென்னைராஜதானி முழுமையும் இவர் சுற்றினர் இவருக்கு சாஹித்தியத்தில் விசேஷ ... உண்டு. காளிதாஸ கிரந்தங்களை இவர் கரைகண்டவர். இவருக்குச் சங்கீத சாஸ்திரத்திலும் ஞானம் உண்டு. இவருக்கே இனிய சாரீரம் அமைந்திருந்தது. ஒரு சமயம் பரதநாட்டியத்தில் தமக்கிருந்த சிரேஷ்டமான ஞானத்தை இவர் எடுத்துக்காட்டியதுண்டு. இவர் தமது காலத்தை அமராவதி நதிக்கரையில் அநேக வருஷம் கழித்து வந்தார்.

“லோகாநந்தம்” பத்திரிகையின் ஆசிரியர்

சுமார் 1887-ல் சென்னை திருவல்லிக்கேணியில் “லோகாநந்த சமாஜம்” என்று ஒரு அறிஞர் சங்கம் நிறுவப்பட்டது. இந்தச் சபையார் நம்முடைய அரிய நூல்களைப் பலரும் அறிந்து ஆனந்திக்க வேண்டும் என்ற நோக்கத்தை மேற்கொண்டனர். இதற்காக இவர்கள் “லோகானந்தம்” என்ற சம்ஸ்கிருத ஆங்கிலப் பத்திரிகையை ஆரம்பித்தனர். இவர் தான் இப்பத்திரிகையின் ஆசிரியராகவிருந்தார். இவருடன் இப்பத்திரிகை ஆரம்பத்திற்காக முன்வந்தவர்கள் பிரஸிடென்சி காலேஜ் சம்ஸ்கிருதப் பண்டிதர் தாத தேசிக தாதாசாரியாரும் பண்டித சதாவதானி திருவஹீந்திரபுரம் ஸ்ரீநிவாஸாசாரியாரும், வக்கீல் டி. ரங்கராமாநுஜாசாரியாரும் ஆவார்கள். இவ்வுயர்ந்த பத்திரிகை வெகுகாலம் நீடித்திருக்கவில்லை என்பது விசனகரமான விஷயமாகும். இதே வருஷம் இந்தச் சமாஜத்தின் பிரதிநிதியாகச் சென்னையில் நடந்த காங்கிரஸ் மஹாசபைக்கு இவர் சென்றார்.

மஹாமஹோபாத்யாயர் பட்டம்

இவருடைய போதனமுறை மிகவும் சிரேஷ்டமானதாகும். இந்த ஸ்வாமிக்கு 1899-ம் வருஷம் ஜூன் மாதம பிரிட்டிஷ் துரைத்தனத்தார் “மஹாமஹோபாத்யாயர்” பட்டத்தைச் சூட்டினர். இந்தப் பட்டம் இவருக்குக் கிடைத்ததுபற்றி எங்கும் சந்தோஷம் மிகுந்திருந்தது. இவர் வட இந்தியப் பிரயாணத்திற்குப் பின் தமது கிராமத்திலேயே இருந்து வந்தார். இதுவே இவருக்கு இப்பட்டம் தாமதித்துக் கிடைத்ததற்குக் காரணமாகும்.

“ஹம்ஸ ஸந்தேஸ”த்திற்கு வியாக்யானம்

கனம் ராய்பஹதூர் பி. அநந்தாசார்லு இவரிடம் விசேஷ ப்ரீதி பூண்டவர். அவர் 1903-ல் ஸ்ரீ வேதாந்த தேசிகன் அருளிச் செய்திருக்கும், “ஹம்ஸஸந்தேஸ” காவியத்திற்கு இவரை வியாக்யானம் எழுதச்சொல்லி, மூலத்தையும் வியாக்யானத்தையும் வெளியிட்டார். இந்த வியாக்யானமானது இன்னும் அறிவாளிகளால் மிகவும் உயர்ந்தது எனப் பஹுமானிக்கப்பட்டு வருகின்றது. இது சில காலம் கலாசாலை வகுப்புகளுக்குப் பாடபுத்தகமாக வைக்கப்பட்டிருந்தது. இது போன்ற கிரந்தங்கள் தற்காலத்தில் பாட புத்தகங்களாக வைக்கப்படுவதில்லை என்பது நிந்தைக்குரிய விஷயமாகும். இவர் ஒரு கிரந்தமும் எழுதியது கிடையாது.

முக்கிய சிஷ்யர்கள்

நம் மஹாமஹோபாத்யாயர் தமது பிற்காலத்தை ஸ்ரீபாஷ்ய ப்ரவசனத்தில் கழித்து வந்தார். இவரிடம் அநேகர் சிஷ்டர்களாகவிருந்து பெருமையடைந்துள்ளனர். அவர்களுள் முக்கியமாக மஹாமஹோபாத்தியாய அபிநவ பட்டபாண பண்டிதராஜ ஆர். வி. கிருஷ்ணமாச்சாரியாரையும் மஹாமஹோபாத்யாய சாரஸ்வதசர்வக்ஞ தட்டை ஸ்ரீநிவாஸாசாரியாரையும் குறிப்பிடலாம். இவரது முதல் தாயாதிகளான சிலரும் இவரிடம் படித்தவர்கள். கோயமுத்தூர் வக்கீல் நடாதூர் தேசிகாசாரியர் இவரிடம் முறையாக எல்லாப் பகுதிகளையும் பாடம் கேட்டவர். தேசிகாசாரியர் இவரது “ஹம்ஸஸந்தேஸ” வியாக்யானத்திற்கு ஆங்கிலத்தில் அர்த்தத்தைப் பலருக்கும் பிரயோஜனப்படுமாறு உதவியுள்ளார். எண்டோமெண்ட் போர்டு மாஜி கமிஷனரும், உபய வேதாந்த ப்ரவர்த்தகரும், ஸ்ரீவைஷ்ணவ சமூகத்தை அலங்கரிப்பவருமான ஸ்ரீமான் நடாதூர் ஸ்ரீநிவாஸாசாரியாரும் இவரிடம் விசேஷமாகப் பழகி, இவரது கலாஞானத்தின் ரஸத்தை மிக உட்கொண்டிருப்பவர். பின் கூறப்பட்ட இவ்விருவர்களும் மஹாமஹோபாத்யாயரின் நெருங்கிய பந்துக்கள். இவ்விருவரும் இவரிடம் ஸ்ரீபாஷ்யத்தை சம்பூர்ணமாக ப்ரவசனம் செய்தவர்கள்.

அபிநவ காளிதாஸ மஹாமஹோ பாத்யாய ஸ்ரீரங்காசாரிய ஸ்வாமி 1911-ம் வருஷம் மேமாதத்தில் தமது 68-வது பிராயத்தில் பரமபதமடைந்தார். இவரது தேகவியோகத்தினல் இத்தேசம் சம்ஸ்கிருத சேவைசெய்து வந்த அரிய மஹானை இழந்தது. இவர்போன்ற உத்தம புருஷர்கள் அடிக்கடித் தோன்றுவதில்லை!

உயர்ந்த
வைரங்கள்
T. R.
ஜோஷி & சன்ஸ்,
Diamond Merchants
38, ஏகாம்பரேசுவரர் அக்ரஹாரம
பி. டி. மதராஸ்

G. கன்னய்யா கம்பெனி
இரும்பு பெட்டி வியாபாரம்.

நெ. 137, பிராட் வே, மதராஸ்.

மியூச்சுவல்
அஷ்யூரன்ஸ் கம்பெனி,
லிமிடெட்.
தலைமை ஆபீஸ் :
187, மவுண்ட் ரோட், மதராஸ்.

நவீன, சாஸ்திர பூர்வமான தாராளத் தன்மை கொண்ட பாலிஸி ஒப்பந்தங்கள் எம்மிடம் கிடைக்கும் எல்லோரையும் திருப்தி செய்விப்பவை.
குறைந்த பிரீமிய விகிதங்கள்
டி. வி. ராமமூர்த்தி,
செக்ரிடரி.

HAVE A SOUND SLEEP

By using our Indian-made Mosquito curtains, highly approved by persons of every rank for their strong netting, durability and beautiful finishing.

PRICES.

				Ordinary.	Superior.	Best	
6'	x 3½'	x 3½'	Rs.	1- 0	1- 4	1- 8	each
6'	x 4'	x 4'	„	1- 4	1- 8	1-12	„
6½'	x 4½'	x 4½'	„	1- 8	1-12	2- 0	„
7'	x 5'	x 5'	„	1-12	2- 0	2- 4	„
7½'	x 6'	x 6'	„	2- 0	2- 4	2- 8	„

Purchaser of three will get one curtain 6' x 4' x 4' free. Packing Free.
POSTAGE EXTRA.
PRABHAT TRADING CO.,
12, Sikderpara Lane, Barabazaar,
CALCUTTA.

நஞ்சன்கூடு சத்னவைத்யசாலை
ச்யாவனப்ராச
சுவாச டானிக்
யுனைடெட் கன்ஸர்ன், பந்தர்தெரு, மதராஸ்
(குழந்தைகளுக்கு நம்பிக்கையான மருந்துகள் இடம்.)

நாட்டு நடப்பு — சித்திரக்கண்ணாடி

போபால் ராஜகுமாரி சென்ற வாரம் இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்தார்.

(வலது பக்கம்) பலத்த புயலும் மழையும் அடித்து டாபடலா நகர் மிகுந்த சேதமடைந்திருக்கிறது.



ஒலிம்பிக் விளையாட்டுகளில் கலந்துகொண்ட ஜப்பானியர் டோகியோ திரும்பியபோது ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

(வலது பக்கம்) ஸீனர் முஸோலினியின் மாப்பிள்ளையான ஸியானோ ஜெர்மனிக்கு விஜயம் செய்தார். அங்கு அணிவகுத்து நின்ற படைகளுக்குப் பிரதிவந்தனம் செலுத்துகிறார்.

ராதா

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் நன்றாய்ப் படித்திருப்பாள்.

அம:—(வணக்கத்துடன்) அம்மா, ராதா புத்திசாலி யென்பதை அன்றொரு நாள் அவளைப் பள்ளிக்கூடத்திற் கண்டபொழுதே நன்றாய் அறிந்துகொண்டேன்.

அநங்.—தம்பி, உங்களுக்கு இந்த ஊர்தானா?

அம:—இப்பொழுது இந்த ஊர்தான்; இதோ இருக்கிற ஒற்றைப்புளிதான். பூர்வீகம் பாண்டி தேசமென்று கேள்வி.

அநங்:—எனக்கும் பாண்டிதான். தங்கள் தாயார் தகப்பனார் எல்லாரும் இருக்கிறார்களா? தங்கள்கூடப் பிறந்தவர்களுண்டா?

அம:—அம்மா, இருக்கிறார்கள். கூடப்பிறந்தவர்கள் என்ன? நான் ஒருவன்தான். ஒரு தம்பியுமிருக்கிறான்.

அநங்:—அதென்ன தங்கள் பிதாவுக்கு இரண்டு தாரமா?

அம:—அல்ல. நான் என் அப்பாவுக்கு ஸ்வீகார புத்திரன். என்னைப் பெற்றோர் இருவரும் நான் சிசுவாயிருக்கும் பொழுதே போய்விட்டார்கள். அவர்களை எனக்குத் தெரியாது. என்னை ஸ்வீகாரம் செய்துகொண்ட பின்பு ஒரு குழந்தை பிறந்திருக்கிறது. அவனைத்தான் தம்பியென்றேன்.

அநங்:—அப்படியானாலும், ஸ்வீகாரப்பிதா சொத்தில் தங்களுக்கும் பாகமுண்டல்லவா? வளர்த்த பிள்ளைக்கும் ஏதாவது கொடுப்பார்களல்லவா?

அம:—(தனக்கும் ஸ்வீகாரப் பிதாவுக்கு மிடையிலுள்ள வருத்தத்தை வெளியிடாமல்) இஷ்டமிருந்தால் ஏதாவது கொடுக்கலாம். இல்லையென்றாலும் எனக்கு வழக்கில்லை அதை நான் விரும்பவுமில்லை.

அநங்:—ஆனால், அவர்கள் தானே தங்கள் செலவுக்குக் கொடுக்கிறார்கள்?

அம:—முன் கொடுத்து வந்தார்கள். இப்பொழுது எனக்குப் பள்ளிக்கூடத்தில் உபகாரச் சம்பளம் கிடைப்பதால், நான் அவர்களிடம் ஒன்றும் கேட்பதுமில்லை; அவர்கள் கொடுப்பதுமில்லை.

அநங்:— ஆயிரமிருந்தாலும், சுமந்து பெற்ற தாய் தகப்பனுக்கும் சும்மா எடுத்து வளர்ப்பவர்களுக்கும் வித்தியாஸமில்லையா? அவர்களிடமுள்ள பக்ஷம் மற்றவர்களுக்கு வருமா?

அம:—(தன் சொந்த மாதா பிதாவை நினைந்து வருந்தி) அம்மா, அது உலகவழக்கம் தானே? என்மீது கடவுள் ஒருவர் பக்ஷமாயிருந்தால் போதும். அவர்தான் என் தாயும் தந்தையும். (என்று துக்கத்துடன் தன் முகத்தைத் துடைத்தான். இந்தத் துக்கக் குறியைக்கண்டு ராதா அனுதாபத்துடன் அமரேசன் முகத்தை நோக்கினாள்.)

அநங்:—தம்பி, தங்களுக்கு மட்டுமல்ல; எல்லாக்குழந்தைகளுக்குமே கடவுள்தான் மாதாவும் பிதாவும். அவர் கிருபையில்லாமல், அரை நிமிஷமாவது ஒரு குழந்தையை நம்மால் வளர்க்க முடியுமா? ராதா, படிக்கவில்லையா?

என்று சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டாள். பின்பு, அமரேசன் இதுவரையும் ராதா படித்த புஸ்தகங்களேவையென்பதை விசாரித்தறிந்துகொண்டு இனி அவள் படிக்க வேண்டியவை இன்னின்னவென்று அவளுக்கு எடுத்துக்கூறி, தான் கொண்டுவந்திருந்த, "அரவிந்தன் துறவு" "பொற்றொடி" முதலிய சில நாவல்களையும் "மொழிநூல்" என்னுமொரு இலக்கணப் புத்தகத்தையும் கொடுத்து, ராதாவை வாசிக்கும்படிச்சொல்லிச் சுமார் ஒரு மணிநேரம் படிப்பித்துவிட்டு அவளிடம் அன்பாய் விடைபெற்றுக்கொண்டு போய்விட்டான். அவ்வாறே தினந்தோறும் வந்து படிப்பித்துவிட்டுப் போவான். சில சமயங்களில் அமரேசன் படிப்பிக்கும் விதத்தையும் அதை ராதா விவேகத்துடன் கற்கும் திறனையும் நந்தகோபரும் அநந்த கல்யாணியும் பக்கத்திலின்று பார்த்துச் சந்தோஷமடைவார்கள். மற்ற வேளைகளில் இருவரும் அமரேசனுடைய விவேகத்தையும் குணத்தையும்மிகவும் மெச்சிப் பேசிக்கொள்வார்கள். அவர்களுடன் ராதாவும் சேர்ந்து பேசுவாள். தாயின் உத்தரவுப்படி அமரேசனை மாமா என்றழைத்து வந்த

ராதா:—(ஒருநாள்) அப்பா, வாத்தியார் மாமாவுக்கு

அசல் புளு ஜாகர்

வைரங்கள்

இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட (CULTURE)

நல்முத்துக்கள்

கிடைக்குமிடம்:

சிமன்லால் பிரதாப் சந்த்

175, சைனாபஜார், மதராஸ்.

30ஆ பிரசித்தி பெற்றது

வாயுமுக்தா

வலி பைத்தியம் இவற்றிற்குச் சிறந்த நிவாரணி

ஆயிரக்கணக்கான ஸ்திரீகள்-பலவீனர்களும், கர்ப்பிணிகளும்—பிதற்றல், அழுகுரல் கிளப்பல், அடித்துக் கொள்ளுதல், நரம்பு பலவீனம், பித்தமயக்கம், வலி, இவற்றால் கஷ்டப்படுகிறார்கள். இவ்வளவையும் இம் மருந்து 24 மணி நேரத்தில் நிறுத்திவிடுகிறது. பிரக்ஞையின்மை, இழுப்பு, 10 நிமிஷத்தில் மறைகின்றன.

10 நாள் மருந்து ரூ. 2

30 நாளுக்கு ,, ரூ. 5.

தபால் செலவு தனி. ஆங்கிலத்திலேயே கடிதமெழுதுக.

C. L. NAMAWALLA

Palace Road, Baro[da]

பூச்சிகள் உங்களை வதைக்கையில்:—



இடுக்குகளில் 'பிளிட்' தெளியுங்கள். அவை அதைத் தொட்டு மடிகின்றன.

பிளிட்

FLIT

டையே வாங்குங்கள்.

விசேஷ கொல்லும் சக்தி கொண்டது

'பிளிட்' என்ற பெயரை வைத்துக்கொண்டு மார்க்கெட்டில் கிடைக்கும் போலிச் சரக்குகளை வாங்கி ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். நினைவிருக்கட்டும்-ஒரே ஒரு 'பிளிட்'தானிருக்கிறது கருப்புப் பட்டையுடன் கூடிய சோல்ஜர் கொண்ட மஞ்சள் டின்னிலேயே 'பிளிட்' கிடைக்கிறது. கறைபடாதது.

சோல்ஜர் இல்லாத டின் பிளிட் அல்ல

மாதம் எவ்வளவு சம்பளம் கொடுக்கிறீர்கள்?

நந்த:—தாயே, என்ன கொடுக்கவேண்டுமென்கின்ருய்? அரை ரூபாய் கொடுத்தாற் போதுமா?

ராதா:—அப்பா, நீங்கள் பொய்தான் சொல்லுகிறீர்கள். மாதம் எவ்வளவு?

நந்த:—இல்லை; இரண்டு ரூபாய் கொடுத்தாற் போதுமா?

ராதா.—நீங்கள் 250 ரூபாய் சம்பாதிக்கிறீர்களே? மாதம் பத்து ரூபாய் கொடுத்தாலென்ன? இப்படிப்பட்ட வாத்தியார் கிடைப்பாரா?

அநந்:—ராதாவுக்கு உபாத்தியாயர்பேரில் பக்ஷம் கொஞ்சமல்ல; வீட்டில் என்ன பலகாரம் செய்தாலும் வாத்தியார் மாமாவுக்குக்கொடுக்கவேண்டுமென்கின்ருள். புடவையெடுத்தாலும் நகைசெய்தலும் அவரிடம் அபிப்பிராயம் கேட்கவேண்டுமென்கின்ருள். இனி, மாப்பிள்ளை வீட்டுக்காரர் வந்தாலும் அவரிடம் அபிப்பிராயம் கேட்கவேண்டுமென்று சொல்வாள்போல் தெரிகிறது (என்று நகைக்கவும்)

ராதா :—(வெட்கத்துடன்) என்னம்மா? கேலிசெய்யாதே; சும்மா இரு.

நந்த:—தாயே, அம்மா சொல்வது மெய்தானே? உனக்குத் தாய் மாமன் இல்லாதபடியால், உபாத்தியாயர்தான் உனக்குத் தாய்மாமன். மாமனிடம் கேட்டுத்தானே பெண் கொடுக்கவேண்டும்? அது தான் அம்மா அப்படிச் சொல்லுகிருள்.

ராதா:—அப்பா, நீங்களுமா கேலிபண்ணுகிறீர்கள்? (என்று வெட்கத்துடன் பின்வாயிலுக் கோடிவிட்டாள். பின்பு)

அநந்:—என்? அமரேசன் நம்முடைய ஜாதியாயிருந்தால் ராதாவை அவருக்குக் கொடுக்கலாமே? அப்படியானல் ராதாவுக்கும் சந்தோஷமாயிருக்குமென்று நினைக்கிறேன்.

நந்த:—(நகைத்து) அப்படியா நினைக்கிருய்? நம்முடைய ஜாதியாயிருந்தாலுங்கூட, ராதா அவரை மணந்துகொள்ள விரும்பமாட்டாள். படிப்பிலுள்ள பிரியத்தினுல், உபாத்தியாயர் பேரிலும் பக்ஷமாயிருக்கிருளே தவிர, ராதா அவ்வளவு விவேகமில்லாதவளா?

அநந்:—என் அப்படிச் சொல்லுகிறீர்கள்? அவருக்குச்சொத்தில்லையென்ரு? அவளுக்குச் சொத்தில் பிரியமில்லையே!

நந்த:—இது நடக்கிற பேச்சா? சங்கதி வேறேயிருக்கிறது. அவன் செட்டியாயிருந்தாலுங்கூடக் குற்றமில்லையே?

அநந்:—செட்டியுமில்லாமல், பின்னேயென்ன?

நந்த:—அந்தப் பிள்ளையாண்டான் பிறப்பு வளர்ப்பெல்லாமே ஒருவிதம். இவரை ஸ்வீகாரம் செய்தவர்கள் நல்ல சைவச் செட்டிகள் தான். இவர் வேறே வகை.

அநந்:—வேறே வகையென்றல் எப்படி?

நந்த:—நீ ஒருவரிடமும் சொல்லவேண்டாம் வெளிக்குத் தெரிந்தால் குற்றம். இவனுடைய தாய்தகப்பன் இன்னுரென்றும் ஜாதியின்னதென்றும் ஒருவருக்குமே தெரியவில்லை ஒற்றைப்புளிச் சித்தாந்தம் செட்டியார் சென்னையில் வியாபாரம் செய்துகொண்டிருக்கும்பொழுது, அங்கே யாரோ ஒருத்தி ரகஸ்யமாய்ப் பிள்ளையைப் பெற்று ஒரு பண்டாரத்தியிடம் கொடுத்துவிட்டுப் போய்விட்டாள். அந்தப் பண்டாரத்தி சித்தாந்தம் செட்டியார் வீட்டு வேலைக்காரி. பிள்ளை மிகவும் அழகாயிருந்தபடியாலும் செட்டியாருக்கும் அந்தச் சமயம பிள்ளையில்லாதிருந்தபடியாலும், அவர் பெண்சாதி இந்தக் குழந்தையை யெடுத்து வளர்த்தாள். பிள்ளை அது முதல் இந்தக் குடும்பத்திலேயே சேர்ந்துவிட்டது. பின்பு சித்தாந்தம் செட்டியார் சென்னையிலிருந்து இங்கே வந்தபொழுது குழந்தையையும் கூட்டிக்கொண்டு வந்துவிட்டார். வந்தபின் ஒரு ஆண் குழந்தை பிறந்துவிட்டது. அது முதல் அவர் இந்தப் பிள்ளையாண்டானைக் கவனிக்கவில்லை போலிருக்கிறது. ஆனல், அவர் மனைவி ஆண்டாள் என்பவள் மட்டும் கணவனைக் காணமல் இவருக்கு ஏதாவது கொடுத்தனுப்புவாள்போலிருக்கிறது. இவனும் கொஞ்சம் மானி; புத்திசாலி; ஆகையால் அவன் ஒற்றைப்புளிக்கு அதிகமாய்ப் போகிறதில்லையாம்.

அநந் (மூக்கின்மேற் கையை வைத்துக் கொண்டு):—ஐயோ! பையனைப் பார்த்தால் ராஜகுமாரன் போலிருக்கிருன். பிறக்கிற இடத்தில் பிறந்திருந்தால் எப்படியிருப்பான்! நான் கேட்டதற்கு அவர் இதையெல்லாம் சொல்லவில்லையே?

நந்த.—சீ! பைத்தியக்காரி, இதையெல்லாம் சொல்வாரா? நீதான் கேட்கலாமா? இனிமேலும் கேட்டுவிடாதே!

அநந்:—நான் கேட்பேனு? என்ன அநியாயம்! பையன் முகத்தைப் பார்த்தால் சரியான மேல்ஜாதியென்றுதான் தோன்றுகிறது. என்ன குலமோ கடவுளுக்குத்தான் தெரியும் என்று பேசிக்கொண்டிருக்கும்பொழுதே அயலாள் வந்துவிட்டபடியால் நந்த

Tele:—"SIMILICURE" Box 43 CAL.

வெளிவந்து விட்டன!

ஹோமியோ புத்தகங்கள்

ஹோமியோ வைத்திய முறை

தத்துவம்

தெலுங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.

M. BHATTACHARYYA & Co.,
Economic Pharmacy, 84, Clive Street, CALCUTTA.

தமிழன்பர்களுக்கு ஓர் நல்விருந்து!
புதுமைக்கவி ஸ்ரீ பாரதியாரின் நூல்களைப் படித்து
ஆனந்தமடையுங்கள்.

1.	கவிதைகள் (8-பாகங்கள்)		ரூ. 2—8—0
2.	வசனங்கள் (6-பாகங்கள்)		,, 2—0—0
3.	கதைக்கொத்து		,, 0—8—0
4.	பகவத் கீதை		,, 0—8—0
5.	கட்டுரைகள் பகுதி	1 தத்துவம்	,, 0--10—0
	,, ,,	2 மாதர்	,, 0—8—0
	,, ,,	3 கலைகள்	,, 0—8—0
	,, ,,	4 சமுகம்	,, 0--12—0

6. **Bharathi and his works**
by Mr. C. Visvanathan, Brother of Bharathi 0 4 0

பாரதி பிரசுராலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

இன்றைய ஜலதோஷம்
நாளை நியுமோனியாவாகலாம்

ஜலதோஷம் தானே என்று அலட்சியமாக விராதீர்கள். அது நியூமோனியாவாக மாறிவிடலாம். தும்மலின் போதே மிஸ்டலை உபயோகிக்கவும்.

மிஸ்டல் ஜலதோஷத்தைத் தடுத்து, சுவாச கஷ்டத்தை அகற்றுகிறது. இலவச டிராப்பருடன் கூடிய ஒரு புட்டி மிஸ்டலை இன்றே வாங்கிக்கொள்.

Mistol
REG. TRADE MARK

ஜலதோஷத்தை முளையிலேயே கிள்ளிவிடுகிறது.

மின்சாரரசம்

சகல வியாதிகட்குப
தேவாமிருதம்
போன்றது.
புட்டி -க்கு ரூபா
மின்சார ரசம்
கம்பெனி, (லிட்)
சேலம்.

கோபர் வெளியே போய்விட்டார்.

அநந்தகல்யாணி அமரேசனுடைய கதையை நினைந்து ஆற்ருமையுடன் பெருமூச்செறிந்துகொண்டே தன் வேலைகளைப் பார்த்தாள். இவ்வாருக அமரேசன் ராதாவினுடைய அன்பை மட்டுமல்ல; நந்தகோபர், அநந்தகல்யாணி இருவருடைய அன்பையும், ஆதரவையும், இரக்கத்தையும்பெற்ருன். வீட்டில் ஏதேனும் விசேஷமான சமையல் நடந்தபொழுதும், பக்ஷணங்கள் செய்த பொழுதும், அநந்தகல்யாணி அமரேசனுக்குமொரு பங்கு வைத்திருப்பாள். தாய் தகப்பனில்லாத பிள்ளையென்ற காரணத்தினுல் அவன் மீது கொண்ட அன்பின் மிகுதியால் அநந்தகல்யாணி தன் வீட்டிலேயே போஜனத்தை வைத்துக்கொள்ளும்படி பல முறை வேண்டியும் அமரேசன் இணங்கவில்லை. தமது குடும்ப விஷயமான சங்கதிகளிலும் கூட நந்தகோபரும் அநந்தகல்யாணியும் அமரேசனிடம் கலந்துகொள்வதுண்டு. இவ்வாறு அமரேசன் ராதாவுக்குப் படிப்பித்துக்கொண்டு வரும்பொழுதே அவள் பெண்பாடசாலையில் பிரைமெரிப் பரீக்ஷை தேறிவிட்டபடியாலும சற்றே பெரியவளாய் விட்டபடியாலும், அவள் வீட்டிலிருந்துகொண்டு தமிழை நன்ருய்ப் படிக்கும்படி நந்தகோபர் உத்தரவு செய்தார். சிறிது காலத்திற்கெல்லாம் அமரேசன் அவளுக்குச் சாதாரணக் கல்வியைப்படிப்பித்து முடித்து, குறள், நாலடியார், பாரதம், ராமாயணம் முதலிய உயர்ந்த நூல்கள் படிப்பிக்கத் தொடங்கிவிட்டான். இத்துடன், ஆசாரசீர்திருத்த விஷயமாயும், மத விஷயமாமுள்ள கதைகளையும் உபந்நியாஸங்களையும், பத்திரிகைகளையும் வாசித்து அவற்றில் ராதாவுக்கு ருசி தோன்றும்படிச் செய்துவிட்டான். இவ்வாறு அமரேசனுடைய முயற்சியினுல் ராதாவின் அறிவு நாளுக்கு நாள் வளர வளர அவள் அமரேசன்மேற் கொண்டிருந்த அன்பும் பக்தியும் வளர்ந்து கொண்டேயிருந்தன. அவன் போதிப்பதே நீதியெனவும், அவன் ஒழுக்கமே நல்லொழுக்கமெனவும், அவன் யாரை மதிக்கின்ருனே அவர்களே பெரிய மனிதர்களெனவும், ராதாவின் மனத்திற் பதிந்துகொண்டது. சாஸ்திர விஷயமாயும், பொது விஷயமாயும் தனக்கும் தன் தாய் அநந்தகல்யாணிக்குமிடையில் மற்றக் காலங்களிலுண்டாகும் விளையாட்டு வியவகாரங்களையும் தர்க்கங்களையும் ராதா சாயங்கால நேரங்களில் அமரேசனிடம் சொல்லி, அவற்றைத் தீர்ப்புச் செய்யும்படிச் சொல்வாள். அந்தத் தீர்ப்பை அவளும் அவள் தாயும் சரியென்று ஒப்பி, வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருப்பாள்.

இப்படிப்பட்ட சமயங்களில் அநந்தகல்யாணி, "தம்பி, நீங்கள் ராதாவுக்கு இவ்வளவு தூரம் படிப்பித்துவிட்டீர்கள். அவளுக்கிசைந்த நல்ல நாயகனையும் நீங்களே தேடிக் கொடுக்கவேண்டும். இத்தனை படிப்பும் மணம்பெற வேண்டாமா!" என்பாள்.

அதற்கு அமரேசன், "அம்மா, தடையென்ன? அவளுக்கு மணி போன்ற நாயகன் கிடைப்பான் நானே கொண்டு வருவேன்" என்பான். இதைக் கேட்கும் ராதா நாணத்துடன் தலைகவிழ்ந்து ஒன்றையும் கேளாதவள்போலிருந்து விடுவாள். ஆனால், ஒரு எண்ணம் மட்டும் அவள் மனத்தில் நிகழும். அதாவது தனக்கு எந்த நாயகன் வந்தாலும்—தன் மாதா பிதாவால் குறிப்பிடப்பட்டவராயிருந்தாலும்கூட அந்த மாப்பிள்ளையைப்பற்றி அமரேசனும் சரியான அபிப்பிராயம் கொடுத்த பின்புதான் விவாகம் நடக்க வேண்டுமென்று ராதா எண்ணிக் கொள்வாள்.

(தொடரும்.)

ரூ. 500 இனும்!

திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும்.

உலகக் கியாதி வாய்ந்த எனது மருந்துகளை 15 தினங்களுக்கு உபயோகித்தால் எல்லாவிதமான திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும் நிரந்தரமாக நிவர்த்தியாகிவிடும். பற்பல டாக்டர்கள், கவிராஜர்கள், ஹக்கீம்களும் கைவிட்டதானுல்கூட பரவாயில்லை. எனது அற்புத மருந்துகளை உபயோகியுங்கள். பலனில்லை என நிரூபிப்பவருக்கு ரூ. 500 இனும். 7 நாள் மருந்து ரூ. 2—8; 15 நாள் மருந்து ரூ. 4. தபால் செலவு தனி

SRI SWAMI & Co,
(34) Panchpota, Bengal.

—நீலகிரி—

காப்பிக்கொட்டை

கீழ்க்கண்ட ரகங்களை சகல சார்ஜும் உள்பட சென்னை ராஜதானியில் அல்லது பம்பாய்க்குத் தெற்கேயுள்ள எந்த ஸ்டேஷனுக்கு வேண்டுமானுலும் அனுப்பப்படும்:—

— வி. பி. ரெயில்வே பார்சல் மூலமாய் —

10 lb எக்ஸ்ட்ரா போல்டு தட்டைக்கோட்டை	ரூபா	5—2—0
கூட்ஸ் வண்டி மூலமாக (Goods Train)		
1×30 lb மூட்டை நீலகிரி "O" சைஸ்	,,	14—4—0
1×30 lb மூட்டை ,, எக்ஸ்ட்ரா போல்டு	,,	12-11—0

இன்னும் இதர காப்பிப்பொடி டீ தினுசுகளின் விலை விவரங்களுக்கு :: :: கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :: ::

யுனைடெட் காப்பி சப்ளை கம்பெனி, லிமிடெட்.,
மானேஜிங் ஏஜெண்ட்ஸ்
T. ஸ்டேன்ஸ் & Co, Ltd., கோயம்புத்தூர்.

நஞ்சன்கூடு பல்பொடி
ட்ப்பி) I. D. L. No 61. மெடிகேடட் (அணு 4

நஞ்சன்கூடு பல்பொடி பாக்டெரியின்
ஜீர்சிப்
ஊக்கம் உற்சாகம் ஊட்ட
அஜீர்ண பித்த சமனி

வைடன்ஸால்
வீர்யவிருத்திக்கும் சுகநிதநிரைக்கும்

ஜகப்பிரசித்தி பெற்ற
ஆர். மூகம் அண்டு கம்பெனியாரின்
நெ. 1. மணிமார்க் பட்டணம்
மூக்குத் தூளை
உபயோகியுங்கள்.
TRADE MARK

1 நெ. வீசை 1-க்கு விலை ரூ.	4	0
2 நெ. வீசை 1-க்கு விலை ரூ.	3	8

ஏஜண்டுகள் தேவை:—
விலாசம்: ஆர் மூகம் அண்டு கம்பெனி,
நெ. 5, ஓல்டு ஜெயில் தெருவு, மதராஸ்

"குஜராத்சமாச்சார்" (தினப் பதிப்பு)
"பிரஜாபந்து" (வாரப் பதிப்பு)

[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]

குஜராத்தில் பிராபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்தினின்று பிரசுரிக்கப்படுபவை.

குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானுல் இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்.
ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்.

Manager, Gujarat Samachar & Praja Bhandhu
AHMEDABAD

வலுவூட்டும் சிறந்த டானிக்

வெப்ஸ்டர்ஸ் பாஸ்பாடம்

கிருஷ்ணராஜ் & கம்பெனி, மெத்தையில் ஆபீஸ்,
மருந்து வியாபாரிகள், சைனுபஜார் ரோட், மதராஸ்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்

புலிபோல் சீறிய துஷ்டபுத்தி, "என் துப்பாக்கியில் உள்ளவை போலிக் குண்டுகள் அல்ல, நிஜக் குண்டுகள் உள்ளன. என் பகைமையை நிரூபிக்கவே நான் வந்திருக்கிறேன்" என்று கோப நகைப்பு நகைத்து என்னை நோக்கித் துப்பாக்கியைச் சுட விரல்களை இழுத்தான்.

ஆனால் என் பக்கத்தில் நின்ற என் கண்மணியின் முகத்தில் தென்பட்ட மாறுதலை எப்படி விளக்குவது? அதில் ஒரு துளிக்கூட பயம் இல்லை. நிஷ்களங்கமான முகத்துடன் என்னை மறைத்துக்கொண்டு அப்பாதகன் முன் நின்றாள். அடுத்த நிமிஷம்....

* *

* *

இயற்கை நடிப்பு

——:——

"நியாயவாதி"

அன்று மத்தியானம் காண்பிக்கப்பட்ட சமூகப் பேசும் படத்தைப் பார்த்துவிட்டு நானும் என் நண்பன் பத்மநாபனும் டிராம் வண்டியில் ஏறினோம். பத்மநாபன் பத்திரிகை நிருபன். படத்தைப் பற்றி விமர்சனம் எழுதுவதற்காகவே அவன் என்னுடன் வந்திருந்தான்.

டிராம் வண்டியில் நான் பத்மநாபனை நோக்கி, 'படம் எப்படியிருந்தது?" என்று வினவினேன்.

பத்மநாபன், "மிகவும் நன்றாயிருக்கிறது என்பது எனது அபிப்பிராயம். கதாநாயகனும் கதாநாயகியும் மிகவும் திறமையாகவே நடித்திருக்கின்றனர். கதாநாயகி ஸந்தர்ப்பங்களுக்குத் தகுந்தாற்போலும், பாவ விரஸமில்லாமலும் 'ஆக்ட்' செய்திருப்பது போற்றத்தக்கது. உதாரணமாய் அவளது காதலனை அவன் பகைவன் அவள் முன் கொல்ல யத்தனித்த பொழுது அவள் பயந்து கூச்சலிட்டது தத்ரூபமான காட்சி போல் இருந்தது" என்றான்.

எங்கள் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த எங்களுக்குச் சற்று அருகாமையிலிருந்த மனிதன் திடீரென்று, எங்களை விளித்து, "மன்னிக்க வேண்டும்; அவள் அப்படிக் கூறியது இயற்கையானதென்பதை நான் மறுக்கிறேன். அவள் தன் உண்மைக் காதலைக் காட்டியிருக்கவேண்டுமானால் அப்படி நடித்திருக்க மாட்டாள்" என்றான்.

திடீரென்று இப்படித் தனது அபிப்பிராயத்தை வெளியிட்ட மனிதனை நானும் என் நண்பனும் உன்னிப்பாய் நோக்கினோம்.

அவனுக்கு வயது முப்பது அல்லது முப்பத்தைந்து இருக்கலாம்; ஒளியற்று மங்கிய அவன் முகம் அவன் வாழ்க்கையில் கொடுமையான துயரத்தையனுபவிப்பவன் என்பதைக் காட்டியது. அவனது மெல்லிய தேகமும் அழுக்கடைந்த ஆடைகளும் அவன் தரித்திரதேவியின் அடிமை என்று சாக்ஷி கூறின.

பத்மநாபன் பதில் கூற வாயெடுத்தான். ஆனால் அதற்கு முன் குறுக்கிட்ட அம்மனிதன், "நீங்கள் என்னைப்பார்த்து எத்தாளி செய்யலாம். 'நடிப்புக் கலையைப்பற்றி உனக்கு என்ன தெரியும்' என்று என்னைக் கேட்கலாம். ஆனால், எனது உண்மைக் கதையை நீங்கள் அறிந்தால் நான் கூறினது எவ்வளவு வாஸ்தவம் என்பதைத் தெரிந்துகொள்ளுவீர்கள்" என்றான்.

நான் "உமது கதையைக் கேட்க நாங்கள் ஆவலாய் இருக்கிறோம்; இதோ இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டது. வாருங்கள்; எதிரே இருக்கும் ஹோட்டலில் போய் சிற்றுண்டி அருந்தலாம். அப்பொழுது நீர் உமது கதையை சாவகாசமாய்ச் சொல்லுவீராக?" என்று அழைத்தேன்

எல்லோரும் இறங்கி ஹோட்டலிலுள்ள தனியறைகளிலொன்றையடைந்தோம். நான் வரவழைத்த சிற்றுண்டிகளையும் பானங்களையும் உட்கொண்ட வண்ணம் அவன் பின்வரும் கதையைக் கூறலானான்:—

"நான் பிறந்தது தெற்குச் சீமையில். என் பெயரை இங்குக் கூறவேண்டியது அவசியமில்லை. சிறு வயதிலேயே எனக்கு நாடகப் பைத்தியம் அதிகம். பள்ளிக்கூடத்திற்குப் போகாமல் தெருக்கூத்துகளைப் பார்ப்பதிலும் நாடகங்களைப் பார்ப்பதிலும் என்பொழுதைப் போக்குவேன். பதின்மூன்று வயதிலேயே நான் ஒரு நாடகக் கம்பெனியில் சேர்ந்துவிட்டேன். தெற்கு ஜில்லாக்களில் பல இடங்களில் அந்தக் கம்பெனி நாடகங்கள் நடத்தியது.

"நாளடைவில் நான் பிரதான பாகங்களைத் தரித்து நடிக்க ஆரம்பித்தேன். நல்ல சாரீரமும் பச்சவன்மையும் எனக்கு இருந்தமையால், ராஜபார்ட்டு வேஷங்களை வகிப்பது எனக்கு எளிதாயிருந்தது.

என்னுடன் நடித்த ஸ்திரீ நடிகை—அவள் பெயர் பத்மாவதி என்று வைத்துக்கொள்ளுங்கள்—என்னைவிட ஐந்து வயது இளையவள். எழில்வாய்ந்த மடநங்கை. நான் ராஜபார்ட்டில் நடித்த ஒவ்வொரு நாடகத்திலும் அவள் ஸ்திரீ பார்ட்டில் நடிப்பது வழக்கம். அவளுடன் நெருங்கிப் பழகிய எனக்கு அவள்மீது காதல் ஏற்பட்டது இயல்பேயன்றி வேறல்ல. அவளும் என்னைக் காதலித்தாள் என்பதைத் தெரிந்துகொண்ட நான் அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை.

எங்கள் கம்பெனியில் வேறொரு நடிகன் இருந்தான். அவன் பெயரைத் துஷ்டபுத்தி என்று வைத்துக் கொள்ளுங்கள். அவன் பெயருக்கேற்றாற்போல் பரம துஷ்டன். அவனுக்கு நல்ல எண்ணங்கள் கிடையா. அவனது சுபாவத்துக்கொத்த குரூரமான வேஷங்களில் அவன் எனக்கு எதிராய் நடிப்பது வழக்கம்.

பத்மாவதியும் நானும் தம்பதிகளாய் இல்லறம் நடத்துவதற்கு ஒரே தடைதான் இருந்தது. அது என்னவெனில், எங்கள் தரித்திரமான நிலைமையே. எனினும் கூடிய சீக்கிரத்தில் நாங்கள் போதுமான பணத்தைச்சம்பாதித்துக்கொண்டு நடிப்புத் தொழிலை விட்டுவிட்டு எதோ ஒரு குக்கிராமத்தில் நிம்மதியாய்க் குடித்தனம் செய்வதென்று இன்பகாமான மனக்கோட்டைகள் கட்டினோம்.

பேசும் பட மோகம் தமிழ் நாட்டின்மீது படையெடுத்த ஆரம்ப சமயம்; எங்களுக்குத் தெரிந்த ஒரு முதலாளி ஒரு படம் தயாரிக்க ஏற்பாடுகள் செய்தார். அப்படத்தில் கதாநாயகன் பாகம் எனக்கும் கதாநாயகி பாகம் பத்மாவதிக்கும் கதாநாயகனுக்கு விரோதியான கொடியோனது பாகம் துஷ்டபுத்திக்கும் கொடுக்கப்பட்டன. எனக்கும் பத்மாவதிக்கும் பெருத்த தொகைகள் சன்மானமாக வழங்கப்பட்டபடியால் படம் முடிந்தபின் நாங்கள் விவாகம் செய்துகொண்டு எனது சொந்த ஊருக்குத் திரும்புவது என்று முடிவு செய்தோம். ஆனால், அந்தோ! அது பகவானுக்குப் பொறுக்கவில்லைபோலும்!

ஸ்டுடியோவில் வேலைகள் மும்முரமாக நடக்கலாயின. எங்கள் டைரக்டர் மிகவும் சுறுசுறுப்பான மனிதர். ஒவ்வொரு நடிகரையும் நோக்கி அவர், "நீ இப்படி நிற்கவேண்டும், நீ இப்படிக் கையை ஆட்டவேண்டும், நீ இப்படித் தலையைச் சாய்த்துக்கொண்டு கோபமாய் நகைக்க வேண்டும்" என்றெல்லாம் உத்தரவுகள் போடும்போது பார்க்க வேண்டுமே அவரது அழகை! தனக்குத் தெரியாத விஷயம்

அமதாபாத் நகரில் சமீபத்தில் (குஜராத்தி) இலக்கிய மகாநாடு நடைபெற்றது. அதில் பிரஸன்னமாகவிருப்பதற்கு மகாத்மா காந்திஜியும்

ஒன்றுமில்லை என்பது அவரது திடமான நம்பிக்கை. நானும் என் காதலியும் எங்களது முழுத் திறமையுடன் நடிக்கப் பிரயாசைப்பட்டோம். எனக்கு எதிரியாகத் தோன்றிட துஷ்ட புத்தியும் மிகவும் ஊக்கத்துடன் நடித்தான் என்றே சொல்லவேண்டும். ஆனால், என்ன விபரீதம்; அவன் பத்மாவதி மீது காதல்கொண்டுவிட்டான். என்னைப் புருஷனாக வரித்த அவளது மனதைமாற்ற அவன் பலதடவைகள் முயன்றான். ஆனால், ஒரு விஷஜந்துவைக் கண்டு பயப்படுவதுபோல் பத்மாவதி அவனைக் கண்டு நடுங்குவாள். அவளை அவன் ஹிம்ஸிப்பதைப் பற்றிக் கேள்விப்பட்ட நான் ஒரு நாள் அவனிடம் சென்று "துஷ்டபுத்தி, நீ இனிமேல் பத்மாவதியிடம் நெருங்கிப் பேசினால் உன்னை சவுக்கால் வீறிவிடுவேன்" என்றேன். துஷ்டபுத்தி பதில் பேசவில்லை. ஆனால், அவன் என்னைப் பார்த்த பார்வையில் தென்பட்ட ஆக்ரோஷத்தை எழுத்தால் வர்ணிக்க முடியாது.

படம் முக்கால்வாசி தயாராகிவிட்டது. இன்னும் சில காட்சிகளே பாக்கியிருந்தன. அதில் முக்கியமானது கதாநாயகன் பகைவனால் கதாநாயகிமுன் ஆபத்துக்கு உள்ளாக்கப்படுவது. அதைப் படமெடுக்க உத்தேசித்த டைரக்டர் எங்களைக் கூப்பிட்டுப் பின்வருமாறு கூறினார்:—

"நாளைக்குக் காட்சிக்கு நீங்கள் சித்தமாயிருக்கவேண்டும். படப்பிடிப்பில் யாதொரு குறைவுமிருக்கக் கூடாது. பூங்காவனத்தில் நீயும், பத்மாவதியும் ஒரு சந்திரகாந்தக்கல்லின் மீது உட்கார்ந்து இனிமையாக சம்பாஷிக்கவேண்டும். சம்பாஷணையை மனப்பாடம் செய்துகொண்டிருக்கிறீர்கள் அல்லவா? துஷ்ட புத்தி! நீ துப்பாக்கியுடன் மூலையிலிருந்து ஓடிவரவேண்டியது கதா நாயகனுக்குப் பத்தடி தூரத்தில் எதிரில் நின்று துப்பாக்கியை அவனது மார்பெதிரே நீட்டி, 'அடே, உன்னை யமனுலகிற்கு அனுப்பப் போகிறேன். உனக்கு ஒரு நிமிஷம் அவகாசம் கொடுத்திருக்கிறேன். உன் இஷ்டதேவதையை ப்ரார்த்தித்துக்கொள்' என்று அதட்டிக் கூவவேண்டியது பத்மாவதி பயந்து அழவேண்டியது. அப்பொழுது கதாநாயகன் சிரித்துக்கொண்டே, 'பேஷ், என்னைச் சுடவா போகிறாய்? நன்றாய்ச் சுடு. ஆனால் உன் பின்னால் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் நிற்பது உனக்குத் தெரியவில்லையா?' என்று சொல்லவேண்டியது. துஷ்டபுத்தி திரும்பினபொழுது கதாநாயகன், சரேலென்று அவன் மீது பாய்ந்து, அவன் துப்பாக்கியைப் பிடுங்கிக்கொள்ளவேண்டியது. உண்மையில் போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டர் பின்னால் இல்லை. ஆபத்திலிருந்து தப்பவே கதாநாயகன் இப்படிக் கூறுகிறான். இந்தக் காட்சியில் ஒவ்வொருவரும் மிகவும் ஜாக்கிரதையாய் நடிக்கவேண்டும்" என்றார்.

அன்று சாயந்திரம் நான் பத்மாவதியைச் சந்தித்தேன். அவள் முகத்தில் கவலை குடிகொண்டிருந்தது. நான் அவளை அன்புடன் நோக்கி, "கண்மணீ, ஏன் ஒரு மாதிரியாயிருக்கிறாய்" என்று வினவினேன்.

பத்மாவதி என் கைகளைப் பற்றிக்கொண்டு, "அன்பரே, என்னையறியாமலே என்னைப் பயம் பிடிக்கிறது. ஏதோ கொடிய ஆபத்து நம்மை அணுகுவதுபோல் எனக்குத் தோன்றுகிறது" என்றாள்.

நான் நகைத்தேன். பத்மாவதி, "இது என்ன பேதமை, நான் கஷ்டப்பட்ட காலம் விலகிவிட்டது. நாளைக் காட்சியும், அடுத்தாற்போல் வரும் ஐந்தாறு காட்சிகளும் படமெடுக்கப்பட்டபின் நாம் முகூர்த்தத் தேதியை நிஷ்கரிஷை செய்யவேண்டியது தான்!" என்று மொழிந்து, அவள் கன்னங்களை செல்லமாய்க் கிள்ளினேன்.

பத்மாவதியின் அழகிய தலை என் கழுத்தில் சாய்ந்தது. "என்னமோ எனக்குப் பயமாய்த்தான் இருக்கிறது நாளைக்குக் காக்ஷி முடிந்துவிட்டால் அப்புறம் பயம் இல்லை அந்த துஷ்டபுத்தி என் முன் வந்தாலே நடுக்கந்தான்" என்றாள்

நான் அலக்ஷியமாய் 'கிடக்கிறான் அந்த அல்பப்பயல்' என்றேன்.

மறு நாள் ஸ்டுடியோவில் பூங்காவனக் காக்ஷியில் படமெடுக்க ஆயத்தம்செய்யப்பட்டது, டைரக்டர் துடியாய் இருந்தார். நானும் பத்மாவதியும் ஸல்லாபித்த கட்டம் படமெடுக்கப்பட்டது.

திடீரென்று என் முன்னால் நின்றான், துஷ்டபுத்தி. அவன் கையில்ஒரு துப்பாக்கி. அவன் முகத்தில் தோன்றிய விகாரத்தைக் கண்டு நான் நடுங்கிவிட்டேன்.

துப்பாக்கியை நீட்டிய அவன் என்னைக் கொல்வதாக மிரட்டினான்.

டைரக்டர் பத்மாவதியை விளித்து "பத்மாவதி! நீ பயந்து அழவேண்டும்" "துஷ்டபுத்தி உன் துப்பாக்கியில் போலிக் குண்டுகள்தானே இருக்கின்றன. சுட்டு விடுவது போல் ஆர்ப்பாட்டம் செய்' என்றார். அப்பொழுது புலி போல் சீறிய துஷ்டபுத்தி, 'என் துப்பாக்கியில் உள்ளவை போலிக் குண்டுகள் அல்ல. நிஜக்குண்டுகள் அதில் உள்ளன. என் பகைமையை நிருபிக்கவே நான் வந்திருக்கிறேன்" என்று கோப நகைப்பு நகைத்து என்னை நோக்கி 'அடே உனக்கு ஒரு நிமிஷம் கூட அவகாசம் கொடுக்கப் போவதில்லை. நீ சாகப்போவது நிச்சயம்' என்று கூறிய வண்ணம் துப்பாக்கியைச் சுட தன் விரல்களை இழுத்தான்.

என் நிலைமையை விவரிக்க எனக்கு இப்பொழுது வாயில்லை. ஆனால் என் பக்கத்தில் நின்ற என் கண்மணியின் முகத்தில் தென்பட்ட மாறுதலை எப்படி விளக்குவது? அதில் ஒரு துளிகூட பயம் இல்லை டைரக்டர் சொல்லியது போல் அவள் அழவுமில்லை நடுங்கவுமில்லை. ஆனால், சற்றும் தயங்கவுமில்லை அவள் நிஷ்களங்கமான முகத்துடன் என்னை மறைத்துக்கொண்டு அந்தப் பாதகன் முன்பு நின்றாள். அவன் சுட்ட குண்டு அவளது மார்பில் ஊடுருவியது. ஒரு வார்த்தையும் பேசாமல் கீழே சாய்ந்தாள்.

ஸ்டுடியோவில் அல்லோல கல்லோலம். நான் காண்பது கனவோ அல்லது நனவோ என்று திகைத்து நின்றேன். மறுக்ஷணம் துப்பாக்கி வெடி சப்தம் கேட்டது. துஷ்டபுத்தி தன்னையே சுட்டுக்கொண்டு பிராணனை விட்டான்.

என் கண்மணி அரைமணி தான் உயிருடன் இருந்தாள். மரணவேதனையுடன் என் மடியில் கிடந்த அவளுக்குப் பேசும் சக்தி இல்லை. ஆயினும் அவள் என்னை அன்புடன் நோக்கிய நோக்கு தான் எனக்காக ஆயிரம் தடவைகள் இறக்கத் தயார் என்பதைத் தெரிவித்தது.

கேட்டீர்களா என் கதையை? இதிலிருந்து என்ன விளங்குகிறது? பத்மாவதி என் மீதுகொண்ட காதலின் சக்தியால் எனக்கு நேர்ந்த ஆபத்தை விலக்கத் தைரியமாய்முன் வந்து தானே அதற்குப் பலியானளல்லவா? அதுவன்றோ இயற்கைக்கு மாறுபடாத உண்மைக் காதல்! ஐயோ! என் செல்வமே, நீ எங்கே இருக்கிறாய்? உன்னை நான் எப்பொழுது காண்பேன்".

என்று பிரலாபித்தவண்ணம் தன் கதையை முடித்தான் எனது விருந்தினன்.

நானும் பத்மனாபனும் ஒன்றும் பேசவில்லை. ஆவேசம் பிடித்தவன்போல் வெளியே சென்ற அவனை நாங்கள் தடுக்கவில்லை. ரஸ்தாவில் கூடிய ஜனத்திரளில் அவன் மறைந்தான்.

ஜோதிஷ மகுட வர்த்தனர்

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர்-பீமகவி-சுகர்-புஜண்டா சாஸ்திர நிபுணர் இப்பூமண்டலப் புகழுரையில் எதிர்கால பலன் கூறுவதில் "உலக சிரேஷ்டர்" என வெற்றி புமாலையும் தங்க சன்னதங்களும் பெற்றவர்.

ஜாதகம் லக்கின நக்ஷத்திர ஸ்புடஞ் செய்து பொதுப் பலன் எழுத ரூ. 1 ஒரு தெசைக்கு புக்தி பலன் ரூ. 2. அஷ்ட வர்க்கம் ஆயுள்வரை புக்தி பலன் ரூபா 7. ஜாதக குறிப்பு முன் பணம் ரூபா 4. தேவை.) 1 வருட மாதா மாதப் பலன் ரூ. 1-8. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரொபஸர் N. சுப்பிரமணியம்,
நெ. 2 (ஜோதிஷ ஆசிரமம்)
வாலாஜாபாத், S. I. R. செனலை.

செவிடு

"டெப்கில்லர்" செவிட்டுத் தன்மையை சாசுவதமாகப் போக்கிவிடும். இன்னும் காதில் ஏற்படும் இதர கோளாறுகளையும் அகற்றிவிடும். எவ்வளவு நாள்பட்ட செவிடாக விருந்தாலும் சரி, சிறிதும் சந்தேகமின்றி நிரந்தரமாக நிவர்த்திக்கப்படும்; செவிடர் செவ்வையாகச் செவியுறுகிறார். கால்செவிடு, அரைச்செவிடு அல்லது முழுச்செவிடு எதுவாகவிருந்தாலும் அக்கரையில்லை; நீண்டகால ஜலதோஷம், இருமல், ஜுரம், தொண்டைக் கோளாறு, மூக்குக் கோளாறு முதலிய எக்காரணங்களால் ஏற்பட்ட செவிடாயினும் சரி குணமாகிவிடும். சீழ்வடிதலும் நின்றுவிடும். ஆயிரக்கணக்கானவர்கள் குணம் பெற்றிருக்கின்றனர். விலை ரூ. 5; தபால் செலவு 7-அணா

MAHAMBS TRADING COMPANY OF ASIA. Indian Depot, P O Box 2186 Bombay

ஸ்டாக்கிஸ்ட்ஸ்:—அப்பா அண்டு கம்பெனி. 286. சைனா பஜார் ரோட், மதராஸ்.

ஜோதிர் மண்டலம்

தாது வருஷம்—கார்த்திகை மாதம்

18720

(ஸ்ரீமான் பி. ஸ்ரீநிவாஸவரதன் எழுதியது.)

சென்னையில் இராக்காலங்களில் இம்மாதம் நம் பார்வைக்குத் தென்படும் நக்ஷத்திரக் கூட்டங்களைக் கீழேயிருக்கும் படம் காட்டுகிறது. படத்திலுள்ளவாறே இம்மாதம் முதல் தேதி (15-11-36) இரவு 10-30 மணிக்கும், 15-ம் தேதி (29-11-36) 9-32 மணிக்கும், 30ம் தேதி (14-12-36) 8-34 மணிக்கும் நக்ஷத்திரக் கூட்டங்கள் நமக்குப் புலப்படும். இப்படத்தையே மற்ற ஊர்களுக்கும் உபயோகப்படுத்தலாம். ஆனல் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றல் இப்படத்தில் காட்டியுள்ள வட்டமே நம்மைச் சுற்றியுள்ள அடிவானம். அவ்வட்டத்தின் மத்தி, நம் தலைக்கு நேரேயுள்ள ஆகாயத்தின் உச்சி. சென்னைக்கு வடபுறம் இருக்கும் ஊர்களுக்கு இக்கூட்டங்கள் சிறிது தென்புறமிறங்கியும், தெற்கேயுள்ள ஊர்களுக்குச் சிறிது வடபுற மேறியும் விளங்கும். ஆனல், தென்படும் கூட்டங்களின் பொது அமைப்பு, படத்தில் காட்டியுள்ளவாறு இருக்குமே யன்றி வித்தியாசப்படாது. குறிப்பிட்டுள்ள நேரங்கள் தவிர மற்றைய நேரங்களிலும் படத்தை உபயோகப்படுத்தலாம். ஒவ்வொரு நக்ஷத்திரமும், முன் நாள் எப்பொழுது உதயமாகிறதோ அந்நேரத்தை விட சுமார் நான்கு நிமிஷம் முன்னதாகவே உதயமாகி விடுகிறது. அவ்வாறே ஒவ்வொரு நாளும் நான்கு நிமிஷம் வீதம் முன்னதாகவே நக்ஷத்திரங்கள் உதயமாகி அஸ்தமித்து விடுகின்றன. ஆதலால் இப்படத்தை இன்று 10-30 மணிக்குச் சரியாயிருப்பதென்று வைத்துக்கொண்டால், நாளைக்குப் படத்திலுள்ளவாறே 10-26 மணிக்கு ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் காணப்படும் ஆகையால், இம்மாதத்தில் எந்த நாளுக்கும் எந்த மணிக்கும் படத்திலுள்ளபடியே ஆகாயத்தில் நக்ஷத்திரக் கூட்டங்கள் தோன்றுமென்பதைச் சுலபமாகக் கணக்கிட்டுக்கொள்ளலாம்.

படத்தை உபயோகிக்கும் விதம்

படத்திலுள்ள வட்டத்தைச் சுற்றித் திக்குகளின் பெயர்கள் எழுதப்பட்டிருக்கின்றன. எத்திசையை நோக்கி நிற்கிறேமோ, அத்திசையைப் படத்தின் அடிப்பாகமாக வரும்படிப் படத்தைத் திருப்பி வைத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுது நம் எதிரில் அடிவான முதல் உச்சி வரை தெரியும் நக்ஷத்திரக் கூட்டங்கள், படத்தில் அடிப்பாக முதல் நடு வரையில் தெரியும். இக்கூட்டங்களின் வல, இடப்புறங்களிலுள்ள நக்ஷத்திரங்களும் படத்திலும் முறையே வல, இடப்புறங்களில் காணப்படும்.

இம்மாதம் குறித்த நேரங்களில் (பால்வழியின்) ஆகாய கங்கையின் பிரவாகம், கிழக்கு முதல், மேற்கு வரை வடவானத்தில் மத்தியாக ஒரு வில் போல் வளைந்து தோன்றுகிறது. அது முறையே மிருகவியாதா, ஓரியன், ரிஷபம், ஆரிகே, பர்ஸியூஸ், கஸியோபியா, ஆண்டிரமெடா முதலிய கூட்டங்களினிடையே ஊடுருவிச் செல்கின்றது.

நக்ஷத்திர மண்டலங்கள்

இராசிக் கூட்டங்களில் மகரம், கும்பம், மீனம் மேஷம், ரிஷபம், மிதுனம் முதலியவை மேற்கு முதல் கிழக்குவரை அமைந்திருக்கின்றன. மழைகால அறிகுறியாகிய மேஷ-ரிஷப-மிதுனக் கூட்டங்கள் கீழ்வானில் அழகுடன் விளங்குகின்றன. மேஷம் உச்சிக்குச் சிறிது வடக்கே உன்னத ஸ்தானத்தில் வீற்றிருக்கிறது. ரிஷப, மிதுனக்கூட்டங்களின் முக்கிய நக்ஷத்திரங்கள் கிழக்கே ஒளி வீசுகின்றன.

இதரக் கூட்டங்களில் துருவனும் அவன் மண்டலமும் வடக்கே காணப்படுகின்றன. துருவ மண்டலத்தில் பாதி பாகம் அடிவானத்தடியே சென்றுவிட்டது. கஸியோபியா, வடக்கே மிகவும் சிறந்து தோன்றுகிறது. வட கிழக்கே பர்ஸியூஸும், ஆரிகேயும், வடமேற்கே அம்சம் அஸ்தமிக்கும் தருவாயிலும் இருக்கின்றன. ஆண்டிரமெடா வெனும் அழகிய கூட்டத்தை மேஷக் கூட்டத்திற்குச் சிறிது மேற்கே காணலாம்.

இம்மாதத்தில் கிழக்குவானத்தின் சிறப்பே சிறப்பு. அநேக பிரகாசமான நக்ஷத்திரங்கள் இப்பாகத்தை அழகுபடுத்துகின்றன. ஓரியன் கூட்டத்தின் ஒப்புயர்வற்ற நக்ஷத்திரங்கள் கிழக்கே உயரமான இடத்தில் ஜ்வலிக்கின்றன. இப்பொழுது உதயமாகும் ம்ருகவியாதா கூட்டமும் அதன் முக்கிய நக்ஷத்திரமாகிய ஸிரியஸும், நம் மனதைக் கவர்கின்றன. ப்லீடஸ் எனும் 'கிமிக்கிலம்' நேர் தெற்கே வியாபித்திருக்கின்றது. எரிடானஸ் எனும் ஆகாய நதி ஓரியன் முதல் தென் வானம் அடிவரையில் ஓடுகிறது. லெபஸ், டொரு, பீனிக்ஸ், க்ருஸ் முதலிய சிறு கூட்டங்கள் தென் வானை அழகுபடுத்துகின்றன.

மொத்தத்தில் இம்மாதத்தில், குறித்துள்ள நேரத்தில் 9 முதல்தர நக்ஷத்திரங்கள் பிரகாசிக்கின்றன. கிழக்கு வானம் மிகவும் அழகுடன் விளங்குகின்றது.

கார்த்திகை மீ" — கிரஹங்களின் நிலை

புதன்:—மாதமுதலில் புதன் துலாக் கூட்டத்திலும், 6-ம் தேதிக்குப் பிறகு (21-11-36) விருச்சிகத்திலும் அமைந்திருக்கும். விருச்சிகத்தின் தலைப்பாகம் வழியாக சீக்கிரம் கடந்து, பாம்பாட்டியினிடையே நகர்ந்து 24-ம் தேதியன்று (9-12-36) புதன் தனுசையடைகிறது. இக்கிரஹம் சூரியனுடனேயே நவம்பர் 18-ம் தேதியன்று உதயமாகி அஸ்தமிக்கிறது. பிறகு சூரியனுக்குப் பிறகே அஸதமிக்கிறது. ஆனு



ஷம் இக்கிரஹத்தை இம்மாதம் காண முடியாது.

சுக்கிரன்:—இவ்வழகிய கிரஹம் சூரியாஸ்தமனத்திற்குப் பிறகு மேற்கு வானத்தல் மிகவும் அழகுடன் விளங்குகிறது. இது தனுசுக் கூட்டத்தை மாத முதலில் அடைந்துவிடுகிறது. பிறகு இக்கூட்டத்திலேயே மாதமெல்லாம் ஊர்ந்து செல்கின்றது.

குஜன்:— இம்மாதமெல்லாம் கன்னிபிலேயே நகர்ந்து செல்கின்றது.

குரு:—இம்மாதம் 9-ம் தேதியன்று (22-11-36) குரு தனுசை யடைகிறது. பிறகு இக்கூட்டத்தில் சில மாதங்கள் கழிக்கின்றது.

சனி:—கும்பத்திலும், உராணஸ், மேஷத்திலும், நேப்டியூன் ஸிம்மத்திலும் ஊர்ந்து வருகின்றன. சனி 5-ம்தேதி வக்கிரத்யாகமடைகிறது.

இம்மாதத்தின் முக்கியகாக்ஷி சுக்கிரனே. சுக்கிரனும் குருவும், மாத முதலில் மிகவும் அடுத்தடுத்தாற்போல் இருப்பதைக் காணலாம். ஆனல் மாதக்கடைசியிலோ, சுக்கிரன் குருவை விட்டுவிட்டு, கிழக்கு நோக்கி வெகுதூரம் சென்றுவிட்டிருக்கிறது. குருவின் பிரகாசத்தைப்போல் 7 மடங்கு அதிக ஒளியுடன் சுக்கிரன் தோன்றி நம் மனதைக் கவர்கிறது. அது இம்மாத முதலில் சுமார் இரவு 8மணிக்கும், மாதக் கடைசியில் இரவு சுமார் 8-45 மணிக்கும் அஸ்தமிக்கிறது. மேல் வானத்தில் ஒரு திலகம்போல் விளங்கும், சுக்கிரன் தினமும் முன்னாளைவிட அதிக நேரம் ஆகாயத்தில் சூரியஸ்தமனத்திற்குப் பிறகு தங்கியிருந்து இரவையே அழகு செய்கிறது குருவோ, மாத முதலில் சுமார் இரவு 8 மணிக்கும். மாதக் கடைசியில் சுமார் 6-35 மணிக்கும் அஸ்தமிக்கின்றது. சுக்கிரனுக்கடுத்தாற்போல இப்பெரிய கிரஹம் நம் உள்ளத்தைப் பரவசமாக்குகின்றது. குஜனே மாத நடுவில் இரவு 1-மணிக்கு உதயமாவதால், விடியற்காலையில் கிழக்கே உயர்ந்த இடத்திலிருந்து பிரகாசிப்பதைக் காணலாம். சனி நடு இரவு தாண்டிய பிறகு அஸ்தமிப்பதால் அதுவரை நம் பார்வைக்குப் புலப்படும்.

க்ரஹணம்:—இம்மாதம் 29-ம் தேதியன்று (டிசம்பர் 13–14) ஒரு கங்கண சூர்யக்ரஹணம் சபவிக்கிறது அது இந்தியாவில் புலப்படாது ஆஸ்டிரேலியாவில் பெரும்பான்மையான இடங்களில் பார்சுவ சூர்ய க்ரஹணமாகவும், சில இடங்களில் கங்கண கிரஹணமாகவும் தென்படும்.

சந்திரன் ஆகாயத்திலுலவி வருகையில் நவம்பர் 17-ம் தேதியன்று குரு, சுக்கிரனுக்கருகிலும், 23-ம் தேதி யன்று சனியருகிலும், டிசம்பர் 8-ம் தேதி குஜனருகிலும் 15-ம் தேதி புதனருகிலும் அமைந்திருக்கும்.

சந்திரன் குருவையும் சுக்கிரனையும் அணுகும் காக்ஷி மிகவும் உயர்ந்த காக்ஷிகளில் ஒன்று. சந்திரன் பிறைத் தோற்றத்துடன் அப்பொழுது விளங்குகிறது. குரு சந்திரனை ஒட்டினாற் போலும், சுக்கிரன் சிறிது விலகியும் 17-ம் தேதியன்று விளங்கும்.

ஜோதிடத்தில் பிரியமுள்ளவர்கள் பொருட்டு, இம்மாதத்திய இராசி சக்கிரத்தைக் கீழே கொடுத்திருக்கிறோம்.

தாது வருஷம் கார்த்திகைமீ-15-ம் தேதி-சூரிய உதயம்.

			கேது
சனி	1உ—விருச்சிக—ரவி (28-31) 2உ—விருச்சிக—புதன் 22உ—மகர—சுக்கிரன் 22உ—தனுர்—புதன். 30உ—தனுர்—ரவி (54-22).		
குரு ராகு சுக்கிரன்	சூரியன் புதன்		குஜன்

"ஜனுனு க்ரீம்"

அற்புதமான சாஸ்திரீகசரக்கு; அநாவசியமாகக் கருதப்படும் ரோமங்களை நீக்க உயர்குடும்பங்களில் கனவான்களாலும் சீமாட்டிகளாலும், சினிமா நடிகைகளாலும் உபயோகிக்கப்படுவது. பரீட்சித்துப் பாருங்கள்.

கிடைக்குமிடம்:—
SHIVLAL & CO.,
Princess Street, Bombay 2.

சிறந்த கூந்தல் ஆகாரம்

உடலுக்கு எப்படி நல்ல உணவு அவசியமோ அதே மாதிரி கூந்தலுக்கும் சிறந்த ஆகாரம் அவசியமானது. எனவே உலகப்புகழ்பெற்ற காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்) உபயோகியுங்கள். கூந்தலின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு அத்யாவசியமான சத்துக்கள் பல சேர்ந்தது. மூளைக்குக் குளிர்ச்சி ; நல்லிய மணம் நிறைந்தது.

விலை புட்டி 1-க்கு ரூ. 1.
,, 3 புட்டிகள் ரூ. 2-10.
வி. பி. சார்ஜ் தனி

தபால் செலவுக்காக அரையணு ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு சாம்பிள் இலவசம்.

ப்ராசீன மலர்களின் சுவாசனையும், புத்தப் புதிய இனிமையும் வாழ்விற்கு மகிழ்ச்சியூட்டுபவை; இவ்வளவையும் கீழ்க்கண்டதன் வாசனையில் நன்கு அனுபவிக்கலாம்.

ஆட்டோ டில்பஹார்

(ரிஜிஸ்டர்ட்)

ஒரு சில துளிகள் பல நாட்களுக்கு அழியாத வாசனை யூட்டும்; ஏனெனில் ஆட்டோ டில்பஹாரில் விரைவில் ஆவியாக மாறிவிடும் ஆல்கஹால் கிடையாது.

விலை ¼ அவுன்ஸ் ரூ. 1-4. 1 டிராம் 12 அணு.

தபால் செலவு தனி.

சோல் ஏஜெண்டுகள்:—
The Anglo Indian Drug & Chemical Co
BOMBAY 2.

குமாரசஞ்சீவினி

ரிஜிஸ்டர்ட்
குழந்தைகளின்
ஈரல்-குலை-ஜூரக்கட்டி
வியாதிகளுக்கு
நிகரற்ற குணமுடையது
வைத்தியர். அண்ணமலை முதலியார்
வைத்தியர் அண்ணமலை தெரு, மயிலாப்பூர், சென்னை

குழந்தைகளின் வயிற்று ஜூரக் கட்டிகளை

சந்தேகமின்றி சமனப்படுத்துவது

பால சஞ்சீவினி

இதுவேதான்
உண்மையான அசல் விஜயநகரம்
மருந்து.

விஜயநகர சமஸ்தான வைத்திய பரம்பரை பின்னா குடும்பத்தாரால் தயார் செய்யப்பட்டது.

Dr. பிள்ளா பாபய்யா பாத்ருடு பிரதர், விஜயநகரம்.
மதராஸ் பிராஞ்சு: 98-99, பிராடீவ் ரோட்,
மைலாப்பூர்,
(ராமகிருஷ்ண மடம் எதிர்.)

அதிசயம் ஆனால் உண்மை

1 ரஷ்யாவில் மிசால்கோ தோனியஸ் என்பவருக்கும் வாவில் பெப்பரோட்னி என்பவருக்கும் ஒருவரையொருவர் கன்னங்களில் அறையும் போட்டியொன்று நடந்தது. இது 36 மணி நேரம் நடந்த பிறகு இருவரும் ஜயிக்கவில்லையென்று தீர்மானிக்கப்பட்டது.

2 ஸெர்பியாவிலுள்ள ஒரு ஸ்திரீ தன்னுடைய 21-வது வயதில் 12 குழந்தைகளைப் பெற்றிருக்கிறாள். இரட்டைக் குழந்தைகள் இரண்டு தடவையும், நான்கு குழந்தைகள் இரண்டு தடவையும் அவளுக்குப் பிறந்தன.

3 விட்னியிலுள்ள ஒரு பூனை கடற்கரையில் மீனைப் பிடித்துத் தின்றது. சமயம் பார்த்துக்கொண்டிருந்து கடலில் மூழ்கி இதைச் செய்கிறது அந்தப் பூனை.

4 ஜெர்மனியில் சமீபத்தில் ஒரு இராணுவ அணிவகுப்பு நடந்தது. சிப்பாய்கள் நன் நடத்தையுடனிருந்ததற்காக இரண்டு லக்ஷம் சிப்பாய்களுக்கும் ஒவ்வொரு முலாம்பழம் வெகுமதியாகக் கொடுக்கப்பட்டது.

சிறுவர் பகுதி

நல்ல மகன்

——:[ ]:——

ஸ்ரீமான் பி. ஏ. லக்ஷ்மண முதலியார்

கந்தன் ஓர் பெரிய வியாபாரியிடத்தில் வேலை பார்த்து வந்தான். அவன் பிதாவும் அவ்வியாபாரியிடத்திலேயே ஓர் கண்ணியமான அலுவல் வகித்திருந்தார். ஓர் நாள் முதலாளி பிதாவை வியாபார விஷயமாக அக்கரைக்கு அனுப்பினார். வழியில் கப்பற் கொள்ளைக்காரர்கள் கப்பலைச் சூறையாடிப் பிரயாணிகள் எல்லோரையும் அடிமைப்படுத்திச் சென்றனர். பரிதாபமான பிரயாணிகள் பல தேசங்களிலும் அடிமைகளாக விற்கப்பட்டனர்.

கந்தனுக்கு வெகு காலமாகத் தன் பிதாவைப் பற்றிய செய்தியே கிடைக்கவில்லை. தக்க விசாரணையின்மேல் அவர் ஓர் தேசத்தில் அடிமையாக இருந்து வருவதாகத் தெரிந்துகொண்டான். அவன் மனம் புழுப்போல் துடித்தது. தன் தகப்பனைரென்று காண்பதென்று அவன் மிகுந்த ஏக்கங் கொண்டான். ஆனால் அவன் தைரியத்தைக் கை விடவில்லை. தன்னிடம் இருந்த பொருட்களை விற்றுக் காசாக்கினான். தான் இதுவரை கருத்துடன் சேமித்து வைத்திருந்த திரவியத்தையும் எடுத்துக் கொண்டு தன் பிதாவை அடிமை கொண்டிருக்கும் மகம்மதியனை அடைந்தான். தான் கொண்டுவந்த பொருட்களை எல்லாம் அவன் முன் கொட்டினான்.

“ஐயனே! என் பிதா தங்களிடம் அடிமையாயிருக்கிறார். நான் அரும்பாடுபட்டுச்சேகரித்த இந்த திரவியத்தை அங்கீகரித்துக்கொண்டு என் பிதாவை அடிமைத்தனத்தினின்றும் விடுவிக்க வேண்டுகிறேன்” என்று சிறுவன் மன்றாடினான்.

மகம்மதியன் சம்மதிக்கவில்லை. அதைவிடப் பன்மடங்கு அதிகமான பொற்காசு வேண்டினான்.

“ஐயா! நான் பரம ஏழை. என்னிடம் இதற்கு மேல் ஓர் சிறு செப்புக் காசும் இல்லை. தங்கள்

அடிமைக்குப் பதிலாக என்னை அங்கீகரித்துக் கொண்டு என் பிதாவை விடுவியுங்கள். நான் பலசாலி, வாலிபன், என் பிதாவோ தளர்ந்த கிழவர். நான் இன்னும் நீண்டகாலம் தங்களுக்கு உழைக்க வல்லவன்” என்று பிதா விசுவாசமுள்ள வாலிபன் நயந்து கெஞ்சினான்.

அதன்மேல் மகம்மதியன் அடிமையைத்தருவித்தான். பிதாவும் மகனும் ஒருவரையொருவர் ஆர்வமிகுதியால் தழுவிக் கொண்டனர். இருவர் கண்களிலும் நீர் வழிந்தது. அவர்கள் நாவில் பேச்சும் எழவில்லை.

தன் அடிமைத் தனத்தை நீக்குவதற்குத் தன் குமாரன் வந்திருப்பதையறிந்த தந்தை அலறி அழுதான். ‘அதற்குச் சம்மதியேன்’ என்று அறவே மறுத்தான். மகன் எவ்வளவோ மன்றாடியும் பிதா சம்மதிக்கவேயில்லை.

தகப்பன் தனயன் அன்னியோன்னியத்தைக் கண்ட மகம்மதியன் மனமும் இளகிப்போயிற்று. அத்தருணம் அவன்,

“ஏ சிறுவா! உன் பிதா வாஞ்சைக்கு நான் மிகவும் மெச்சுகிறேன். உன் பிதாவிற்கு சுயேச்சையளித்தேன். எனக்கு ஒரு காசும் வேண்டாம். ஓர் நன்றியுள்ள மகன் இலட்சண

மெல்லாம் உன்னிடம் பொருந்தியிருக்கிறது. ஆகையால் இந்தப் பொற்காசு நிரம்பிய பையைப் பரிசாக எடுத்துக்கொண்டு போய் நீயே சொந்த வியாபாரம் ஒன்று செய்து கொண்டு உன் தள்ளாத தகப்பனுக்கு ஆதாரவாய் இருப்பாய்” என்று மொழிந்து இருவரையும் அவர்கள் சுயதேசம் அனுப்பிவைத்தான்.

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசுபெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2 1 வருஷ மாதவாரி பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

நரையை ஒழியுங்கள்!

இந்த ஆயிலால் தலைநரை ஒழிந்துவிடும். வேரிலிருந்தே கூந்தல் கருமை பெறும்; 60-வயது வரை அப்படியே இருக்கும். பலனில்லையேல் 2 மடங்கு கிரயம் வாபீஸ். சொற்ப நரைக்கு ரூபா 3-க்கும், கால்பங்கு நரைக்கு ரூபா 5-க்கும் பாதிக்கு மேலோ அல்லது பூராவுமோ விழுந்தால் ரூபா 9-க்கும் ஆயில் வாங்குக

கடிதங்கள் ஆங்கிலத்திலேயே எழுதப்படவேண்டும்

BALA KALA STORES,
P. C. Kansi Simri (Darbhanga

டாக்டர் ஜம்மி வெங்கடரமணய்யாவின்

லிவர்க்யூர்

குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு
நிகரற்றது என்று டாக்டர்களாலும்,
பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.

அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சி பத்திரங்களும் பெற்றது
ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மஸி, 125-12, பின்னட் வீதி—ரங்கூன்.

வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3. வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி செலவு 5 அணா. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும் போதுள்ள நேரம், சுமார் வயது, பெயர் தேவை

ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம், திருத்தணி, S. இந்தியா.

கே. ஏ. ஸமாஜம் ஆஸ்பத்திரி.

ஷோரனூர் (P. O.) S. I. RY.

ஸ்தாபிதம்—1916.

சிறந்த ஆரோக்ய ஸ்தலம்.

பாரத நதிக்கரையில் வனப்பு மிகுந்த காக்ஷிகளுக்கு மத்தியில்

நம்பிக்கை வாய்ந்த ஆயுர்வேத ஸ்தாபனம்	எல்லாவித ஆயுர்வேத மருந்துகளையும் தயாரிப்பவர்கள்

இந்த சமாஜம் வைத்தியசாலை, கொச்சி சமஸ்தானத்தில் பட்ட செருதுருத்தியிலுள்ளது. ஆகையினால் எக்ஸைசு நியமத்துக்கு விரோதமான உப்பு புகையிலை வகையரா தீர்வையுள்ள சாமான்களை பிரிட்டிஷ் இலாகாவிலிருந்து வைத்திய சாலைக்குள் கொண்டுவருவது நியாயத்துக்கு விரோதமாகும்.

கொச்சி கவர்ன்மெண்டாரின் சகாயமும் மேற்பார்வையுமுண்டு, பொதுஜன உதவியால் நடத்தப்படுவது. கேரளத்திலுள்ள பிரபல வைத்தியர்கள் டைரக்டர்களின் போர்டிலிருக்கின்றனர்.

புகழ்பெற்ற பிரம்மஸ்ரீ வைத்யரத்ன இ டி. நாராயணன் மூஸ் அவர்கள், கேரள அஷ்டவைத்யர், கொச்சி சமஸ்தான வைத்யர், பிரதம வைத்யர்.

இடவசதிகள் அளிக்கப்படும். தாரா, நாஸ்யம், சிரோவஸ்தி, பிழிஞல், நவாகழி, வஸ்தி முதலிய மலையாள ஆயுர்வேத முறையில், தரமையான மேற்பார்வையில் வைத்யம் செய்யப்படும். தங்கும் செலவு வியாதியஸ்தர்களது.

மற்ற விவரங்களுக்கு, பதிலுக்கு ஸ்டாம்புடன் மானேஜருக்கு எழுதவும்.

ரூ. 100 இனாம்

(மாந்திரீக மோதிரம்)



காதல் விஷயங்களில் வெற்றியைத் தரும். பரீக்ஷையில் தேர்ச்சி உண்டாகும், உத்தியோகம், புத்திர பாக்கியம், செல்வம் முதலியவைகளைத் தரும். வியாஜ்ஜியங்களில் வெற்றி, வியாதிகள் நீங்கும். அதிர்ஷ்டம் உண்டாகும். இதை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். விலை ரூ. 2.

BENGAL MESMERISM HOUSE,
(S. M.) Panchpota, BENGAL.

நோயற்ற வாழ்வு

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

நாள் தாமதித்து, குடஜாவலேஹம் என்கிற லேஹ்யத்தையும், கனஸாரம் என்னும் ஔஷதத்தையும் மாற்றி உபயோகித்து வருவதால் பிரவாஹிகை எளிதில் நிவ்ருத்தியாகும். ஆகிலும் பிரவாஹிகை என்கிற நோயும், இது விஷயமான பரிஹார முறைகளும் தனிக் கட்டுரையில் விவரித்தெழுத வேண்டிய விஸ்தாரமான விஷயங்களடங்கியவையாகையால், மற்றொரு நிருபத்தில் இவ்விஷயம் விளங்க விவரிக்கப்படும்.

பொதுவாகக் கூறுமிடத்து அதிஸாரத்திற்கு ஆமணக்கெண்ணெய், ஸ்ரம்ஸநவடி முதலியவற்றால் அல்லது இயற்கைப் போக்குக்குச் சில நாள் பேதியாவதை விட்டுவைப்பதால் குடலிற் சேர்ந்துள்ள தோஷங்கள் முற்றிலும் வெளிப்பட்டு, வயிற்றில் ஆமம் முதலிய எத்தோஷமும் இல்லையென்று தெரிந்தபிறகு, ஜீர்ண சக்தியை ஏற்ற நிலைமைக்குக் கொண்டுவரவும், குடலழற்சி மீண்டும் நேரிடாதபடி தடுக்கவும் ஏற்ற சிகித்ஸை செய்ய வேண்டும். அதற்குப் பொதுவாக கனஸாரம் என்கிற ஔஷதமும், மஞ்ஜிஷ்டாதி க்வாதம் என்கிற கஷாயமும் மிகவும் பலன் தரக்கூடியவை. சிலருக்கு சங்க பஸ்மம் 3-குன்றுமணி யெடை, குருக சிருங்க பஸ்மம் 3-குன்றுமணி யெடை, லோகநாதரஸம் 2-குன்றுமணி யெடை, இவற்றைக் கூட்டி, தேனில் குழைத்து உட்கொள்ள குடலழற்சி முதலியவை திருப்திகரமாகத் தணிவடையும்.

பாலாதிஸாரம்

குழந்தைகளுக்குக் காணும் அதிஸாரத்தில், குழந்தைகளை மிகச் சுத்தமாகப் பரிபாலித்துப் பராமரிப்பதிற் கண்ணாயிருப்பதே இன்றியமையாத அம்சமாகும். குழந்தையின் உடம்பை வெந்நீரில் நனைத்த வஸ்திரத்தினால் அப்போதைக்கப்போது நன்றாகத் துடைத்துச் சுத்தமாக வைக்க வேண்டியிருப்பதோடு, அதன் படுக்கைத் துணிகளையும், போர்க்கும் துணிகளையும் சவர்க்காரம் அல்லது அப்பளாக்காரம் கரைத்த தண்ணீரில் நனைத்துத் துவைத்து, வெயிலில் உலர்த்தியெடுத்து உபயோகிக்கவேண்டும். குழந்தைக்கு உணவூட்டும் பாலாடை, புட்டிகள் மற்றுமுள்ள பாத்திரங்கள் முதலியவற்றையும் நன்றாகத் தேய்த்து, சிக்காய்த்தூள் வெந்நீர் இவற்றால் வெகு நன்றாகக் கழுவவேண்டியது அவசியம். ஆரம்பத்தில் ஒரு தேக்கரண்டியளவு ஆமணக்கெண்ணெயைச் சிறிது பசுவின் பாலில் கலந்து உட்கொள்ளக் கொடுத்துவிடவும். பிறகு சுமார் பன்னிரண்டுமணி நேரம் வரையில் சிறிது சர்க்கரை சேர்த்த வெந்நீரையே பருகக் கொடுக்கலாம். அதன் பிறகு புழுங்கலரிசிக் கஞ்சியாவது, வாற்கோதுமைக் கஞ்சியையாவது சிறிது பால் கூட்டிக் கொடுத்து வரலாம். அதன் பிறகு பாலில் இரண்டொரு குன்றுமணி எடை சங்க பஸ்மம் கூட்டி மூன்று அல்லது நான்கு மணிக்கு ஒரு முறையாக உபயோகிப்பது நலம். இவ்விதம் செய்தும் அதிஸாரம் இரண்டு நாட்களுக்குப் பிறகும் தொடர்ந்தால், கனஸாரம் என்னும் ஔஷதத்தை இரண்டு மூன்று தேக்கரண்டியளவாகத் தினத்துக்கு நான்கு முறை உட்கொள்ளக் கொடுக்க வேண்டும்.

பத்தியம்

அதிஸாரங்களில் உணவுகள் அதிவிரைவில் ஜீர்ணமாகக் கூடியனவாக இருத்தல் வேண்டும். வெகு திரவமான புழுங்கலரிசிக் கஞ்சி, சவ்வரிசிக்கஞ்சி, வாற்கோதுமைக் கஞ்சி இவற்றுள் எதையாவது சிறிது பால் கலந்து தினத்துக்கு இரண்டு மூன்று முறை உட்கொள்ளலாம்; பாலுக்குப் பதிலாக மோரைக் கூட்டி மேற்படி கஞ்சிகளைப் பருகுவது இன்னும் குணம் தரத்தக்கது. அதிஸாரம் நிவ்ருத்தியாய், ஸாதாரண உணவு எடுத்துக் கொள்ளக்கூடிய நிலைமை வந்ததும், மாம்பருப்பு, நெல்லிப்பருப்பு முதலியவற்றைப் போன்ற துவர்ப்பான பதார்த்தங்களைச் சேர்த்துப் பக்குவம் செய்த குழம்பு, பச்சடி முதலியவற்றையும், அதிகமாக மோரையும் கலந்து அன்னத்தைச் சொற்ப அளவாகப் புசிப்பது நலம். அஜீர்ணாதிகள் சிறிது ஏற்பட்டவுடனே, அவை அதிஸாரத்தில் பரிணமிக்காதபடி, கனஸாரம்-ஹிங்வஷ்டக சூர்ணம்-சங்க பஸ்மம் முதலியவற்றை அடிக்கடியும் உபயோகித்து, அஜீர்ணத்தைச் சமனம் செய்துகொள்வது அதிஸாரத்தைத் தடுக்கும் முறைகளில் ஒன்று.

அதிஸாரங்களில் ஏதேனுமொன்றால் வருந்துபவர் சிகித்ஸைகள் செய்துகொண்டும் குணமடையாவிட்டால், அதிக தாமதம் செய்யாமல் தகுந்த கைதேர்ந்த வைத்தியரைக் கொண்டு ரோக காரணத்தையும் அதன் தன்மையையும் பரிசோதித்து அறிந்து, வியாதி ஸ்வரூபம் இன்னதென்று தீர்மானமாகத் தெரிந்ததும், முற்கூறியவற்றுள் எது ஏற்ற சிகித்ஸையாகுமோ அதை உடனே செய்துகொண்டால் அவ்விதக் குடற் கோளாறிலிருந்து நிவ்ருத்தியடைந்து சுகம் பெறலாம். தாமதமின்றி ஏற்ற சிகித்ஸையைச் செய்துகொண்டால் எந்த அதிஸாரமும் அஸாத்யமாவதில்லை.

வெற்றி கிட்டியது

என மிஸ்டர்..........22-6-36உ பம்பாயிலிருந்து எழுதுகிறார்.

''தங்கள் '' திபேத் மூலிகை '' யால் தான் நான் மெட்ரிக் பரீக்ஷையில் தேறினேன்.''

''திபேத் மூலிகை''யால் கீழ்க்கண்டவை சித்தியாகின்றன; லாமா யோகியின் வரப்பிரசாதம்.

வசீகரன். ஆண் பெண் இரு பாலருக்கும் இடையில் இன்ப மயமான காதலை உடனே விளைவிக்கும். இதை அணிபவர் அதன் ஆச்சரிய சக்தியை விரைவில் அறிவர். விலை ரூபா 3-8-0

2. வியாபாரமும், தொழிலும்:—நிச்சயமான தொழில் அபிவிருத்தியும், இலாபமும்சித்திக்கும். விலைரூ.3-8-0

3. வியாஜ்யங்கள்:—இதன் சக்தியால் நம்பமுடியாத எவ்விதவியாஜ்யங்களும் ஜெயமாகும். விலை ரூ. 3-8-0

4. வியாதிகள்:— முடியாதெனக் கைவிடப்பட்ட சகலவித கொடிய ரோகங்களும் அடியோடு நீங்கும். விலை ரூபா 3-8-0 5. உத்தியோகம்:—வேலையில்லாத் திண்டாட்டத்தில் அவதிப்படும் இளைஞருக்கு அவரவர் ஸ்திதிக்குத் தகுந்தபடி உத்தியோகம் கிடைக்கும். சம்பள உயர்வும் உத்தியோக மேன்மையும் நிச்சயம். விலை ரூ. 3-8-0 6. பரீக்ஷைகள்:- எவ்விதப் பரீக்ஷைகளிலும் நிச்சயமாய்த் தேறலாம். விலை ரூபா 3-8-0 7. சத்ருக்களை ஜெயித்தல்:—எவ்வளவு அபாயகரமான விரோதிகளும் இதை அணிபவர் முன், முழந்தாளிட்டுப் பணிவர். விலை ரூபா 3-8-0 8. கிரஹ தோஷம்:-எல்லாவிதமான கிரஹ தோஷங்களும் சாந்தியாகும். விலை ரூபா 3-8-0 9. ஆரோக்யமும், செல்வமும்:—எளிதில் சித்திக்கும். விலை ரூ. 3-8-0

அறிவிப்பு:—இந்த சாஸ்திரங்களில் நம்பிக்கை உள்ளவர்கள் மாத்திரம் தங்கள் நோக்கம் இன்னதென்பதைக் குறித்து எழுதவும். ஒவ்வொரு நோக்கத்துக்கும் தனிப்பட்ட மூலிகை அவசியம். ஒரு மூலிகையின் விலை ரூபா 3-8-0. தபால் சார்ஜு வேறு. ஒரே தடவையில் 3 மூலிகைகள் வாங்கினால் தபால் சார்ஜ் உள்பட ரூ. 9-6-0

BIJOYA LODGE, (S.M.W.)
P. O SALKIA HOWRAH.

கிருஷ்ண தேவராயர் - விஜய நகர மன்னன்

ஓர் சரித்திர சம்பந்தமான நாடகம்

(காபிரைட்)

(சிங்காநல்லூர் ரா. சாரங்கன்)

காட்சி 1.

கிருஷ்ணதேவராயன்
முகாமிட்டிருக்கும்
விஜயபுர எல்லையில் ஓர் சோலை

(திருமலைதேவி, சின்னதேவி, கிருஷ்ணதேவன் மூவரும் பிரவேசித்தல்.)

தி. தே:—நாத! தலை நகரை விட்டு உங்களைப் பார்ப்பதற்கு இவ்வளவு தூரம் ஏன் வந்தீர்கள் என்று கேட்டீரே, அப்படி வந்திராவிடில் இச்சுகம் உமக்கு ஏற்படுமா?

சி. தே:—ஆமாம்; எப்பொழுதும் ஆத்திரக்காரிக்குப் புத்தி மட்டு திக்குவிஜயத்தில் ஈடுபட்டிருக்கும் மன்னனின் மனப்போக்கைக் குலைக்கவா? யுத்தாங்கத்திலகூட இம்மன்னன் காமாந்தகாரத்தில் மூழ்கி மனைவியுடன்கூடிக் குலாவினன் என்ற வசைச்சொல்லுக்காளாகவா? நான் அப்பொழுதே கூறினேன். நாத! என் வார்த்தையை இவள் மதித்தாள் இல்லை.

கி. தே:—ஆம்; கண்மணிகளே! அக்காரணத்தை முன்னிட்டுதான் நான் உங்களைக் கடிந்தேன். மேலும் யுத்தரங்கத்தில் உங்களுக்குக் கஷ்டங்கள் நேரிடலாம். திடீரென யுத்தத்திற்குப் புறப்படவேண்டி வரும். பகைவர் நாங்கள் இல்லாத வேளை உங்களை வளைத்துக்கொண்டால் என்ன செய்வது? அதனாற்றான் அப்படிக் கூறினேன்.

தி. தே:—ஆம் நாத! எப்பொழுதும் சின்னதேவியைச் சார்ந்து பேசுவதே உம் வழக்கம். நான்தான் மதிகெட்டு உம்மிடம் ஓடிவந்தேன். அவள் ஏன் என்பின் ஓடிவரவேண்டும்?

கி. தே:—சரி; ஆரம்பித்து விட்டீர்களா உங்கள் சக்களத்திப் போராட்டத்தை? இனி என்பாடு சிரமந்தான். சென்றதை மறந்து ஆனந்தம்கொள்வோம்.

(நந்தவனத்திலுள்ள புஷ்பங்களைப் பறித்து இராணிகளுக்குச் சூடி விளையாடுகிறான். பின்னர் அங்கு தயாரிக்கப்பட்டிருந்த ஓர் ஊஞ்சலில் அமர்ந்து ஊசலாலாடுகிறான். மனைவியர் இருவரும் பக்கத்திலமர்ந்து பாடுகின்றனர். அச்சமயம் ராயர், சாலுவ திம்மரும், அவமானமடைந்த விப்ரோத்தமரும் அங்கு வருகின்றனர். தேவிகள் மறைகின்றனர். இருவரும் அரசரைப் பணிகின்றனர்.

கி. தே:—சாலுவ திம்மரே! இவர் யார் இவரைப் பார்த்தால் அந்தணர்போல் தோன்றுகிறதே. மகமதியர் அட்டகாசமோ முன் குடுமி.

சா. தி:—ஆம் அரசே! இவர்கள் கிராமத்தில் நுழைந்து மாந்தரை வதைத்ததுமன்றி நகரைத் திக்கிரையாக்கினாராம். கிராமத் தலைவர் கொலையுண்டார். ஆலயத்தை அழித்தனர், விக்கிரகம் மறைந்தது

கோ. பூ:—ஆ; தேவதேவ! கிராமத்தையும் அக்னிக்கிரையாக்கினர். போதாக்குறைக்கு உங்களை அவமதிக்க இப்பந்துகளையும், துடுப்பையும் அனுப்பித்தனர். நீர் வாள்பிடிக்க வற்றவரல்லராம். பழிக்குப் பழி அரசே! அந்தத் துரோகிகளுக்கு நற்புத்தி புகட்டுங்கள்.

கி தே:—(பந்துகளையும், துடுப்பையும் கண்டு சிரித்து) அப்படியா, மூவேந்தர்களின் சூழ்ச்சியா? இந்த வெகுமதிகளுக்கு நான் சந்தோஷப்படத்தான் வேண்டும், சாலுவ திம்மரே! உடனே அமரநாயகத் தலைவர்களை இங்கு வரவழைப்பீர்.

சா-தி:—அப்படியே அரசே! [விரைந்து செல்கிறார்]

கி-தே:—பூசாரியாரே, இப்பந்துகள் அந்த நவாப்புகளுடைய கோட்டைகளைத் தகர்த்துத் தவிடுபொடி செய்யக்கூடிய வெடி குண்டுகளென எண்ணும். இத்துடுப்பே அவர்கள் சிரசுகளைச் சேதிக்கும் கட்கம். கடவுள் கிருபையால் அவர்களை முறியடிப்பேன். மண்ணைக் கவ்வும்படி அவ்வேந்தர்களை விரட்டி அடிப்பேன். மேலும் கூறிடின் தற்புகழ்ச்சியேயாகும்.

பொம்மசாணி ராமலிங்க நாயகர் உள்பட அமர நாயகர்களும், ஆலோசனை கழகத்தினராகிய அய்யமாசு, கொண்டமாசு, பச்சராசு, சாலுவதிம்மர் முதலியோர்களும் அரங்கத்தை அடைகின்றனர்.

பொ-ர:—(அரசரை வணங்கி) வந்தனம் அரசே! சமாசாரம் கேள்வியுற்றேன். இந்த மகமதியர்களை வெல்ல எந்நேரம் வேண்டும். இப்பொறுப்பை எனக்கருளல் வேண்டும்.

கி-தே:—ஆம், அப்படியே எடுத்துக்கொள்ளும் சாலுவ திம்மரே!

(சாலுவதிம்மர் ஓர் சேவகன் கொண்டு வந்த வெற்றிலை பாக்குத் தட்டில், அவர் தயாரித்துள்ள சாசனத்தை வைத்து அரசன் முன்பு வைக்கிறார்.)

கி. தே:—இராமலிங்கம், இதோ என் சாசனத்தைப் பெற்றுக்கொள்ளும்.

(இராமலிங்கம் பயபக்தியுடன் அதை வாங்கிக் கண்களில் ஒத்திக்கொள்கிறார். வீரர்கள் ஜய விஜயீபவ எனக் கோஷமிடுகின்றனர்.)

கி. தே:—இராமலிங்கம், உம் முழு வேலைத்திறமையைக் காட்ட இதுவே தருணம்

ஹம்பியிலுள்ள கண்காணிப்பு கோபுரங்கள்

இம்மகமதிய சுல்தான்கள் மமதையைச் செவ்வனே குலைப்பீர். சாளுவதிம்மரே, நாம் அனுப்பிய தூதர் பகைவர் படையின் எண்ணிக்கையைப் பற்றி என்ன தகவல் கொண்டு வந்தார்?

சா. தி:—லட்சம் குதிரைப் படைகளும், ஆயிரம் யானைப் படைகளும் கொண்டனவாம்.

பொ. இ:—நம்மிடம் உள்ளவர் 80,000 வாள்வீரர்களே! இருப்பினும் பாதகமில்லை. குளிர்ந்த நாட்டிலிருந்து வந்துள்ள இம்மகமதியர் வெப்பந் தாங்காது தவிப்பர். ஆதலின், இச்சண்டையில் வெற்றி நம்முடையதே; சிறிதும் ஐயம் கொள்ளவேண்டாம்.

கி. தே:—சரி; உங்களுக்கதிகம் சொல்ல வேண்டியதில்லை; வீரத்துடன் போர் புரிவீர்.

வீரர்:—கிருஷ்ண தேவருக்கு ஜே! கிருஷ்ண தேவருக்கு ஜே! பொம்மசாணி இராமலிங்கத்திற்கு ஜே! ஜே!! ஜே!!!

(செல்கிறார்கள்)

காட்சி 5.

ரணகளம்.

(அமாநாயக வீரர்களும், சுல்தான்களும் சந்திப்பு. யுத்தம் மும்முரமாக நடக்கிறது. வீரர்கள் மடிகின்றனர். மகமதிய வீரர்கள் வெப்பந் தாங்காது தாகத்தினால் பீடிக்கப்பட்டுத் தங்களுடைய இரத்தத்தையே பருகுகின்றனர். இறுதியில் தோல்வியுற்று ஓடி மறைகின்றனர். தேவரின் சைனியம் பலரைக் கைது செய்து ஜயக்கொடியை நாட்டுகின்றது. கிருஷ்ண தேவராயர் தன் பரிவாரங்களுடன் தோன்றுகிறார்.)

கி-தே:-மெச்சினேன்; இராமலிங்கநாயுடுகாரு, மெச்சினேன். இவ்வெற்றிக் கறிகுறியாக இந்தக் கட்கத்தையே உமக்குப் பரிசாக அளிக்கிறேன்.

(பக்கத்தில் ஓர் சேவகன் தட்டில் வந்தி நிற்கும் ஓர் வாளை எடுத்து இராமலிங்கத்திற்கு அளிக்க, அவரும் அரசன் முன் மண்டியிட்டுக் கட்கத்தை வாங்கி மும்முறை முத்தமிட்டு அணிகிறார். வீரர்கள் ஆநந்தக் கூப்பாடு வானை எட்டியது)

பொ-இ:—அரசே யாவும் கடவுள் அருள். ஓர் பகுதியினர் கதிரவன் கிரணத்திற்கிரையாயினர். மற்றொரு பகுதியினர் வெள்ளத்தில் மாண்டனர். முதுகுகாட்டி ஓடியவர் சிலர். மிஞ்சியவர் உம் கைதிகள்.

கி-தே:—இந்த யுத்தத்தில் நம் நஷ்டம் எவ்வளவு?

பொ-இ:—நம் நஷ்டம் மிக்க கொஞ்சமே. எதிரிகளின் நஷ்டமே மிகப் பெரிது. 4,000 குதிரை வீரர்களும், 4,000 வாள்வீரர்களும் வீர சொர்க்கமடைந்தனர்.

கி-தே:—சரி, இவ்வெற்றியில்

காது புறப்படுங்கள் களிங்கப் பிரதேசத்திற்கு.

காட்சி 6.

களிங்காதிபதியின் அரண்மனை அந்தப்புரம் இளவரசி ஜகன்மோஹினி சோர்வை அடைந்து கட்டிலில் படுத்திருக்கிறாள்.

ஜ. மோ:—(தனக்குள்) அன்னவரின் படத்தைக் கண்டது முதல் எனது ஹிருதயம் அவர்பால் அடைந்தது. மங்கையின் மனதைக்கவர்ந்த மன்ன! இஜ்ஜன்மத்தில் உம்மையே எனது நாதனாக வரித்தேன். தெய்வமே என்னை உம்மிடம் சேர்ப்பிக்கவேண்டும். தாங்கள் திக்குவிஜயம் செய்து வருவதாகக் கேள்விப்பட்ட என் பிதா உம்மீது குரோதம் கொண்டுள்ளார். உமது வைரியாகிய அவர் மனமுவந்து உம்மை மணக்க எப்படித்தான் மனம் ஒப்புவாரோ? எல்லாம் ஈசனின் சோதனை. (இராயரின் படத்தை எடுத்து முத்தமிட்டு) என்ன அவர் முக தேஜஸ்? அவர் பரந்த கூர்மையான கண்கள் அவர் புத்தி திட்சண்யத்தைப் படம் பிடித்துக்காட்டுகின்றன அவரது அகன்ற மார்பும், திடகாத்திரமுள்ள புஜங்களும் போரில் விரோதிகளும் அஞ்சும்படியான வீராதிவீரன் எனக் குறிப்பிடுகின்றன அவருடைய இராஜ தேஜஸும், கம்பீரப் பார்வையும், மன்மதாகாரமான உருவமும் என் ஹிருதயத்தைக் கவ்வுகின்றன. ஏ, விஜயநகர விஜயனே! ஏழையின் தவிப்பைத் தாங்கள் எப்படி அறியப்போகிறீர்? நாத! விரோதியின் மகளென என்னை நிராகரித்து விடுவீரோ? எதற்கும், தந்தைக்கும் காதலனுக்கும் சமாதானம் ஏற்பட்டு அடியாளின் மனம் சந்தோஷமடைய எம்பெருமானின் அருள்தான் வேண்டும்.

(பிரதாபருத்ர கஜபதி வருகிறார்.) ஜகன்மோஹினி சட்டெனக் கிருஷ்ணதேவனின் படத்தைத் தலையணையின் கீழ் மறைத்துவிடுகிறாள்.

அப்பா, நமஸ்காரம். என்ன இவ்வளவு சாவகாசமாக இவ்விடம் வந்தது?

பி. க:—ஆம் கண்மணி! இவ்விளஞ் சிறுவன் வெகு திறமையுடன் ஒவ்வொரு கோட்டையையும் பிடித்துத் தன் ஜயக்கொடியை நாட்டுவதைக் கேள்விப்படில் எவனால்தான் சும்மாயிருக்க முடியும். 16 மகாபத்திரர்கள் ஐக்கியம் எனக்கிருக்கும்வரை இக்கஜபதியைப் போரில் வெல்லக்கூடிய தீரனும் இருக்கின்றானா? இல்லை. இருப்பினும் வேளை எப்படியோ! ஆதலின், நம் சைன்யங்களைத் திரட்டி அணிவகுப்பது அவசியந்தானே. சென்ற சில நாட்களாக நீ

பளபளப்பான வெள்ளை சானிடரி அமைப்புகள்



இந்த பள பளப்பான வெள்ளை பேஸின்கள் இந்தியாவிலேயே தயாரிக்கப்படுபவை; வெளிநாடுகளிலிருந்து வரும் சரக்குகளின் ரகத்திற்கு இவை இணையானவை.

இவற்றின் விலைகளும் சகாயம் தான்; இவைகள் உடையாதென்பதற்கு உத்தரவாதம்; ஜீவிய கால முழுமையும் உழைக்கும். இந்தியாவிலுள்ள எல்லா பிரபல சானிடரி எஞ்ஜினியர்களிடமும் சில்லரையாகக் கிடைக்கும்.

இத்தகைய சரக்குகளைப்பற்றிய பூரா விவரங்கடங்கிய இலவச புத்தகத்திற் கெழுதுக.

தி பாட்டரீஸ், ராணிகஞ்ச்

எம்-ஏ. பர்ன் & கம்பெனி லிமிடெட். 12, மிஸின்ரோ, கல்கத்தா.

தென்னிந்தியாவிற்கு ஏஜண்டுகள்:

பம்பாய் கம்பெனி லிமிடெட், தபால் பெட்டி 109, மதராஸ்.

BNK 07

மலரிற் சிறந்தது மல்லிகை
குக்கரிற் சிறந்தது ருக்மணி

போலி குக்கர்களைக் கண்டு ஏமாறாதீர்கள்.
எல்லா குக்கர்களும் குக்கர்களாகாது.

ருக்மணி குக்கர்

தான் எந்தக் காலத்திலும் ஆரோக்யமும் சுமோன ஆகாரத்தைக் கொடுக்கும். எல்லோரும் வாங்கும் பொருட்டு விலைகளையும் குறைத்திருக்கிறோம். 1 முதல் 16 பேர்கள் வரை சாப்பிடக் கூடிய 7 அளவுகள் 9 ரூபாய் முதல் 38 ரூபா வரை இருக்கின்றன.

விபர புத்தகம் இனாம்.

ருக்மணி குக்கர் கம்பெனி,

ராயபுரம், (12) **சென்னை.**

எமது ஏஜெண்டுகள்:

திருவனந்தபுரம்:—இந்தியன் எம்போரியம், மெயின் ரோடு.
பெங்களூர்.—இண்டஸ்டிரியல் & கமர்சியல் கோவாபரேடிவ் சொஸைட்டி, புதுமார்க்கட்.
மட்டுங்கா (பம்பாய்):—தி சௌத் இந்தியன் கன்சர்ன்ஸ் Ltd., 'ராம்நிவாஸ்'
பூனா:—வார்ட் ரீயே இண்டஸ்டிரியல் மியூசியம், ரீயே மார்க்கெட்.
கல்கத்தா:—சௌத் இந்தியன் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ், 114, B. லான்ஸ்டௌன் ரோடு.
ரங்கூன்:—ஸ்ரீ கணேஸ் ஸ்டோர்ஸ், 115, 117, பிரகாண்டட் தெரு.
வேலூர்:—V. R. நாதம் & கம்பெனி, லாங் பஜார்.

காவலர் பன்முறை தெரிவிக்கவும் வீரர் பழகும் பாளையத்தை விட்டு இவ்விடம் வந்தேன். மஹா வீராதிவீரன் வீரப்பிரதாபன் கஜபதி ராஜன் மகள்-உனக்குற்ற குறையாது?

ஜ. மோ:—அப்பா, அப்படி ஒன்றும் சொல்வதற்கு விசேஷமில்லையே. மனநோவுக்கு மருந்துண்டோ? தாங்கள் எக்கவலையால் பீடிக்கப்பட்டு அவஸ்தைப்படுகிறீரோ, அதே கவலைதான் என்னையும் சேர்த்துக் குலுக்குகிறது. கடவுள் இருக்கிறார்.

பி. க:—கண்ணே, ஜகன் மோஹினி! உன் அவஸ்தைகளைக் காணின்—அடிக்கடிப் பெருமூச்சு, துக்ககரமான பாடல்களில் பிரியம், மற்றும் சதாசிந்தனை-இவைகள் காதலின்......

ஜ மோ:—இல்லை அப்பா! என் விஷயத்தில் சிந்தையுள்ளவர் உம்மைத் தவிர்த்து வேறு யாருளர்? ஆதலின், உம்மிடம் கூறாது வேறு யாரிடத்தில் கூறப்போகிறேன். அப்படி ஒன்றுமில்லை. அந்தப்புர வேலைக்காரி பரபரப்புடன் நுழைகிறாள்.

அ. வே:—அரசே!

பி. க:—ஏன் இந்தப் பதட்டம்?

அ. வே:—வாயிலில், குதிரை வீரன். வஸ்திரங்கள் வேர்வையால் நனைந்திருக்கின்றன. குதிரையின் வாயிலும் நுரை ததும்பி நிற்கிறது. அவசரமாம்.

பி. க:—அப்படியானால் உள்ளே வர அனுமதிப்பாய்! (வணங்கிச் செல்கிறாள்.)

மற்றொரு வெற்றியைப்பற்றிச் சமாசாரம் கொண்டு வந்திருப்பான்.

ஜ. மோ:—(தனக்குள்) என் பிரபுவின் ஜயத்தைக் கேள்விப் படும்பொழுது என்னையும் மீறி ஆநந்தம் பொங்குகிறது. கடவுளே, அவரைக் காப்பாற்ற வேண்டும்!

(ஓர் மகமதிய வீரன் உள் நுழைந்து பணிகிறான்.)

வீரன்:—சலாம் செய்ரான் மஹாராஜ்! நவாப் அடில்ஷா தாக்கீது அனுப்பித்திருக்கிறார்.

(வணக்கத்துடன் பாதத் தடியில் வைத்து மும்முறை வணங்கித் தன்னிருப்பிடம் செல்கிறான்.)

பி.க:—(பிரித்துப்படிக்கிறார்]

"கலிங்காதிபதி கஜபதிராஜனுக்கு,

இப்பவும் கிருஷ்ண தேவன் வீரகேசரிபோல் பாய்ந்து வருகிறான். வெற்றியின் மேல் வெற்றி. குதுப்ஷா, பத்ரீஷா சொல்வதற்கே வெட்கமாயிருக்கிறது—நானும் முறியடிக்கப்பட்டோம். அவன் வரும் வேகத்தைப் பார்த்தால், கலிங்கத்தைச் சீக்கிரம் அடைந்து விடுவான் போல் தோன்றுகிறது. ஆதலின், முன் ஜாக்கிரதை உம் பெரும் படையைத் திரட்டி, அவனைப் புறங்காட்டி ஓடும்படிச் செய்யும். சிதறுண்ட எங்கள் சைனியத்தை ஒருங்கு சேர்ந்து உமக்கு உதவி புரியப் பின்தங்கோம் அவசரமென்பதாக நான் கூறவேண்டியதில்லை.

இப்படிக்கு

நவாப் அடில்ஷா"

(கோபத்துடன் கடிதத்தைக் கசக்கிக்கொண்டே) என்ன ஆச்சரியம்! உலகானுபவமறியாத இச்சிறுவனுக்கு இவ்வளவு துணிச்சலா? நவாப்புகளும் நாட்டை விட்டு ஓடினரா? கஜபதி சாமான்யத்தில் ஏமாறக்கூடியவன் அல்லன்; உன் கர்வத்தை ஓர் நொடியில் அடக்குகிறேன். கண்மணி, ஜகன்மோஹினி! நான் எதிர்பார்த்திருந்ததற்கு முன்னரே யுத்தம் ஆரம்பமாய் விடும் போலிருக்கிறது. ஆதலின், யுத்தமுஸ்திப்புகளைக் கவனிக்க வேண்டும். சென்று வரட்டுமா?

மு. வீ:—அரசே! ஒரு நிமிஷத் தாமதமும் ஆபத்தாக முடியும். தேவன் பொட்னூரி சிம்ஹாத்திரிவரை வந்து விட்டான். அந்த இடத்தை விடுவதற்கு முன்னரே நம் சைநியம் அவனை வளைத்துக் கொள்ளவேண்டும்.

(செல்கிறார்கள்.)

ஜ. மோ:—சரி; நாம் எதிர்பார்த்தபடி இரு தரப்பினரும் சந்திக்கும் காலம் நெருங்கி விட்டது. எப்படியாவது நாமும் ஒருவருக்கும் தெரியாது யுத்தரங்கத்தை அடைந்து சமாதானத்தை நிறுவப் பிரயத்தனஞ்செய்யவேண்டும். இப்பொழுதே புறப்பட்டுச் செல்கிறேன்.

(செல்கிறாள்.)

(தொடரும்.)

இருமடங்கு அழகு...

—தலைமயிரை வாரி விட்டிருப்பதால்

வாசனைத் தேங்காய் எண்ணெய்

உங்கள் தலைமயிர் அழகுடனில்லையா? அப்படியாயின் வாசனைத் தேங்காய் எண்ணெயைக்கொண்டு நன்கு தேயுங்கள்; மயிர்க்கால்களில் இரத்த ஓட்டம் பெருகும்., தலை மயிர் புதிய அழகுடன் விளங்கும்—ஆரோக்கியமாகவும் வளரும்.

கெட்டியான பிரிலியண்டைன்.

உங்கள் தலையும், மயிரும் மிகவும் வறண்டு கிடந்தால் 'டாம்கோ' கெட்டி பிரிலியண்டைனை உபயோகியுங்கள்; மினுமினுப்பு ஏற்படும். தலை "பிசுக்"காகாது

டாம்கோ விற்பனை இலாகா
19, A வாணியர் தெரு
மதராஸ்.

இதர டாம்கோ கூந்தல் தயாரிப்புகள்: ஜெய் கூந்தல் தைலம், லோஷன் & பிரிலியண்டைன், வாசனை மிகுந்த மருந்து பூர்வமான கூந்தல் டானிக், லைம்ஸ் & கிளிஸரின் முதலியன.

டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்., பம்பாய்.

(T H 409)

ஸ்தாபிதம் 1913

சவரன் மாத்து தங்கத்துக்கும், அல் வெள்ளி சாமான்களுக்கும், மேன்மையான வேலைப்பாட்டுக்கும் உத்திரவாதமுள்ள இடம்

கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்

நகை வியாபாரிகள்

175, சைனுபஜார் ரோட் — மதராஸ்.

காட்லாக்குக்கு எழுதவும்.

மழை கொட்டுகிறது!

குளிர் நடுக்குகிறது!

வீட்டுக்குள்ளேயே இருக்க முடியுமா?

முடியாது. நீங்கள் வேலைக்குப் போகவேண்டும் அல்லது கடையைக் கவனிக்கவேண்டும்.

ஆனால் மழை உங்களை நனைக்கிறது; குளிர் உங்களை நடுக்குகிறது—உங்கள் ஊக்கம் குறைகிறது. தேகத்தில் செழிப்பான சிவந்த இரத்தம் நிறைந்திருந்தால், நீங்கள் எதையும் எதிர்த்து நிற்கலாம். இவ்வகையில் சிறந்த இரத்த டானிக்

அமிர்தா

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

அல்லது

கேஸரி குடீரம், மதராஸ்.

புராதன சாஸ்திர ஆராய்ச்சியின் பேரில அனுபவம் பெற்ற இருவர் கலந்து தெளிவுபடக் கூறுவதாம்.

பண்டிட் M R K மூர்த்தி
ஜோதிஷ கலா வல்லபர்

பண்டிட் E S K. சுவாமி
ஜோதிஷ தத்வக்ஞானி

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 1. காரணமுடன் கேள்வி 1-க்கு ரூ. 1. ஒரு வருஷ மாதவாரி பலன் ரூ. 2 ஆயுள்வரை பொதுப்பலன் ரூ. 10 ஜாதகமாவது, பிறந்த நேரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

"ஜோதிட கழகம்" 14. பிராட்வே மதராஸ்

தேயிலே பானத்தால்



உங்களது தேகாரோக்கியத்தைப்
பாதுகாருங்கள்

நோயற்ற வாழவே குறைவற்ற செல்வம். இது சாதாரணமாக சொல்வதாயினும் எவ்வளவு உண்மை. நாட்தோறும் சில கோப்பை தேத்தண்ணீர் அருந்துவது ஒரு பெரிய செலவல்ல. அது செய்வது ஒரு வியாதிக்கு மருந்தாகவுமல்ல. இந்திய சீதோஷ்ணத்தின் கொடிய தாபத்தினின்றும் நீக்கி ஆரோககியத்தை அளிப்பதற்கு ஒரு ஸகாயமாகும். புஷ்டியானதும் சுறுசுறுப்பூட்டுவதுமான இநதிய தேயிலேயை அருந்துங்கள்.

தேத் தண்ணீர் செய்யு முறை

சுத்தமான தண்ணீரை சொதிக்க வை. ஈரமில்லாத பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீ ஸ்பூன் வீதமும் அதிகமாக ஒரு ஸ்பூனும் நல்ல இந்திய தேயிலேயை போட்டுகொதிக்கும் ஜலத்தை விடு 5 நிமிஷம் கழித்துவடிக்கட்டி பாலேயும் சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ளவும்.

இந்தியாவின் சந்தோஷமும், பெருமையும் – இந்திய தேயிலே

IK 40

Regd. No. 2514.

கீர்த்திபெற்ற தீர்க்க தரிசிகளின்
சரித்திரக்கொத்து.

சென்னை ஸம்ஸ்கிருத காலேஜ் உபாத்யாயராயிருந்த கிர்த்தனுசார்ய

ஸி. ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், பி. ஏ., எழுதியது

மேல்கண்ட ஏழு மத ஸ்தாபகர்களின் திவ்ய சரித்திரங்கள் வெளியாயிருக்கின்றன. சிறுவர் சிறுமியர் முதல் எல்லோரும் படித்துணருமாறு எளிய தமிழ் நடையில் எழுதப் பட்டிருக்கின்றன. தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் அவசியம் படிக்க வேண்டிய நூல்கள்.

1. ஸ்ரீ சங்கரர்
2. ஸ்ரீ ராமாநுஜர்
3. ஸ்ரீ மத்வர்
4. ஸ்ரீ குருநானக்
5. ஸ்ரீ மகாவீரர்
6. ஸ்ரீ கௌதமபுத்தர்
7. மகமத் நபி

ஒவ்வொரு புத்தகத்தின் விலை அணு 5

7 புத்தகங்களும் ஒரே புத்தகமாக காலிகோ கிலிட் பைண்டுள்ளது. விலை ரூபா 2-8.

மானேஜர்,

"சுதேசமித்திரன்" புத்தகசாலை,

சென்னை

Printed and Published by T. S. Visvanatha Iyer B. A. at the Swadesamitran Power Press, Mount Road, Madras—*Editor* C. R Srinivasan